# உதயன்



23

www.onlineuthayan.com

32: பக்கங்கள் சுடர் 27 கதிர் 326 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 01 புதன்கிழமை (17/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00


## யாழ். நகரில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 17

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பி.வசந்தகுமார் தாக்கப்பட்டதைக் கண்டித்து இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பிரதேச சபைகளின் தலைவர்கள், உபதலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## மின்னல் தாக்கி கடற்படை சிப்பாய் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 17

இடிமின்னலின் போது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்த கடற்படைச் சிப்பாய் மின்னல் தாக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நெடுந்தீவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் கொழும்பு பாலுக்

பார்க்க பக்கம் 4

### 13 ஆவது திருத்தத்தை அகற்றுவதா?

# கோத்தபாயவை எதிர்த்து அமைச்சர் வாசு கருத்து

### பாதுகாப்பு செயலர் சொன்னது பயங்கரமானது எனவும் வர்ணிப்பு



கொழும்பு, ஒக்ரோபர்17

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருப்பதானது மிகவும் பயங்கரமான – பாரதூரமான அறிவிப்பாகும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளார் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் தேசியமொழிகள் மற்றும் சமூக நல்லிணக்கத்துக்கான அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

13 ஆவது அரசமைப்புத் திருத்தம் இல்லாதொழிக்கப்படவேண்டும் எனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், 13 ஆவது திருத்தச் சட்டமும், 2002 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த உடன்பாடும் ஒரே வகையானவை என்றும் அவர் அதில் கூறியுள்ளார்.

பார்க்க பக்கம் 4

**2** படையினருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்ட மனுவை விசாரணை செய்த நீதிவான் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

**6** முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலே சுமார் 875 ஏக்கர் நிலப்பரப்பு இன்றுவரை இராணுவத்தினரின் பிடியில் உள்ளதுடன், பல வர்த்தக நிலையக் கட்டடங்களும் படையினரின் பயன்பாட்டிலேயே உள்ளன.

**8** அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்த இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படக்கூடாது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

**9** பிலிப்பைன்ஸ் அரசுக்கும், முஸ்லிம் போராட்டக்காரர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதன் மூலம் 4 தசாப்த போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

## தெரிவுக்குழு பொய்யானது நிரூபித்தது கோத்தா கூற்று

### நிலைமை இவ்வாறிருக்க நாமும் கூட்டமைப்பும் எப்படி அதில் பங்கேற்பது? ஐ.தே.க. கேள்வி

கொழும்பு, ஒக்.17

"தீர்வு விடயத்தில் அரசின் உள்மனதில் இருக்கும் நிலைப்பாட்டையே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிப்படுத்தியுள்ளார். எனவே 13 ஆவது திருத்தத்தையே வழங்கத் தயாரில்லாத இந்த அரசை நம்பி கூட்டமைப்பும், நாமும் எந்த அடிப்படையில் தெரிவுக்குழுவுக்குச் செல்வது?"

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவரும் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல.

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும் என பாதுகாப்புச்

பார்க்க பக்கம் 4

## அகதிகள் குறித்துஆராய்வதற்கு ஆஸி. பிரதிநிதிகள் வருகை

கொழும்பு, ஒக். 17

ஆஸ்திரேலிய எதிர்க்கட்சியின் இரண்டு விசேட பிரதிநிதிகள் இலங்கைக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் இருந்து அகதிகள் ஆஸ்திரேலியாவுக்குப் பயணிப்பதைத் தடுப்

பார்க்க பக்கம் 4

## சமுர்த்தி அதிகாரிகளை இன்று ஆர்ப்பாட்டம் செய்ய உத்தரவு

### கொழும்பிலிருந்து வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.17

'திவிநெகும' சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி யாழ். நகரில் இன்றைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்துமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு சமுர்த்தி ஊழியர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

சமுர்த்தி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த கவனவீர்ப்புப் போரட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ். மணிக்கூட்டு கோபுர முன்றிலில் இடம்பெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நேரடி அறிவுறுத்தலின் பிரகாரம் இந்த ஆர்ப்பாட்டம் ஒழுங்கு செய்

பார்க்க பக்கம் 4

## இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கிறது இந்தியா

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 17

13ஆவது அரசமைப்புத் திருத்தம் மாகாணசபைகளுக்கு வழங்கியுள்ள அதிகாரங்களைப் பறிக்கும் 'திவிநெகும' சட்டவரைவு தொடர்பான நிலைமைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருவதாக, தமிழ்த்

பார்க்க பக்கம் 4

## சாதாரணதர பரீட்சை டிசெம்பர் 11 இல்

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் மாதம் 11 ஆம் திகதி ஆரம்

பார்க்க பக்கம் 4

## நன்றி கெட்டவர் பொன்சேகா

### ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக் 17

சரத் பொன்சேகா ஒரு நன்றி கெட்டவர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

கொழும்பில் நாளை

பார்க்க பக்கம் 4

## சூளைமேடு கொலை வழக்கு நாளை வருகிறது தீர்ப்பு

சென்னை,ஒக் 17

தமிழகத்தின் சூளைமேடு என்ற பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றில் குற்றஞ்சாட்டப்பட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராகச் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகள் நிறைவு பெற்ற நிலையில் தீர்ப்பு நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

சென்னை சூளைமேட்டில் நடந்த கொலை தொடர்பில் டக்ளஸ் தேவானந்தா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து தமிழகப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட டக்ளஸ் தேவானந்தா பின்னர் நீதிமன்றத்

பார்க்க பக்கம் 4

### முல்லைத்தீவில் மக்கள் மீள்குடியமர்ந்த

## மந்துவில் வீட்டு வளவில் பெருமளவு வெடிபொருள்

வவுனியா, ஒக்.17

புதுக்குடியிருப்பு மந்துவில் கிராமத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட வளவொன்றிலிருந்து பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு குடியமர்த்தப்பட்ட மக்கள் தறப்பாளால் மூடப்பட்ட தற்காலிகக் குடிசைகளிலேயே தங்கியுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் குடும்பமொன்று தமது குடிசை அமைந்துள்ள காணியைத் துப்புரவு செய்யும்

பார்க்க பக்கம் 4


இலங்கையின் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு

இன்னும் 3 தினங்களில்

"ESOFT Metro Campus"

HND ற்கான

பதிவுகளை மேற்கொண்டு Laptop ஒன்றினை பெற்றிடுங்கள்

ESOFT

The Leader in Professional ICT Education

யாழ் நகரில்

அதி நவீன வசதிகளுடன்

NO. 137, K.K.S Road, Jaffna ( HSBC ... ) 077 990 5611

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27,715 மில்லியன் ரூபா செலவில் யாழில் அபிவிருத்திப் பணிகள்

## 13 துறைகள் ஊடாக முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாவட்டத்தில் 13 துறைகளின் கீழ் 27ஆயிரத்து 715.66 மில்லியன் ரூபாவுக்கு அபிவிருத்திச் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக யாழ். மாவட்ட செயலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாயத்துறையில் 332.43 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு 2 ஆயிரத்து 252.29 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், சுகாதாரத்துறைக்கு 215.13 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும்,

**விசேட திட்டங்களான கெயார், பி.ஆர்.பி. ஊடாக 2 ஆயிரத்து 698.13 மில்லியன் பெறுமதியான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

மின்சார சபையில் 450.65 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களும், கல்வித் திணைங்களங்களில் 562.27 மில்லியன் பெறுமதியான வேலைத் திட்டங்களும் வர்த்தக மற்றும் முதலீட்டு துறையினால் 289.76 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும் வீடமைப்புக்கு 190.4 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், போக்குவரத்துத்துறையில் 19 ஆயிரத்து 642.92 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், உள்ளூராட்சி சபைகளில் 769.96 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்களும்,

சமுர்த்தி அதிகார சபையில் 36.9 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், அனர்த்த முகாமைத்துவ பிரிவில் 32.32 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத் திட்டங்களும், மாவட்ட நிர்வாகத்துக்காக 242.5 மில்லியன் ரூபாவும்,

விசேட திட்டங்களான கெயார், பி.ஆர்.பி. ஊடாக 2 ஆயிரத்து 698.13 மில்லியன் பெறுமதியான வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 30ஆம் திகதி வரையான வேலைத்திட்டங்களே மாவட்ட செயலக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(10-5)

# வடக்கில் காணிகளை பகிர்ந்தளிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஒக்.17

வடமாகாணத்தில் காணிக் கச்சேரி நடத்திக் காணிகளைப் பகிர்ந்தளிப்பதற்கான அனுமதி காணி அமைச்சரிடமிருந்து கிடைக்கப் பெற்றிருப்பதாக வடமாகாணக் காணி ஆணையாளர் தெரிவித்தார்.

இதன்மூலம் வடமாகாணத்திலுள்ள காணியற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருந்ததாவது :-

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு விசேடமாக விடுவிக்கப்பட்ட காணி தொடர்பான சுற்றறிக்கையைக் காணி அபிவிருத்தி அமைச்சு நீதிமன்றில் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து காணிச் சட்டங்களுக்கு அமைவான வேலைத் திட்டங்களை வடமாகாண காணித் திணைக்களம் மேற்கொள்ளவுள்ளது.

காணியற்றவர்களின் பிரச்சினைக்குத் தீர்வை காணும் பொருட்டு வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் காணிக் கச்சேரி நடத்துவதற்கான அனுமதி காணி அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

காணியற்று இருப்பவர்களுக்கும், அரச காணியில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்களுக்கும் காணிக் கச்சேரி ஊடாக காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் காணிக் கச்சேரி நடத்தப்படவுள்ளது. காணியற்றோர் இது தொடர்பில் பிரதேச செயலகங்களினூடாக தமது பதிவுகளை மேற்கொண்டு, அரச காணிகள் பிரதேச செயலரினால் இனங்கண்ட பின்னர் அவை காணிக் கச்சேரி நடத்திப் பகிர்ந்தளிக்கப்படும்.

குடியிருப்பதற்கு, விவசாய தேவைக்கு, வர்த்தகத் தேவைக்கு என்று காணிகளைப் பெற முடியும். ஒருவருக்கு ஓர் இடத்தில் காணி இருக்குமாக இருந்தால் அவருக்கு காணிக் கச்சேரி ஊடாக வேறு இடத்தில் பகிர்ந்தளிக்கப்படமாட்டாது -என்றார்.(த-5)

# இராணுவத்துக்கு எதிரான மனுவை விசாரித்த யாழ். நீதிவான் இடமாற்றம்

## அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்

படையினருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்ட மனுவை விசாரணை செய்த நீதிவான் ஒருவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம்தகவல்வெளியிட்டுள்ளது.

படையினருக்கு எதிராக மனித உரிமை மீறல் வழக்கு விசாரணை நடத்திய ஸ்ரீநிதி நந்தசேகரன் என்ற யாழ்ப்பாண மேலதிக நீதிவானே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபர்ட் ஓ பிளேக்கினால் இந்தத் தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை மேற்கொண்ட நீதிவான் இடமாற்றம் செய்யப்பட்டமை, குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்கப்படாத நிலைமை நீடிப்பதனைப் பறைசாற்றுவதாக பிளேக் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஸ்ரீநிதி நந்தசேகரன் 2003ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையில் யாழ்ப்பாண மேலதிக நீதவானாக கடமையாற்றினார்.

1996, 1997ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 30 பேர் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை, யாழ்ப்பாண மனித உரிமைச் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜிம் பிறவுண் காணாமற்போனமை ஆகிய வழக்குகளை நீதிவான் ஸ்ரீநிதி விசாரித்து வந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஸ்ரீநிதி இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த வழக்கு விசாரணைகள் ஸ்தம்பித நிலையை அடைந்தன.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் பிளேக்குடன் கலந்துரையாடியதன் பின்னரே ஸ்ரீநிதி பதவிக் குறைப்புடன் இடமாற்றம் செய்யப்பட்டார் என விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பில் வழக்கு விசாரணை நடத்தி வந்த நீதிவான் ஸ்ரீநிதிக்கு, சிவில் வழக்கு விசாரணைகள் ஒப்படைக்கப்பட்டது. (த)

# படையினரின் காணி அபகரிப்பு குறித்து அரச தமிழ் எம்.பிக்கள் இரட்டை வேடம்

யாழ்ப்பாணம், ஒக்.17

அரசில் அங்கம் வகிக்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் படையினரின் காணி அபகரிப்புத் தொடர்பான விடயங்களில் இரட்டை வேடம் போடுகின்றனரா என்று தமிழ் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் காணி சுவீகரிப்பு விடயங்களுக்கு மௌனமாக இருந்து கொண்டு, மறுபுறத்தில் இராணுவத்தினருக்குக் காணிகள் வழங்குவதில் தங்களுக்கும் சந்தேகமில்லையென்று இரட்டைவேடம் போடுகின்றனர்.

2010ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி பெரும்பான்மையினச் சிங்கள மக்கள், மீளக்குடியேறுவதற்கு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தனர். இதன்போது ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார்,

எந்த இன மக்களும் இந்த நாட்டில் எந்தப் பகுதியிலும் வாழலாம் இதற்குக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. இன்றைய யாழ்ப்பாணச் சூழ்நிலையில் காணிகளைப் பகிர்ந்தளிக்கின்ற அளவுக்கு அரச காணிகள் எதுவுமில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, தேசிய பாதுகாப்புக் கருதி இராணுவத்தினரின் தேவைக்காக அரச காணிகள் பெறப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இதன்போது இந்தக் கூட்டத்திலிருந்த அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரச காணிகள் தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை. அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், எந்தக் காணிகளையும் இராணுவத்துக்கு வழங்கக் கூடாதென்று தெரிவித்த பின்னர் தாமும் அதே விருப்பத்துடன் இருப்பதாக சந்திரகுமார் குறிப்பிட்டிருந்தார்.

முன்பு அரச காணிகள் இல்லையென்று சொன்னார். ஆளுநர் அரச காணி இராணுவத்துக்குப் பெறப்படும் என்று தெரிவிக்கும்போது ஏன் பேசாமல் இருந்தார் என்று கேள்வியெழுப்பிய பொதுமக்கள் அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைவேடம் போடுகின்றனரா எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

(த)

### பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான இருவரது

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஆதாரமற்றதாக நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 17

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும் போராட்டத்துக்கு உதவியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு பங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இருவரது குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் யாழ். மேல்நீதிமன்றினால் நேற்றுமுன்தினம் நிராகரிக்கப்பட்டன.

இந்த வழக்குகள் யாழ். மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தன.

1987ஆம் ஆண்டு காலப் பகுதியில் தெல்லிப்பழை வீமன்காமம் பகுதியைச் சேர்ந்த இரத்தினம் ரவிசங்கர் என்பவர் விடுதலைப்புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாகக் குற்றஞ்சாட்டி வவுனியா ஓமந்தைச் சோதனைச் சாவடியில் வைத்து 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி, பளை, தம்பகாமம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ரவிக்குமார், 2000ஆம் ஆண்டு காலப் பகுதியில் இராணுவத்தினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்துக்கு போராயுதங்களை விநியோகித்ததாகவும், உணவு வழங்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. 2009ஆம் ஆண்டு மே மாதம் 10ஆம் திகதி பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த இருவருக்கும் எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

நேற்றுமுன்தினம் இது தொடர்பான விசாரணை முடிவில், அவர்கள் வழங்கியதாகத் தெரிவித்து நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டது.

அந்த இருவரும் தமது வாக்குமூலங்களை, சுயமாக விரும்பி எவ்வித நிர்ப்பந்தமும் இல்லாமல் வழங்கியதாக முடிவுக்கு வரமுடியாததால் அவற்றை நிராகரித்தார் ஆணையாளர்.

இருவருக்கும் எதிரான வேறு ஆதாரங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பிலும் மற்றும் ஆலோசனைக்காகவும் இந்த வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(10-4)

# முகாமைத்துவ மேம்பாட்டு செயலமர்வு ஹபரணையில்

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினருக்கு அவர்களது இயலுமையை மேம்படுத்தும் செயலமர்வு எதிர்வரும் 19ஆம், 20 ஆம் திகதிகளில் ஹபரணையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட சகல உயர் அதிகாரிகளையும் உள்ளடக்கியதாக அனர்த்த முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மாவட்டங்களுக்கும் இந்தச் செயலமர்வு தனித்தனியாக ஹபரணையில் இடம்பெற்று வருகிறது. அதனடிப்படையிலேயே யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவினருக்குமான செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

(10-5)

# கோதுமை மாவின் விலை ஐந்து ரூபாவால் உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

யாழ். மாவட்டத்தில் பிறிமா கோதுமை மாவின் விலை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த பிறிமா கோதுமை மா நேற்றுமுன்தினம் முதல் 85 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் கடைகள் என்பன நேற்று முன்தினம் முதல் கோதுமை மாவின் விலையை உயர்த்தியுள்ளன.

பிறிமா நிறுவனம் கோதுமை மா விநியோகஸ்தர்களுக்கு வழங்கி வந்த மானியம் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அதனாலேயே இந்த விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பிறிமா நிறுவனத்தின் வடக்கு மாகாண விநியோக முகாமையாளர் எஸ். கிருபா தெரிவித்தார்.

**ஒரு கிலோ 80 ரூபாவாக விற்பனையான பிறிமா கோதுமை மா 85ரூபாவாக விற்பனை செய்யப் படுகிறது.**

அத்துடன் பாண் உற்பத்திக்குப் பயன் படுத்தப்படும் பேக்கரி மாவின் விலையும் இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ்.நகரப் பகுதியில் உள்ள தனியார் கடைகளிலும், சில கூட்டுறவுச் சங்கங்களிலும் இந்த விலை அதிகரிப்பு உடனடியாகவே மேற்கொள்ளப்பட்டது.

கூட்டுறவுச்சங்கங்களில் சில சங்கங்கள் மூன்று ரூபாவினாலும் வேறு சில சங்கங்கள் 4 ரூபாவினாலும் மாவின் விலையை நேற்று அதிகரித்திருந்தன. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருள் அகற்றாமையை காரணம் கூறி பயிர்ச்செய்கை நிலங்களை விடுவிக்க பின்னடிப்பு

## மீளக்குடியமர்ந்த முல்லைத்தீவு மக்கள் வறிய நிலையில் அல்லல்

முல்லைத்தீவு, ஒக்.17

போர் முடிந்து 3 வருடங்களாகி விட்டபோதும் முல்லைத்தீவு தண்ணி முறிப்புக்குளத்தின் கீழான சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் வெடி பொருள் அச்சம் காரணமாக பயிர்ச் செய்கைக்கு அனுமதி வழங்கப்பட வில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் உள்ள ஒன்று தொடக்கம் ஏழு வரையான கண்டங்களை உள்ளடக்கிய சுமார் ஆயிரத்து 200 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த ஆண்டுக்கான கால போக நெற் செய்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. குறித்த பகுதிகளில் வெடிபொருள்கள் அகற்றப்படாமல் உள்ளதாகவும், இவை அகற்றப்பட்டதும் பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்கப்படும் எனவும் முன்னர் கூறப்பட்டது.

ஆனால் இதுவரை எதுவுமே இடம்பெறாததால் இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்த சுமார் 500 குடும்பங்கள் தமது வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியாத அவல நிலையில் உள்ளன.

இவர்களின் முக்கிய தொழில் ஆதாரமாக விவசாயச் செய்கையே விளங்குகின்றது. இதன் மூலம் தமது உணவுத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் இவர்கள் பூர்த்தி செய்து வந்தனர்.

ஆனால் வெடிபொருள்கள் அகற்றப்படாமையைக் காரணம் காட்டி பயிர் நிலங்கள் விடுவிக்கப்படாமையால் மீளக்குடியமர்ந்த மக்கள் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு கூலி வேலைகளுக்குச் செல்வதற்கும் இவர்கள் முன்வந்துள்ள போதிலும் தொழில்கள் எதுவும் இவர்களுக்குக் கிடைக்கவில்லை.

இதனால் மேன்மேலும் வறிய நிலைக்கே இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

இதனால் விரைவில் தமது பயிர்ச் செய்கைக் காணிகளில் காணப்படும் வெடிபொருள்களை அகற்றுமாறும், தமது பயிர்ச் செய்கைக்கான அனுமதியை வழங்குமாறும் இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# நெடுங்கேணி கூட்டுறவாளர்களால் மாணவர்களுக்கு கௌரவம்



நெடுங்கேணி, ஒக்.17

நெடுங்கேணி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் கடந்த ஆண்டுக்கான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான நிகழ்வு அண்மையில் சங்கத்தின் தலைவர் இ.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியா வடக்கு பிரதேச செயலர் க.பரந்தாமன், வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கு.இரவீந்திரநாதன், கூட்டுறவு அலுவலர் கு.உதயகுமார், சங்கத்தின் பொது முகாமையாளர் கி.செந்தில்செல்வன் ஆகியோர் சித்திபெற்ற மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கி அவர்களைக் கௌரவித்தனர்.

நெடுங்கேணி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் இந்தப் பகுதியின் கல்வி வளர்ச்சியில் அக்கறைகொண்டு பல்வேறு உதவிகளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வவுனியா நூலகத்தால் போட்டிகள்

வவுனியா, ஒக்.17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, வவுனியா பொது நூலகத்தினால் வாசகர்களுக்கிடையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. கட்டுரை, சிறுகதை, குறுக்கெழுத்துப் போட்டி, சிறுவர்களுக்கான நிறந்தீட்டல் போன்றவையே நடத்தப்படவுள்ளன.


6 - 8 வயது வரையான சிறுவர்களுக்கு நிறந்தீட்டல் போட்டிகளும், 9-14 வயது வரையானவர்களுக்கு குறுக்கெழுத்துப் போட்டியும் 15-18 வயதுக்குட்பட்டவர்களுக்கு ''வாசிக்க மறுப்பவன் யோசிக்க மறுக்கிறான்'' என்ற தலைப்பில் 250 சொற்களுக்கு குறையாமல் சிறுகதைப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

மேலும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு எதிர் காலத்தில் வாசிப்பு என்ற தலைப்பிலான கவிதைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. கவிதைப் போட்டியில் புதுக்கவிதையாயின் 40 வரிகளும் மரபுக் கவிதையாயினும் 40 வரிகளும் இடம்பெற வேண்டும்.

இவற்றுள் நிறந் தீட்டல் மற்றும் குறுக்கெழுத்துப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா பொது நூலக சிறுவர் பகுதியில் இடம்பெறவுள்ளன.

இதேவேளை ஏனைய போட்டிகளுக்கான ஆக்கங்கள் அனைத்தையும் எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு முன்பாக பொது நூலகத்தில் ஒப்படைக்குமாறு பிரதம நூலகர் திருமதி உ.பாமினி கேட்டுள்ளார். (க-400)

## இயற்கையே துணை...



*தற்போது பெய்து வரும் மழையைத் தொடர்ந்து துணுக்காய் அம்பலப்பெருமாள்குளத்தில் எருதுகளின் உதவியுடன் தமது வயல் நிலத்தை விவசாயி ஒருவர் உழுது பண்படுத்துகின்றார். (க-18)*

# முக்கிய நூல்களுக்கு பற்றாக்குறை சிங்கள புத்தகங்கள் தாராளம்

## முல்லை வலய அதிபர்கள் விசனம்

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய அத்தியாவசிய நூல்கள் வழங்கப்படாது இரண்டாம் மொழிக்குரிய நூல்கள் வழங்கப்படுவது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு வலயப் பாடசாலைக்கான அடுத்த ஆண்டுக்குரிய இலவச பாட நூல்கள் வந்துசேர்ந்துள்ளன. புதுக்குடியிருப்பு கோட்டப் பாடசாலைக்குரிய பாடநூல்கள் வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலையில் வைத்து விநியோகிக்கப்படுவதாகவும் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய தொகுதிப் பாடங்களுக்குரிய புத்தகங்கள் எவையும் முழுமையாக கிடைக்கவில்லை எனவும் இரண்டாம் மொழி சிங்களப் பாடநூல் போதியளவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களுக்கான அவசியமான நூல்களை வழங்காமல், இரண்டாம் மொழிக்குரிய நூல்களை வழங்குவதால் என்ன பிரயோசனம் என நூல்களைப் பெற வந்த அதிபர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (க-410)

# வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்ளாததால் எமது வரலாறுகள் மறைக்கப்படுகின்றன

## தமிழ்நேசன் அடிகளார் ஆதங்கம் வெளியிடுகிறார்

மன்னார், ஒக்.17

வரலாற்றுப் பதிவுகளை மேற்கொள்வதில் அக்கறை செலுத்தாமையால் இன்று எமது வரலாறுகள் மறைக்கப்படுகின்றன.

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் மன்னார் தமிழ்ச் சங்கம், சர்வமத அமைப்பு ஆகியவற்றின் தலைவரும் கலையருவி அமைப்பின் இயக்குநருமான தமிழ்நேசன் அடிகளார்.

அண்மையில் மன்னார் முருங்கனில் இடம்பெற்ற கலைஞர் குழந்தையின் கலைப்பணி நயப்பு மலரான 'கலைத்தவசி' என்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த ஒப்பற்ற தமிழ் இலக்கியமாகிய திருக்குறள் பெற்ற முக்கியத்துவத்தை திருவள்ளுவர் பெறவில்லை. திருவள்ளுவர் எத்தனையோ விடயங்களைப்பற்றி எவ்வளவோ எழுதிவைத்தார். ஆனால் தன்னைப்பற்றி எதையுமே அவர் எழுதிவைக்கவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த மற்றவர்களும் திருவள்ளுவரைப்பற்றி எந்தக் குறிப்பையும் எழுதிவைக்கவில்லை.

இதனால் திருவள்ளுவரைப்பற்றிய ஒருசில கட்டுக்கதைகள் தான் ஆங்காங்கே உள்ளன. இந்த நிலைமைதான் பெரும்பாலான புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்களுக்கு ஏற்பட்டுள்ளன. கலைஞர் செபமாலை குழந்தையினது வாழ்வையும், பணியையும் பதிவுகளாக்க வேண்டும் என்று எடுக்கப்பட்ட இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை தமிழ் கலை இலக்கிய வரலாற்றுப் பின்புலத்திலிருந்து நோக்கினால்தான் புரிந்து கொள்ள முடியும்.

எனவே இன்று நம் மத்தியில் வாழும் கலைஞர்கள், புலவர்கள், விற்பன்னர்கள், ஆற்றல் வாய்ந்தவர்கள் போன்றோரின் வாழ்வையும் பணியையும் பதிவுசெய்வது, ஆவணப்படுத்துவது காலத்தின் கட்டாய தேவையாகும் என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

காலம் தன் கடமையைச் சரிவரச்செய்து கொண்டிருக்கின்றது. இலட்சிய வேட்கையோடு இடையறாது இயங்கிக்கொண்டிருந்த பலர் காலத்தின் கட்டளைக்குப் பணிந்து சாய்வு நாற்காலிகளில் ஓய்ந்துகிடக்கின்றார்கள். கலைஞர் குழந்தையும் அந்த வரிசையில் இணைந்து விட்டார் என்றார் அவர்.

முருங்கனைச் சேர்ந்த கலைஞர் செபமாலை குழந்தை அவர்களின் கலையுலக வாழ்வைப் பற்றி, அவரின் பணிகளைப்பற்றி அவரை அறிந்த பேராசிரியர்கள், கல்விமான்கள், கலையுலக நண்பர்கள், சகபாடிகள், உறவினர்கள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டுரைகள், அனுபவப் பகிர்வுகள் போன்றவற்றை உள்ளடக்கி அவருடைய மகன் அருட்திரு. அன்புராசா அவர்கள் கலைத்தவசி என்ற பெயரில் 300 பக்கங்களைக் கொண்ட நூலொன்றை வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூலில் 100 பேர் வரை எழுதியுள்ளார்கள்.

இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு பேராசிரியர் அ.சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் விக்ரர் பிலேந்திரன் அடிகளார், மொனராகலை மாவட்ட அரச அதிபர் பத்திநாதன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எம். சியான் மற்றும் மன்னாரைச் சேர்ந்த அரச உயர் அதிகாரிகள், கலையுலகைச் சார்ந்தவர்கள் எனப் பலர் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)



# கண்காட்சியும் சஞ்சிகை வெளியீடும்

வவுனியா வீரபுரம் மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் இடம்பெற்ற உளநல தின விழாவில் மாணவர்களின் கண்காட்சியும் கையெழுத்து சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றுள்ளன.

பாடசாலையின் அதிபர் எஸ்.சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் ஆறு.சுபாஸ்கரன் விருந்தினராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் வரவேற்புரையை முதன்மை உளநல துணையாளர் திருமதி சுசீலா ஆற்ற சிறப்புரையை பிரதம விருந்தினர் நிகழ்த்தினார்.

மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ''சகபாடிகளும் நாங்களும்'' என்ற கையெழுத்துச் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. மேலும் மாணவர்களின் கண்காட்சியும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ம-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் - பலஸ்தீனப் பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்படவேண்டும்

## மீண்டும் கோருகிறார் பாலித

கொழும்பு,ஒக் 17

இஸ்ரேலுக்கும் - பலஸ்தீனத்துக்கும் இடையில் காணப்படுகின்ற நீண்டகால முரண்பாடுகள் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது என்று, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி பாலித கோஹென மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே அவர் இது தொடர்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் இடம்பெற்ற மத்திய கிழக்கு நிலைமை தொடர்பிலான கருத்தாடலின் போது பாலித கோஹென மீண்டும் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையில் நீண்டகாலமாகப் பிரச்சினை காணப்படுகிறது. இதுவே மத்திய கிழக்கின் பதற்ற நிலைக்கு முக்கிய காரணம்.

எனவே மத்திய கிழக்கு நாடுகளில் சமாதானமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமாக இருந்தால், முதலில் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கு இடையிலான முறுகல் நிலை தீர்க்கப்பட வேண்டும் என்று பாலித கோஹென சுட்டிக் காட்டியுள்ளார். (த)

# புலிகளால் சுடப்பட்ட விமானத்தை மீட்க இன்னும் அனுமதி இல்லை

## கடற்படைப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஒக்.17

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'லயன் எயார்' விமானம் உரிய அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் மீட்டெடுக்கப்படும் எனக் கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

இரணதீவுக்கு அருகாமையில் உள்ள கடற்பரப்பில் குறித்த விமானம் மூழ்கியுள்ளது. 1998ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி பலாலியிலிருந்து ரத்மலானை நோக்கிப் பயணித்த 'லயன் எயார்' அன்ரனோவ் விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

இந்த விமானத்தில் பயணித்த 50 பேர் கொல்லப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய கடற்படைச் சுழியோடிகள் விமானப் பாகங்களைக் கண்டு பிடித்துள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சிடமிருந்து உரிய அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் இடிபாடுகளை மீட்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.(த)

## முதல் விமானம் நேற்று தரையிறக்கம்

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான அம்பாந்தோட்டை மத்தல விமான நிலையத்தில் நேற்று முதலாவது பரீட்சார்த்த விமானம் தரையிறக்கப்பட்டுள்ளது.

குறித்த விமான நிலையத்தின் பயணக் கட்டுப்பாட்டு உபகரணங்களைப் பொருத்துவதற்காகவே இந்த பரீட்சார்த்த விமானம் தரையிறக்கப்பட்டதாக மத்தல விமான நிலைய உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## மைத்திரிபாலவின் சகோதரருக்கு விளக்கமறியல்

கொழும்பு,ஒக் 17

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான பிரியந்த சிறிசேனவை இம்மாதம் 30ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலன்னறுவை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வனவிலங்கு திணைக்கள அதிகாரிகளின் செயற்பாட்டுக்குக் கடந்த 5ஆம் திகதி குந்தகம் விளைவித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில் அவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்தே, பொலிஸார் அவரை நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தினர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சருமான பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (த)

## சாதாரண...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பமாகிறது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாடுமுழுவதும் 11ஆம் திகதி ஆரம்பமாகும் இப்பரீட்சை 21 ஆம் திகதி வரை இடம்பெறும் என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பருத்தித்துறை இ.போ.ச ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

புதுடில்லி,ஒக் 17

சம்பளம் உரிய காலத்தில் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பருத்தித்துறை இ.போ.ச. ஊழியர்கள் இன்று காலை 6 மணிதொடக்கம் 4 மணி வரை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 8ஆம் திகதி வழங்கப்பட வேண்டிய சம்பளம் இதுவரை வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே தாம் இந்த பணி நிறுத்தத்தை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (10-8)

## மின்னல் தாக்கி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கையைச் சேர்ந்த எம்.ஏ.ரசினு (வயது -27) என்ற நெடுந்தீவுக் கடற்படைப் பிரிவில் பணியாற்றிய சிப்பாயே இவ்வாறு உயிரிழந்தார். அவரது சடலம் வேலணை வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-4-5-17)

## கோத்தபாயவை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாதுகாப்புச் செயலர் கோத்தபாயவின் இந்தக் கூற்றுக்கு தமிழ்க் கட்சிகள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. எனினும், ஜாதிக ஹெல உறுமய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் ஆகிய பௌத்த மேலாதிக்க அமைப்புகள் அவரின் கூற்றை வரவேற்றுள்ளன.

இந்நிலையில், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் கருத்துக் கேட்டபோது,

''பாதுகாப்புச் செயலாளரின் கருத்து மிகவும் பயங்கரமானதொரு அறிவிப்பாகும் என்பதை மட்டுமே என்னால் சொல்லமுடியும். இந்த ஒரு வார்த்தையில் அனைத்துப் பதில்களும் உள்ளன. இதற்குமேல் சொல்வதற்கு ஒன்றுமில்லை'' என்று குறிப்பிட்டார்.

## சூளைமேடு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தால் பிணையில் செல்ல அனுமதிக்கபட்டிருந்த அவர் நிலையில் தமிழகத்தை விட்டு இலங்கை வந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கு தொடர்பாக கடந்த 1994 ஆம் ஆண்டு நீதிமன்றம் டக்ளஸுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்தது. அதனை விலக்கிக் கொள்ளுமாறு கோரியும், நேரில் முன்னிலையாக விலக்கு அளிக்கக் கோரியும் டக்ளஸ் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை மற்றும் வழக்கு தொடர்பான வாதம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

ஆயினும் வழக்கின் தீர்ப்பு நாளை வியாழக்கிழமை வழங்கப்படும் எனச் சென்னை உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது. (த)

## நன்றி கெட்டவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

நடைபெறவுள்ள ஜனநாயக தேசிய முன்னணியின் பேரணிக்கு, சரத் பொன்சேகா ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் பலரை இணைத்துக் கொண்டுள்ளார்.

இந்த பேரணியில் ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் பங்குக் கட்சியான ஜே.வி.பியோ, அல்லது ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் செயலாளர் விஜித ஹேரத்தோ கலந்து கொள்ளப் போவதில்லை என்று ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சரத் பொன்சேகா ஜே.வி.பியினரை அழைத்துக் கொள்ள முயற்சிக்காமல், ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை இலக்கு வைத்தே செயற்படுகிறார்.

இது கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி வழங்கிய ஆதரவுக்கு அவர் காட்டும் நன்றி விசுவாசமா என்று திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். (த)

## இலங்கையை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய அவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதுடில்லிப் பயணம் தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

இலங்கை அரசுடனான பேச்சுக்கள் தடைப்பட்டதற்கான காரணங்களை இந்தியத் தலைவர்களுக்கு எடுத்து விளக்கியுள்ளோம்.இருதரப்புப் பேச்சுக்களைத் தொடர இலங்கை அரசு சம்மதித்தால் மட்டுமே, நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்றுவோம்.

இந்தப் பேச்சுக்களில் எட்டப்படும் உடன்பாடுகளைத் தெரிவுக்குழுவின் முன் கொண்டு போகலாம்.

இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்குப் பதிலாக, அதிகாரங்களைப் பறித்தெடுத்துக் கொள்ளும் எதிர்மாறான வேலையையே செய்கிறது என்பதை, 'திவிநெகும' சட்டவரைவை உதாரணம் காட்டி விளக்கினோம்.

இந்தியா இந்த சட்டவரைவு குறித்து ஏற்கனவே அறிந்து வைத்துள்ளது.

13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. என்று கூறினார். (த)

## மந்துவில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பணியில் ஈடுபட்டனர். அப்போது பற்றைக்கு வைக்கப்பட்ட நெருப்புக்குள்ளிருந்து வெடியோசை கேட்டது - அத்துடன் புல்லை வெட்டும்போது மிதிவெடியொன்றும் வெளியே தெரிந்தது. இதனால் அச்சமடைந்த அந்தக் குடும்பத்தினர் இது தொடர்பாக அருகிலுள்ள இராணுவத்தினருக்குத் தகவல் வழங்கினர். உடனடியாக அங்கு வந்த இராணுவத்தினர் அந்தக் குடும்பத்தினரை வெளியே செல்ல வேண்டாமெனக் கூறிச் சென்றனர்.

நேற்றுக் காலை மீண்டும் அங்கு வந்த இராணுவத்தினர் அந்த வளவுக்குள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது பட்ட மரமொன்றைச் சுற்றி ஏராளமான மிதிவெடிகள் காணப்பட்டன. வேறு சில இடங்களிலும் இவை காணப்பட்டன. இவற்றை ஒரு உரப்பை நிறைய இராணுவத்தினர் சேகரித்துச் சென்றனர்.

மேலும் ஒரு ஷெல் குண்டு, நான்கு கிரனைட் குண்டுகள் என்பனவும் அங்கு மீட்கப்பட்டன.

இவை மீட்கப்பட்டது தொடர்பாக வெளியில் எவருக்கும் தெரிவிக்க வேண்டாமெனக் கூறிய இராணுவத்தினர் தொடர்ந்தும் அங்கு நிற்பதைக் காண முடிந்தது.

இதனைக் கேள்விப்பட்ட ஏனைய மீளக்குடியமர்ந்த மக்களும் அச்சத்துடன் உள்ளமையையும் அவதானிக்க முடிந்தது. (த-410)

## சமுர்த்தி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யப்பட்டுள்ளது என்று 'உதய'னுக்கு நம்பகமாகத் தெரிய வந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் கலந்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. சமுர்த்திப் பயனாளிகளையும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்குமாறு சில இடங்களில் அறிவுறுத்தப்பட்டதாக கூறப்பட்டது. ஆனால் அப்படியான அறிவுறுத்தல் ஏதும் வழங்கப்படவில்லை என்றும் பயனாளிகள் இதில் கலந்துகொள்ளத் தேவையில்லை என்றும் சமுர்த்தி அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், இன்று பி.ப. ஒரு மணிக்கு மாவட்ட செயலகத்தில் 'திவிநெகும' சட்ட மூலம் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெறவுள்ளதாகவும் அதற்கு சகல சமுர்த்தி வங்கி முகாமையாளர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் யாழ். செயலகத்தில் இருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் சமுர்த்தி அலுவலர்களை போராட்டத்துக்கு வரவழைப்பதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக 'உதயன்' அறிந்தது.

இன்றையதினம் மணிக்கூட்டு கோபுர முன்றிலில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற பின்னர் பேரணியாக யாழ். மாவட்டச் செயலகத்துக்குச் சென்று அரச அதிபரிடம், 'திவிநெகும' சட்ட மூலத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரிய மனுவைக் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளரிடம் கேட்ட போது நீதிமன்றில் வழக்கு இடம்பெறுவதால் கருத்து எதனையும் தெரிவிக்க முடியாது - என்றார்.

இருப்பினும் இந்த ஆர்ப்பாட்டத்துக்கான பதாகைகள், சுலோகங்கள் என்பன நேற்றே கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

## அகதிகள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பது தொடர்பில் பேச்சுக்களை நடத்தும் பொருட்டு அவர்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலியாவின் எதிர்க்கட்சிகளின் குடிவரவுத்துறை பேச்சாளர் ஸ்கொட் மொரிசன் மற்றும் வெளியுறவு பேச்சாளர் ஜூலி பிஸப் ஆகியோர் நேற்று முன் தினம் இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பம்பாங் யுதாயானோவை சந்தித்துள்ளனர்.

இதன்போது அவர்கள் தமது இலங்கைப் பயணம் குறித்துக் குறிப்பிட்டதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எதிர்வரும் ஒரு மாத காலப்பகுதிக்குள் தமது இலங்கை பயணம் அமையும் என்றும், இதன் போது இலங்கையில் பல்வேறு அரச அதிகாரிகளைச் சந்தித்து, இலங்கையர்களை ஆஸ்திரேலியா நோக்கிப் படகேற விடாமல் தடுப்பது குறித்துப் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த)

## தெரிவுக்குழு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செயலாளர் வெளியிட்டுள்ள அறிவிப்பை வன்மையாகக் கண்டித்துள்ள அவர், இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வை முன்வைக்கத் தயார் என ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடமும், ஐ.நா.செயலாளரிடமும் அரசு உறுதியளித்துள்ளது. அத்துடன், 13 பிளஸ் என இந்தியாவிடமும் அது கூறியுள்ளது. ஆனால், அரச அதிகாரியான கோத்தபாய ராஜபக்ஷ 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை இல்லாதொழிக்க வேண்டும எனக் கூறுகின்றார்.

தமிழர் பிரச்சினைக்கு இந்த அரசிடம் தீர்வு எதுவும் இல்லை என்பதையே அவரின் கூற்று பிரதிபலிக்கின்றது. தீர்வு விடயத்தில் அரசின் உள் மனதில் உள்ள நிலைப்பாட்டையே அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அரச அதிகாரியாக இருந்துகொண்டு வரம்பு மீறி செயற்பட்டாலும் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கமுடியாத நிலைமையே நாட்டில் உள்ளது. ராஜபக்ஷ குடும்பம் என்ற அதிகாரம் அவர்களுக்குப் பாதுகாப்பை வழங்குகின்றது.

அதேவேளை, அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் எட்டப்படும் எந்தவொரு இணக்கப்பாட்டுக்கும் பிரதான எதிர்க்கட்சியினராகிய நாம் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் எனப் பகிரங்கமாகவே அறிவித்துள்ளோம்.

எனினும், தீர்வு விடயத்தில் காலத்தை இழுத்தடிப்பதற்கு அரசு தெரிவுக்குழு கைங்கரியத்தைக் கையாள்கின்றது. கோத்தபாயவின் கூற்று இதையே அம்பலப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது. அத்துடன், தெரிவுக்குழுவின் நம்பகத்தன்மையும் இதன்மூலம் அற்றுள்ளது. எனவே,13 ஆவது அரசமைப்பின் பிரகாரம் தீர்வை வழங்கவே தயாரில்லாத இந்த அரசை நம்பி நாம் எப்படித் தெரிவுக்குழுவுக்குச் செல்வது? கூட்டமைப்பும் எந்த அடிப்படையில் கலந்துகொள்ளும்? - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இந்த முன்னோட்டத்தின் பின்னால் இனி என்ன தொடர்ந்து வரும்...?

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நாட்டின் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கிவிட வேண்டும். இல்லையேல் உகந்த திருத்தங்களை செய்ய வேண்டும். இவ்வாறு திருவாய் மலர்ந்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

பதின்மூன்றாவது திருத்தத்தில் முக்கிய அம்சம் எதுவுமே இல்லை. அதேவேளை போருக்குப் பின்னரான, நாட்டிற்குத் தேவையான அபிவிருத்தி முயற்சிகளுக்கு அது பெரும் தடையாக உள்ளது. அதனை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்காவிடில், தற்போது இங்கு எழுந்துள்ள நெருக்கடிகள் நிச்சயமாக எமது நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் தாக்கத்தை உண்டாக்கும் என்பது அவரின் நிலைப்பாடு.

கோத்தபாய ராஜபக்ஷ ஓர் அமைச்சர் அல்லர்; அல்லது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றின் தலைவரும் அல்லர். ஜனாதிபதியின் சகோதரர்; அதற்கும் மேலாக போரை வெல்வதில் பெரும் பங்காற்றியவர். அவர் பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையில் நாட்டின் எதிர்காலப் பாதுகாப்புக் குறித்த அக்கறையினால் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார் என்று அவரைச் சார்ந்தோர் காரணம் காட்டலாம்.

ஆனால் தமிழ் மக்கள் தங்களுக்குரிய அரசியல் உரிமைகளை வழங்குமாறு, சாத்வீக வழியில் நடத்திய போராட்டங்களை மாறிமாறிப் பதவிக்கு வந்த அரசுகள் அடக்கி ஒடுக்கியதால்--

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட ஒரு பின்புலத்திலேயே இந்தியாவின் ராஜீவ் அரசு இந்நாட்டு விவகாரத்தில் தலையிட்டது-- என்பது சரித்திரம்.

அவ்வேளை பதவியில் இருந்த ஜே.ஆர். ஜெயவர்தனா, தமிழ்த் தலைவர்கள் முன்வைத்த அரசியல் கோரிக்கைகளை நறுக்கிப் பிளந்து, இந்தியாவைத் தாஜா பண்ணுவதற்குச் செய்த ஏற்பாடே அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம்.

அதில் வகை செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு இணைப்பை இப்போதைய மஹிந்த அரசு, தனது பங்காளிக் கட்சியான (இனவாத) ஜாதிக விமுக்தி பெரமுன ஊடாக நீதிமன்றத்தின் உதவியுடன் சட்டப் புத்தகத்திலிருந்து அழித்தது.

அதற்கு நிகராகக் கணிக்கத்தக்க ஒரு முன்னோட்டமே பாதுகாப்புச் செயலாளர், ஓர் அரசாங்கத் தலைமைத்துவத்தின் நிலை நின்று இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் கால் நூற்றாண்டு காலமாக அரசமைப்பில் அடங்கியுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை அழித்துவிட வேண்டும், கிழித்து எறியவேண்டும் என்று வெளிப்படுத்தும் பேரினவாதக் கருத்து.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த எங்கள் நாட்டின் ஜனாதிபதி, அந்நாட்டின் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா ஆகியோரைச் சந்தித்து, இலங்கைத் தமிழ் மக்களுக்கு என்னென்ன அரசியல் உரிமைகள் வழங்குவதற்குத் தன்னால் இயலும் என்பது குறித்து விவரித்து வந்தார் என்று தகவல்கள் வெளிவந்திருந்தன.

அதனைத் தொடர்ந்து இந்திய அரச தரப்பு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களை அழைத்து அவர்களுடன் பேச்சு நடத்தியது. இலங்கை அரசியல் நிலைமை குறித்து கூட்டமைப்பின் பிரதிநிதிகள் விவரித்த விடயங்கள், தமது சிந்தனையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கி உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியமை, இலங்கை - இந்திய உறவில் குறிப்பிடக்கூடிய மாற்றங்களைக் கொண்டு வரக்கூடுமோ என்று பலரையும் எண்ண வைத்தது.

அப்படி ஒரு மாற்றம் என்பது, தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழுவின்றி வலுவானதாக வழங்க வேண்டும் என்ற இந்திய அரசின் நிலைப்பாட்டின் வெளிப்பாடு என்று இலங்கை அரச உயர்பீடம் தனக்குள் அர்த்தப்படுத்திக் கொண்டதோ என்னவோ...!

இலங்கை விவகாரத்தைக் கையாளும் தனது போக்கை இந்தியா கடுமையாக்கிக் கொள்வதற்கு முன்னதாக, அந்த நாட்டின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட - மத்தியஸ்தத்துடன் என்றும் கொள்ளலாம்- உருவாக்கப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை, முழுமையாக நீக்கிவிடுவோம் என்ற மறைமுக அச்சுறுத்தலாகவும் பாதுகாப்புத் துறைச் செயலாளரின் ஆகப்பிந்திய கருத்து வெளிப்பாட்டைக் கொள்ளலாம்.

அரசாங்கத்தின் உறுப்பினர்களோ, அமைச்சர்களோ மேற்கண்ட கருத்தை வெளிக்கொணர்ந்தால், அது உத்தியோகபூர்வமாக இந்தியாவோடு பகைத்துக்கொள்ளும் ஒரு காரியமாகிவிடும்; அதனால் அரசாங்க உயர் அதிகாரியான பாதுகாப்புச் செயலாளரூடாக முன்வைக்கப்பட்டிருக்கவும் சாத்தியம் உண்டென்று கொள்ளலாம்.

வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதற்கு நீதிமன்றின் உதவியை நாடியது போன்று அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முற்றாக முழுங்கிவிடுவதற்கான முன்னோட்டம் என்றும் இதனைக் கருதுவதும் கற்பனையாகிவிடாது.

பதின்மூன்றாவது திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ள தமிழ் மக்கள் சார்ந்த உரிமைகளை, வசதிகளை இல்லாமற் செய்துவிட்டால், அவற்றை வேண்டி அவர்கள் கோரிக்கை எதனையும் முன்வைக்க முடியாமல் தன்பாட்டிலேயே தடுத்து விடலாம் என்ற கபட நோக்கமும் புதிய நிலைப்பாட்டில் பொதிந்துள்ளது.

இத்தனைக்கும், அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துக்கும் கூடுதலான (13+) அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு வழங்குவதற்கும் தாம் தயாராக உள்ளதாக ஜனாதிபதி முன்னர் ஒருதடவை இந்தியாவிடம் தெரிவித்து வந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்திய சூட்டோடு சூடாக, இந்தியா 13+ குறித்து விவரிக்கச் சொல்லிக்கேட்பதற்கும் வாய்ப்புண்டு என்பதனால், அது குறித்து எவரும் பிரஸ்தாபிக்காமல் தடுத்துவிடும் உள்நோக்கத்துடன், ஏற்கனவே வகைசெய்யப்பட்ட, அரசமைப்புச் சட்டத்தின் பதின்மூன்றாவது திருத்தத்தையே முழுங்கி விடும் எண்ணம் அரசிடம் உண்டு என்ற நிதர்சனத்தை உத்தியோக பூர்வமாக வெளிப்படுத்தாமல், போரை வென்று கொடுத்த சகோதரர் மூலம் நாடிபிடித்துப் பார்க்கும் ஒரு யுக்தியாகவும் பாதுகாப்புச் செயலாளரின் அறிவிப்பைக் கொள்ளலாம். தாம் நினைத்ததைச் செய்யும் சக்தி தம்மிடம் உண்டு என்பதனை அமெரிக்கா மற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மறைமுகமாக எச்சரிக்கும் தொனியும் முன்குறிப்பிட்ட கருத்தில் பொதிந்துள்ளது.

நினைத்ததை முடிக்கும் அதிகாரம் அரசிடம் அதீதமாகக் கையில் உண்டென்பதால், பாதுகாப்புச் செயலாளரின் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கிவிட வேண்டும் என்ற முன்னோட்டத்தை, வெறும் சின்னப்பிள்ளை விளையாட்டாக கொள்ள இயலாதே.

# திவிநெகும சட்ட முன்வரைவில் காணப்படும் இரகசிய உட்பிரிவு

## பயங்கரத்தை வெளிக்காட்டுகிறது "டெய்லி மிரர்"

கொழும்பு,ஒக்.17

திவிநெகும சட்ட முன்வரைவில் ஓர் இரகசிய உட்பிரிவு இருக்கின்றது. இது மிக அபாயகரமானது என்று 'டெய்லிமிரர்' பத்திரிகை கடந்த சனிக்கிழமை எழுதியிருந்த ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியிருந்தது.

இப்புதிய சட்டவரைவின் படி உருவாக்கப்படவிருக்கும் அதிகார மிக்க அமைச்சரின் 'சூப்பர்' திணைக்களத்தின் நிதி கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பாக திணைக்களத்தின் எந்த ஓர் அதிகாரியும் தகவல் எதுவும் வெளியிடுவதைத் தடுக்கும் பிரிவாகும் அது என்று தெரிவித்துள்ள அந்தத் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேலும் சில விடயங்கள் வருமாறு:-

திவிநெகும சட்டமுன்வரைவின் பிரகாரம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் கீழ் உருவாக்கப்படவிருக்கும் திணைக்களமானது ஒரு மிக விசாலமான பயங்கரமான அமைப்பாக இல்லாது போனாலும் பூதாகரமாக தோற்றமளிக்கப் போகிறது.

அதன் ஆரம்ப முதலீடு குறைந்தது 80 பில்லியன் ரூபாவாக இருக்கும். அத்துடன் திறைசேரிக்கோ மத்திய வங்கிக்கோ அது கணக்குக் காட்ட வேண்டியிருக்காது.

இவை அனைத்துமே ஜனநாயகத்துக்கு அல்லது அதில் எஞ்சியிருப்பவைகளுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கப் போகின்றன.

எனவே ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதில் அரசுக்கு அக்கறை இருக்குமானால், இந்தச் சட்ட முன் வரைவை மீளவும் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியம். இதைவிட பதினெட்டாவது அரசமைப்புத் திருத்தத்துடன் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையையும் ஒழித்துக் கட்டும் புதிய அரசமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்படுவதையே நாம் விரும்புவோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## புதிய இன உருளைக்கிழங்கு பெற்றுக் கொடுக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.17

'றெட்லசோடா', 'கல்வைற்' இன உருளைக்கிழங்குகளை விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்ப்பாணம் விவசாயப் பணிப்பாளர் கே.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

கடந்த வருடம் விவசாயத் திணைக்களம் விவசாயிகளிடம் இரண்டு வகை உருளைக்கிழங்குகளையும் அறிமுகப்படுத்தியிருந்தது. குடாநாட்டின் மையப்பகுதிகளான உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுகளில் குறிப்பிட்ட உருளைக்கிழங்கு வகைகள் கடந்த வருட போகத்தின்போது சிறந்த விளைச்சலைப் பெற்றிருந்ததுடன் விவசாயிகளுக்கு கணிசமான வருமானத்தையும் ஈட்டிக் கொடுத்தன. அத்துடன் நுகர்வோரும் இந்த உருளைக்கிழங்குகளை விரும்பிப் பெற்றுக் கொண்டனர்.

தற்போது விவசாயிகள் குறிப்பிட்ட உருளைக்கிழங்கு விதைகளைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளனர். இதனையடுத்து அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (த-7)

## இந்து ஆலய முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.17

இந்து ஆலயங்களின் முகாமைத்துவம் மற்றும் பிணக்குத் தீர்ப்புகள் மற்றும் நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற பிராந்திய பணிமனையில் உள்ள இந்து ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சட்டத்தரணிகள் மற்றும் இந்து ஆலய முகாமையாளர்கள் ஆகியோருக்கு நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் ஜனாதிபதி சட்டத்தரணியான கனகநாயகம் கனகஈஸ்வரன் தலைமையில் வளவாளர்கள் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (ம-14)

## சீவல் தொழிலாளரை ஊக்குவிக்க பனை அபிவிருத்திச் சபை திட்டம்

### பயிற்சியுடன் சைக்கிள், உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் சீவல் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தை பனை அபிவிருத்திச் சபை முன்னெடுத்துள்ளது. பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்த வரையில் பத்தில் மூன்று பங்கினரே சீவல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தொழிலை செய்பவர்களின் எண்ணிக்கை அருகிவருவதை உணரமுடிகிறது. இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்காக ஊக்குவிப்பு தொகை, பயிற்சி ஆகியன வழங்குவதோடு தொழிலுக்கு உரிய உபகரணம், சைக்கிள்கள் உட்பட அனைத்தும் வழங்கப்படும்.

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக தகவல்களைத் திரட்டுவதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை பனை தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் பூர்த்தி செய்து பனை அபிவிருத்திச் சபைக்கு அனுப்புதல் வேண்டும்-என்றும் கூறினார். (ம-13)

# தொடர்ந்தும் சூனியப் பிரதேசங்களாக வன்னியில் போர் நடந்த இடங்கள்

## கனடா பெண்மணி ஒலிவியா கவலை

யாழ்ப்பாணம், ஒக்.17

போர் நடைபெற்ற இடங்கள் சனநடமாட்டம் இல்லாது,வீடுகள் கூட கண்ணுக்குப் புலப்படாத வகையில் வெறிச்சோடிய ஒரு சூனியப் பிரதேசமாகக் காணப்பட்டதை தனது நடைபயணம் மூலம் பார்க்க முடிந்ததென தெரிவித்தார் கனடா நாட்டுப் பிரஜையான திருமதி ஒலிவியா அகஸ்ரின்.



யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் சேவைக்கு வலுச்சேர்க்கும் வகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் மாத்தறை தெய்வேந்திரமுனையிலிருந்து நடை பயணத்தை ஆரம்பித்து நிதி சேகரிப்பிலும் ஈடுபட்டுக் கொண்டு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த ஒலிவியா [illegible] களுடன் சந்தித்து கலந்துரையாடிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கால்களை இழந்தவர்கள் தாம் நடக்க முடியவில்லையே என வேதனைப்படும் போது அவர்களின் தேவையை எம்மால் உணர முடிகிறது. எனது நடைபயணம் மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு கால்களை இழந்த பலர் பயன் பெறுவர். இதுவே எனது நோக்க மாக உள்ளது. நடைபயணம் உடல் ஆரோக்கியத்துக்கும் சிறந் தது. நான் ஏ-9 பாதையூடாக நடந்து வந்தேன்.

வவுனியாவை கடந்து போர் நடைபெற்ற பிரதேசங்களை அவதானித்த போது கண்ணுக்கெட்டிய தூரத்தில் வீடுகளைக் காணவில்லை. வெறும் சூனியப் பிரதேசங்களாகவே அவை உள்ளன. மக்களின் தேவைகளையும் என்னால் உணர முடிந்தது-என்றார். (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிமுனை கிராம மக்களின் வீடுகளை ஒப்படைக்குமாறு மனு

## மன்னார் அரச அதிபருக்கு அனுப்பிவைத்தார் பங்குத்தந்தை

மன்னார், ஒக்.17

மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தில் அமைந்துள்ள மக்களின் வீடுகளை அவர்களிடமே ஒப்படைக்குமாறு பள்ளிமுனை பங்குத் தந்தை, கடந்த 12 ஆம் திகதி மன்னார் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு, நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக பள்ளிமுனை மக்களாகிய நாம், வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றோம். பின்னர் எமது இடங்களுக்குத் திரும்பி வந்த போது கடற்கரையிலுள்ள எமது வீடுகளையும், மீன் சந்தையையும் பொலிஸார் தங்கள் வசமாக்கிக் கொண்டிருந்தனர். இவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்துவதற்கு பலர் மூலமாக நடவடிக்கைகளை மேற்கொண்டோம். ஆனால் பாதுகாப்புப் படை மேலதிகாரிகளின் கூற்றுப்படி, பாதுகாப்புக் காரணங்களுக்காக அவ்விடத்தை விட்டுக் கொடுக்க முடியாது என்று எங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பின்னர் பாதுகாப்புக் காரணங்களை முன் வைத்து, கடற்படையினரும் 1998 ஆம் ஆண்டு இதே இடத்தில் நிலைகொண்டனர். நாட்டின் நிலைமை சீரானபோது நாங்கள் திரும்பவும் பல்வேறு தரப்பினரோடு தொடர்புகொண்டு இது தொடர்பாக பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் அனைத்துமே வீணாகிப் போய்விட்டன.

> பாதுகாப்புக் காரணங்களை முன் வைத்து, கடற்படையினரும் 1998 ஆம் ஆண்டு இதே இடத்தில் நிலைகொண்டனர்.

கடைசியாக சென்ற வருடம் எமது ஆயர் மூலமாக, மன்னார் பொலிஸ் உயரதிகாரியுடன் தொடர்பு கொண்டு பொலிஸாரை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தக் கூடியதாக இருந்தது. இதன் விளைவாக இவ்வருடம் மே மாதம் 10 ஆம் திகதி பொலிஸார் எமது வீடுகளைக் கையளிக்க இருக்கையில், கடற்படையினர் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

எமது வீடுகளைப் பார்ப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. இதன் காரணமாக பலர் தங்களின் உறவினர்களின் வீடுகளிலேயே தொடர்ந்தும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

அத்தோடு பள்ளிமுனையில் போதிய காணிகளும் இல்லை என்பதால் எமது வீடுகள் எமக்குத் தேவை என்பதில் நாம் எல்லோரும் உறுதியாக இருக்கின்றோம். கடந்த காலங்களைப் போன்று வாடகையைப் பெற்றுக் கொண்டு இருப்பதற்கு நாம் தயாராக இல்லை என்பதையும் கூறிக்கொள்கின்றோம்.

எமது வீடுகளை எமக்குத் தருமாறு பணிவோடு கேட்டு நிற்கின்றோம் என்றும் அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-12)

## வவுனியா புதுக்குளம் – கல்மடு வீதி புனரமைக்கப்படாமையால் சிரமம்

### இதனால் நாளாந்தம் விபத்துக்கள்

வவுனியா, ஒக்.17

வவுனியா, புதுக்குளம், கல்மடு வீதியின் புனரமைப்பு பணிகள் உரியவகையில் இடம்பெறாமையால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த வீதியைத் திருத்துவதற்காக கல் பரவப்பட்ட பின்னர் திருத்த வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால் இந்த வீதியினால் பயணம் செய்யும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர்.

பல பாடசாலை மாணவர்கள் குறித்த வீதியைப் பயன்படுத்தி வரும் நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் பெரும் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர். அது மட்டுமல்லாது பல்வேறு விபத்துக்கள் நாள்தோறும் இடம்பெறுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாதை முன்னர் காணப்பட்டதை விட மோசமான நிலையில் தற்போது காணப்படுகின்றது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறிய போதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-400-401)

## வட்டுவாகல் கடலில் இறக்கும் மீன்கள் குறித்து பகுப்பாய்வு

ஒட்டுசுட்டான், ஒக்.17

முல்லைத்தீவு வட்டுவாகல் வடகடலில் மீன்கள் இறந்து மிதக்கும் நிலையில் அது குறித்து பகுப்பாய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் மீன்கள் என்ன காரணத்தால் இறக்கின்றன என்பதனை ஆராயும் முகமாக இறந்த மீன்கள் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று சமாசத் தலைவர் தெரிவித்தார். இந்தப் பகுதிகளில் மீன்பிடிப்பது, விற்பனை செய்வது உடனடியாக தடை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-500)


## மழையால் பாதிக்கப்படும் கற்றல் செயற்பாடுகள்

வவுனியா,ஒக்.17

புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்று மதியம் தொடக்கம் பலத்த மழை பெய்வதால், அண்மையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையிலுள்ள வகுப்பறைகளினுள் மழை நீர் தேங்கியதால் மாணவர்களின் உடைமைகள் நனைந்துள்ளன. அத்துடன் கல்விச் செயற்பாடுகளும் உடனடியாக நிறுத்தப்பட்டன. இந்தப் பாடசாலையில் போதிய கட்டட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்காமையால் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இதைப்போன்றே அண்மையில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட இடங்களிலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது. (க-410)



கடந்த 11,12 ஆம் திகதிகளில் துணுக்காய்ப் பிரதேச சபையினரால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது அதில் கலந்து கொண்ட பிரதேச வர்த்தகர்கள் தமது வியாபார உரிமங்களைப் பெற்றுக் கொள்கின்றனர். (க-415)

## ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய விசேட கூட்டம்

கிளிநொச்சி, ஒக்.17

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் தலைவர் அ.கனகரத்தினம் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்தில் அரச சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் புதிய நிர்வாகம் தெரிவு செய்வது தொடர்பாகவும், புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதாக நம்பிக்கை நிதியத்தின் நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (க-6)

## இராணுவப் பிடியில் சிக்கியுள்ள கட்டடங்களுடன் 875 ஏக்கர் நிலம்

### புதுக்குடியிருப்பில் ஆக்கிரமிப்பு நீடிப்பு

முல்லைத்தீவு,ஒக்.17

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலே சுமார் 875 ஏக்கர் நிலப்பரப்பு இன்றுவரை இராணுவத்தினரின் பிடியில் உள்ளதுடன், பல வர்த்தக நிலையக் கட்டடங்களும் படையினரின் பயன்பாட்டிலேயே உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் கமநலச் சேவை நிலையத்தின் முன்பாகவுள்ள பொன்னம்பலம் வைத்தியசாலை இயங்கிய காணியும், அதனைச் சூழவுள்ள பத்துக் குடும்பங்களின் காணிகளும், புதுக்குடியிருப்புச் சந்திப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கலாக சுமார் பதினைந்து ஏக்கர் காணிகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், பொதுமக்களின் வாழ்விடங்கள் என்பவற்றை இலங்கை ராணுவத்தின் 682 ஆவது படைப்பிரிவு பயன்படுத்தி வருகின்றது. இதே வேளை புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் சுமார் 800 ஏக்கர் நிலப்பகுதியை இலங்கை ராணுவத்தின் 68 ஆவது படைப்பிரிவு பிடித்து வைத்துள்ளது.

> கைவேலிப் பகுதியில் சுமார் 800 ஏக்கர் நிலப்பகுதியை இலங்கை ராணுவத்தின் 68 ஆவது படைப்பிரிவு பிடித்து வைத்துள்ளது.

இதைவிட புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் அறுபது ஏக்கர் நிலப்பகுதியையும் இலங்கை ராணுவத்தின் 683 ஆவது படைப்பிரிவு ஆக்கிரமித்துள்ளது. இவ்வாறு பொது மக்களுக்குச் சொந்தமான மேற்படி 875 ஏக்கர் காணி ராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் இருப்பதால் இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் மீள்குடியமர முடியாமலும் வாழ்வாதாரச் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாமலும் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதேவேளை புதுக்குடியிருப்புப் பிரதேச மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கைகளை விடுத்துள்ளதுடன், இது தொடர்பாக மனுக்களையும் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## வவுனியாவில் திருட்டு, கொள்ளை 9 பேருக்கு விளக்க மறியல்

வலி.வடக்கு,ஒக். 17

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுக்கள் மற்றும் கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தின் பேரில் ஒன்பது பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா குற்றத் தடுப்புப் பொலிஸார் இந்த ஒன்பது சந்தேக நபர்களையும் புலன் விசாரணையின் அடிப்படையில் கைதுசெய்திருந்தனர்.

இந்த ஒன்பது பேரும் வவுனியாவில் இடம்பெற்ற மூன்று திருட்டுச் சம்பவங்கள் மற்றும் ஒரு கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய வர்களெனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேராவும் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட இந்த ஒன்பது சந்தேகநபர்களும் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (க-86)

## அவசரப்பட்ட சாரதிக்கு தண்டம்

கிளிநொச்சி,ஒக்.17

கிளிநொச்சி ஏ-9 வீதியில் தவறான முறையில் வாகனங்களை முந்திச்செல்ல முயன்ற வாகனச் சாரதியொருவருக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி ஏ-9 வீதியில் தவறான முறையில் ஏனைய வாகனங்களை முந்திக்கொண்டு செல்ல முயன்ற ஒருவரைக் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பதில் நீதிவான் எஸ்.விஜயராணி முன்பாக முன்னிலைப்படுத்தினர். குறித்த வாகனச் சாரதிக்கு 6 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (க-6)

## அருமையான வர்த்தகர்

முல்லைத்தீவு,ஒக்.17

கற்சிலைமடுவிலுள்ள வர்த்தகர் ஒருவரின் முன் மாதிரியான செயற்பாட்டை இந்தப் பகுதி மக்கள் பெரிதும் வரவேற்று பாராட்டியுள்ளனர்.

அண்மையில் அரசால் சிமெந்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், இங்குள்ள தனியார் வர்த்தகரொருவர் விலையை அதிகரிக்காது பாவனையாளர்களுக்குத் தலா ஐந்து பக்கற்றுகள் என்ற வகையில் விநியோகத்தை மேற்கொண்டுள்ளார்.

கூட்டுறவுச் சங்கங்கள் கூட இவ்வாறு நடந்து கொள்ள முடியாத நிலையில் இந்த வர்த்தகரின் இந்தச் செயற்பாட்டை மக்கள் வெகுவாக பாராட்டியுள்ளனர். (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு ஆதார வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்கள்

தென்மராட்சி, ஒக்.17
யாழ்.மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளில் மார்புநோய்களின் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக மார்பு நோயால் பீடிக்கப்பட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் ஆதார வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று யாழ்.மாவட்டக் காசநோய் தடுப்புப் பிரிவு வைத்திய அதிகாரி மருத்துவர் செ.யமுனாநந்தா விடுத்த வேண்டுகோளை அடுத்துக் கொழும்பு காசநோய் தடுப்பு மத்திய நிலையத்தினர் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய ஆதார வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

**கொழும்பு காசநோய் தடுப்பு மத்திய நிலையத்தினர் சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய ஆதார வைத்தியசாலைகளில் சளிப் பரிசோதனை நிலையங்கள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.**

இதேவேளை-
ஒக்ரோபர் மாதத்தில் இதுவரை நான்கு பேர் மார்பு நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை சாவகச்சேரி வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## அனைவருக்கும் சுகவாழ்வு பயிற்சி தெல்லிப்பழையில்



அளவெட்டி, ஒக்.17
'அனைவருக்கும் சுக வாழ்வு' நிலையத்தின் திட்டத்தின் ஓர் அங்கமான உளநலப் பிரிவின் மனத்தளர்வு, ஆரோக்கியம், யோகா தியானம் போன்ற பயிற்சிகள் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுகாதார உத்தியோகத்தர்களால் வழங்கப்படவுள்ளது. அத்துடன் இயற்கை முறைத் தோட்டம் அமைப்பது குறித்தும் இங்கு விளக்கமளிக்கப் படவுள்ளன.

தாய்மார் அமைப்புக்களால் உற்பத்தி செய்யப்பட்ட பயன்தரு மரக்கன்றுகள், இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பீடை நாசினிகள் என்பன அன்றைய தினம் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் விற்பனையும் மேற்கொள்ளப்படும்.

இந்த நிகழ்வை தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, குடில், தெல்லிப்பழை துர்க்கா சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஆகிய மூன்று அமைப்புகளும் இணைந்து ஏற்பாடு செய்திருந்ததாக வைத் திய அதிகாரி எஸ்.நந்தகுமா ரன் தெரிவித்தார்.

(த-36)

## கட்டாக்காலி கால்நடைகளால் வலி.கிழக்கில் வீதி விபத்துகள்

### கட்டி வளர்க்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.17
வலி.கிழக்குப் பிரதேசத்தில் கட்டாக்காலிக் கால்நடைகளால் விபத்துச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் எனவே மக்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும் வலி.கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் அ.உதயகுமார் கோரியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
வலி.கிழக்குப் பிரதேசத்தில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பிரதேச சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்த அறிவிப்பையும் மீறி வளர்ப்புக் கால்நடைகளை மேய்ச்சலுக்கு அவிழ்த்து விடுகின்றனர்.

இதனை விடப் பட்டிகளில் அடைக்கப்படும் கால்நடைகளும் வேறு இடங்களுக்கு மாற்றப்படும்போது வீதிகளின் குறுக்காகக் கண்டபடி அலைகின்றன. இதனால் வீதிகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

**இவ்வாறு கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளைப் பிடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

எனவே மக்கள் இதில் அதிக கவனம் செலுத்தி கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு பிரதேச சபை வலியுறுத்துகிறது.

இவ்வாறு கட்டாக்காலிகளாக நடமாடும் கால்நடைகளைப் பிடிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது- என்றார். (த-17)

## பிரதான வீதியோரத்தில் பாதுகாப்பற்ற கிணறு



யாழ்ப்பாணம், ஒக்.17
கோப்பாய் பிரதான வீதியோரத்தில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் கிணறு ஒன்றால் வீதியில் போக்குவரத்துச் செய்வோர் பெரும் அபாய நிலையை எதிர்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

யாழ்.-பருத்தித்துறை வீதியில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்துக்கு முன்பாக இந்தக் கிணறு அமைந்துள்ளது.

போக்குவரத்து நெரிசல் கூடிய பிரதான வீதியின் ஓரத்தில் காணப்படும் இந்தக் கிணற்றில் பாதுகாப் புக் கட்டும் உடைந்த நிலையில் காணப்படுகிறது.

இதனால் வீதியில் பயணம் செய்வோர் அபாய நிலையை எதிர்கொண்டுள்ளதாகவும் குறிப்பாக இரவில் பயணிப்போர் சிலவேளை தவறிக் கிணற்றுக்குள் விழக்கூடிய நிலை உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதுகுறித்து உரியவர்கள் கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-17)

## கோண்டாவில் நூலகம் நடத்தும் புகைப்பட தகவல் சேகரிப்பு போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.17
நல்லூர் பிரதேசத்தின் அரும்பெரும் பொக்கிஷங்களை ஆவணப்படுத்தும் நோக்குடன் மாபெரும் புகைப்படத் தகவல் சேகரிப்புப் போட்டி கோண்டாவில் பொதுநூலகத்தால் நடத்தப்படவுள்ளது.

திறந்த போட்டியாக நடத்தப்படும் இந்தப் போட்டியில் நல்லூர் பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள், பழைமை வாய்ந்த பொருள்கள், கலாசாரங்கள், வளங்கள், அடையாளச் சின்னங்கள், மக்களின் வாழ்வியல் பண்பாடுகள் போன்றவற்றைப் பிரதிபலிக்கும் வகையில் அவரவர் சிந்தனைக்கேற்ப படங்களை எடுத்துப் போட்டியில் பங்குபற்றலாம்.

ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பாக கோண்டாவில் பொது நூலகத்துடன் தொடர்பு கொண்டு ஆக்கங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

நல்லூர் பிரதேசத்தின் வரலாற்றுப் பொக்கிஷங்களை ஆவணப்படுத்த அனைவரும் பங்களிப்புச் செய்யலாம் என்று கோண்டாவில் பொதுநூலகர் தெரிவித்துள்ளார்.

(ம-14)

## வேலணை சங்கத்துக்கு புதிய முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஒக்.17
பெரும் நட்டத்தில் செயற்பட்டு வரும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குப் புதிய பொது முகாமையாளர் ஒருவரைக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் நியமித்துள்ளது.

அனலைதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் கே.பிரதீபன் வேலணை சங்கத்துக்குப் பதில் பொதுமுகாமையாளராகக் கூட்டுறவுத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதனைவிட நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும் இவர் பொது முகாமையாளராகப் பணியாற்றி வருகிறார்.

வேலணைப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் தற்போது பெரும் நட்டத்தில் செயற்பட்டு வருகிறது.

சங்கத்தின் பொதுமுகாமைத்துவம் சரியாகச் செயற்படுத்தப்படாமையால் தான் சங்கம் நட்டத்தில் செயற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே புதிய பொதுமுகாமையாளர் நியமிக்கப்பட்டதாகக் கூட்டுறவுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

## யாழ்ப்பாணம் கல்வியில் பின்தங்கிவிடக் கூடாது

### அமைச்சர் திஸ்ஸ கரலியத்த

யாழ்ப்பாணம், ஒக்.17
யாழ்ப்பாணம் பல கல்விமான்களைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாக விளங்குவதுடன் இன்றும் கல்வியில் முன்னேற்றம் கண்டு வருகிறது. இந்த நிலையைத் தளரவிடாது கல்விசார் நிறுவனங்கள் தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த.

யாழ். நாவலர் பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:
மாணவர்கள் தாம் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டும் என்றால் ஓர் இலக்குடன், ஆர்வத்துடன் கற்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரக் கூடிய விடயமே கல்விதான். ஏனெனில் பல கல்விமான்களை இன்னும் தன்னகத்தே கொண்ட பிரதேசமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையை அழிய விடாது தக்கவைப்பதற்கான முயற்சிகளைக் கல்விசார் நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும்.

**மாணவர்கள் தாம் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற வேண்டும் என்றால் ஓர் இலக்குடன் கற்க வேண்டும். யாழ்ப்பாணத்துக்குப் பெருமை தரும் விடயமே கல்விதான்.**

அமைச்சர்கள் பல இருக்கின்றபோதும் சிறுவர் மற் றும் பெண்கள் விவகார அமைச்சுக்குப் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. ஏனெனில் சிறுவர், பெண் கள் வன்முறை, உரிமை மீறல் தொடர்பான பிரச்சி னைகளை எதிர்கொண்டி ருப்பதால் எமது அமைச்சு அதற்கான வேறு[illegible] நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.- என்றார். (த-14)

## டெங்கு நோய் பரவக்கூடிய சூழல் 30 பேருக்கு ரூ.90000 அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.17
டெங்கு நோய் பரவலடையக் கூடிய வகையில் வீடுகள், வளவுகளை அசுத்தமாக வைத்திருந்த 30 பேர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் மொத்தமாக 90 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்கள்.

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவில் பல்வேறு இடங்களிலும் பருத்தித்துறைப் பொலிஸார், சுகாதாரப் பரிசோதகர்கள் கொண்ட குழுவினர் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது 30 பேரின் வீடுகள், வளவுகள் அசுத்தமாக இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த 30 பேர் மீது பருத்தித்துறைப் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

30 பேர் மீதும் தனித் தனியே தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த வழக்குகள் பருத்தித்துறை பதில் நீதிவான் பெ.குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அனைவரும் தமது குற்றங்களை ஒத்துக் கொண்டனர்.

எதிர்காலத்தில் இவ்வாறு நடத்து கொள்ள வேண்டாம் என எச்சரித்த பதில் நீதிவான் தலா 3 ஆயிரம் வீதம் அபராதம் விதித்தார். (த-8)

## வங்கிகள் வழங்கிய கடன்களை அறவிடப் பொலிஸாரின் உதவி

அச்சுவேலி, ஒக்.17
வலி.கிழக்கில் வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் வழங்கிய கடனை உரிய முறையில் அறிவீடு செய்வதில் எதிர்பாராத நெருக்கடியை எதிர்கொள்வதோடு பொலிஸாரின் உதவியை நாடி அறவீடு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.


வங்கிகள் வடக்கின் வசந்தம் உட்பட பல்வேறு கடன் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கான பருவகால தொழில் முயற்சிக் கடன்களை வழங்கியிருந்தன கடனுக்கான மாதாந்தத் தொகையைச் செலுத்தி வந்த பலர் இடைக்காலத்தில் செலுத்தாமல் 'டிமிக்கி' கொடுத்து வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

அச்சுவேலியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி உட்பட எட்டு வங்கிகளும் கோப்பாயில் இரண்டு வங்கிக் கிளைகளுமாக வலி.கிழக்கில் பத்து வங்கிக் கிளைகள் செயற்படுகின்றன.

வங்கிகள் போட்டி போட்டுக் கொண்டு வாடிக்கையாளர்களுக்குக் கடன் வசதிகளை வழங்கிய சூழ்நிலையில் சில வாடிக்கையாளர்கள், ஒரே வகையான கடன்வசதியை ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிக் கிளைகளில் பெற்றிருப்பதும், பெற்ற கடன் தொகைகளைப் பயன்படுத்தி வீடு திருத்தல் உட்பட வீட்டுப் பாவனைக்கான ஆடம்பரப் பொருள்களைக் கொள்வனவு செய்திருப்பதும் தெரிய வந்துள்ளது. வங்கி ஊழியர்கள் கடனைத் திருப்பிச் செலுத்துமாறு ஆலோசனைகள் வழங்கியும் முடியாதகட்டத்தில் பொலி ஸாரின் உதவியை நாடி கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவது சாதாரண நிகழ்வாக தினசரி நடைபெற்று வருகிறது.

(த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசமுறைப் பயணமாக புதுடில்லிக்குச் சென்ற ஆஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லார்டை, தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப இணையமைச்சர் சச்சின் பைலட் வரவேற்றார்.

# தமிழகத்தில் காங். ஆட்சிக்குவர இன்னும் 45 ஆண்டுகளாகுமாம்

## முன்னாள் மத்திய அமைச்சர் கருத்து

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்க இன்னும் 45 ஆண்டுகள் வரை காத்திருக்க வேண்டும் என்று மத்திய முன்னாள் அமைச்சர் மணிசங்கர் ஐயர் கருத்துத் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியிலும், ஆட்சியிலும் தலைமைப் பொறுப்பை ஏற்பது குறித்து ராகுல் காந்திதான் தீர்மானிக்க வேண்டும். ஆனால், அவருக்கு அனைத்து வகையிலும் உதவ காங்கிரஸ் கட்சி தயாராகவே உள்ளது.

தமிழக காங்கிரஸில் உள்ளவர்கள் அனைவருமே தலைவர்கள் என்பதால்



காங்கிரஸ் கட்சி தமிழகத்தில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு, ஆட்சியை இழந்த 45 ஆண்டு காலமே மீண்டும் தேவைப்படும். இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டுத் திட்டத்துக்கு தற்போது எதிர்ப்பு எழுந்துள்ளது.

ஆனால், இதற்கு முந்தைய குற்றச்சாட்டுகளான கோல் கேட், 2 ஜி, கொமன் வெல்த் போன்ற ஊழல் பிரச்சினைகளில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது யாருக்குமே நினைவில்லை. புதிதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளால் பழைய குற்றச்சாட்டுகள் வலுவிழந்து விடுகின்றன -என்றார் மணி சங்கர் ஐயர். (வ)

# கர்நாடகத்துக்கு மின்சாரம் வழங்குவதை எதிர்த்து திராவிடர் கழகம் ஆர்ப்பாட்டம்

## வீரமணியுடன் 400 பேர் கைது

காவிரி நீர் விவகாரத்தில் தமிழகத்துக்குதண்ணீர் வழங்க மறுக்கும் கர்நாடகத்துக்கு மின்சாரம் வழங்கக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து என்.எல்.சியை முற்றுகையிட வந்த திராவிடர் கழகத்தலைவர் வீரமணி உட்பட 440 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

முற்றுகைப் போராட்டம் குறித்து திராவிடர் கழகத் தலைவர் வீரமணி தெரிவிக்கையில்,

பெரியார் சதுக்கம் அருகே நடைபெற்ற போராட்டத்தில் உச்ச நீதிமன்றம் மற்றும் காவிரி நடுவர் மன்ற உத்தரவை ஏற்க மறுத்து காவிரியில் தண்ணீர் திறந்து விட மறுக்கும் கர்நாடக அரசைக் கண்டித்தும், என்.எல்.சியில் உற்பத்தியாகும் மின்சாரத்தை கர்நாடகத்துக்கு வழங்கக் கூடாது என்று வலியுறுத்தியும் இந்த முற்றுகைப் போராட்டம் நடைபெறுகின்றது-என்றார். (வ)


# சேது சமுத்திரத் திட்டத்துக்கு தடைவிதித்து உத்தரவிடுக

## உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு

சேது சமுத்திரத் திட்டத்தைக் கைவிடுமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்துக்காக கால்வாய் அமைக்கும்போது ராமர் பாலத்தை இடிக்கக் கூடாது என்றும் மாற்றுப்பாதையில் திட்டத்தை செயற்படுத்தக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இது குறித்து ஆராய மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அதைத்தொடர்ந்து சுற்றுச் சூழல் நிபுணர் ஆர்.கே. பச்சோரி தலைமையில் உயர் நிலைக்குழு அமைக்கப் பட்டது. அந்தக்குழுவின்




அறிக்கையில்,

'சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப் பாதையில் செயற்படுத்துவது பொருளாதார ரீதியிலோ, சுற்றுச் சூழல் ரீதியிலோ சாத்திய மானதல்ல' என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் எச்.எல்.தத்து, சி.கே.பிரசாத் ஆகியோர் கொண்ட பெஞ்ச் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

சேது சமுத்திரம் திட்டம் குறித்தும், பச்சோரி குழுவின் அறிக்கை குறித்தும் மத்திய அரசு இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் மத்திய அரசு சார்பில் கோரப்பட்டது. மத்திய அரசு முடிவு எடுக்க மேலும் 6 வாரங்கள் கால அவகாசம் வழங்கிய நீதிபதிகள் வழக்கு விசாரணையை டிசெம்பர் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தனர். (வ)

# பஸ்- லொறி விபத்து

## 16 பேர் சாவு; 24 பேர் காயம்



சத்தர்புர், ஒக்.17

மத்திய பிரதேச மாநிலம் சத்தர்புர் அருகில் பஸ்ஸும் லொறியும் நேருக்குநேர் மோதியதில் 16 பேர் உயிரிழந்தனர். 24 பேர் படுகாயமடைந்தனர்.

ஹர்பல்புரில் இருந்து சத்தர்புருக்கு நேற்றுக் காலை பயணிகள் பஸ் புறப்பட்டது. அங்கிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள, நவ் கான் நவோதயா பாடசாலை அருகே 7 மணியள வில் பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது நவ்கானில் இருந்து சிமெந்து ஏற்றி வந்த லொறி பஸ் மீது நேருக்கு நேர் பயங்கரமாக மோதியது.

இந்தக்கோர விபத்தில் அதே இடத்திலேயே 12 பேர் உடல் நசுங்கி உயிரிழந்தனர். 24 பேர் படுகாயமடைந்தனர். அவர்களைப் பொலிஸார் மீட்டு அருகில் உள்ள, மருத்துவமனைகளுக்குஅனுப்பி வைத்தனர். இதில் 4 பேர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே பரிதாபமாக இறந்தனர். படுகாய மடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 24 பேரில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.

# கனிமொழி மனு விசாரணை ஒத்திவைப்பு

## 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்த

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு வழக்கில் தங்கள் மீது சி.பி.ஐ. நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்பட்ட குற்றச்சாட்டுகளை ரத்துச் செய்யக் கோரி தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி, கலைஞர் தொலைக்காட்சி முன்னாள் இயக்குநர் சரத்குமார் ஆகியோர் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணையை எதிர்வரும் ஜனவரி மாதம் 22 ஆம் திகதிக்கு டில்லி உயர் நீதிமன்றம் ஒத்திவைத்தது.

டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி ஏ.கே. பதக் முன்பு கனிமொழி, சரத்குமார், சுரேந்தர் பிபாரா, ஹரி நாயர், கௌதம் தோஷி மற்றும் ரிலையன்ஸ் ரெலிகொம் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தன. இவர்கள் அனைவரது தரப்பிலும் சட் டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர். இதன்போது நீதிபதி பதக், தெரிவிக்கையில்

"குற்றம் சாட்டப்பட் டோரின் மனுக்களில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை ஒரே மாதிரியானவை.ஆனால், பதிவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் ஒன்றுக்கு ஒன்று வேறுபாடு கொண்டவை. அதனால், மனுதாரர்களின் வாதத்தை விசாரிக்க அதிக நேரமாகும். அதற்கு வசதியாக அடுத்த ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது" - என்றார்.

# காலாவதியான விசாவுடன் தங்கியிருந்த ஆப்கனியர் கைது

விசா காலம் முடிந்து இந்தியாவில் தங்கியிருந்த ஆப்கனியரை பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த 9 மாதங்களுக்கு முன்பு ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அக்தர் உசைன் என்பவர் அஸாம் மாநிலத்துக்குச் சுற்றுலாப் பயணியாகச் சென்றார்.

மூன்று மாத சுற்றுலா விசா பெற்று இந்தியாவுக்கு வந்த அவர், தன்னுடைய காலம் முடிவடைந்த பின்னரும் சொந்த நாட்டுக்குத் திரும்பவில்லை.

இதற்கிடையே அக்தர் உசைன் அஸாம் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, கோகாமுக் என்ற பகுதியில் தங்கிவிட்டார்.

இந்த நிலையில் உசைனை நேற்று முன்தினம் கைது செய்த பொலிஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏற்கனவே நேற்று முன்தினம் குஜராத்தில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் உளவாளிகள் சிக்கியதையடுத்து இவர் மீதும் பொலிஸாருக்குச் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.(வ)

# இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டாம்

## மன்மோகனிடம் ஜெயலலிதா மீண்டும் வலியுறுத்து

ஈழத் தமிழர்களை படுகொலை செய்த இலங்கை அரசுக்கு ஆதரவாகச் செயற்படக் கூடாது என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய மத்திய அரசை மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பில் அவர் பிரதமர் மன்மோகன் சிங்குக்குக் கடிதம் ஒன்றை மீண்டும் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அமெரிக்கா உட்பட்ட நாடுகள் இலங்கை அரசுக்கு எதிராகக் கொண்டு வரவுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும். அத்துடன், சர்வதேச நாடுகள் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்.

பிரதமரிடமிருந்து தனக்கு எந்தப் பதில்களும் வராத நிலையில் இந்தியா இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படப் போவதாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் எனக்கு கவலையளிக்கிறது.



கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமென்று நான் எழுதிய கடிதத்தை மீண்டும் நினைவுபடுத்துகின்றேன்.

இலங்கையில் அப்பாவி ஈழத்தமிழர்களை ஈவிரக்கமின்றி இலங்கை அரசு படுகொலை செய்துள்ளது.

தமிழக சட்ட மன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிராக போர்க் குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்றும் இலங்கையுடனான பொருளாதார உறவையும் துண்டிக்க வேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன் சிங்களவர்களுக்கு நிகராக தமிழர்களுக்கும் அரசியல் உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமரிடம் நேரில் கேட்டுக் கொண்டதையும் நினைவுபடுத்துகின்றேன் என்றுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஈரான் மீதான நடவடிக்கையை இறுக்குங்கள்'

ஈரான் நாட்டின் மீதான நடவடிக்கைகளை மேலும் இறுக்குங்கள் என்று ஜேர்மனியின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வேலே தெரிவித்துள்ளார்.

லக்ஸம்பேர்க்கில் ஐ.நா ஒன்றியத்தைச் சேர்ந்த வெளிவிவகாரத்துறை அமைச்சர்களின் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஒருவர் ஐரோப்பாவுக்கும், ஈரானுக்கும் இடையிலான வங்கித் தொடர்புகள் அனைத்தும் தடை செய்யப்பட்ட நிலையில், மருத்துவம் மற்றும் மனிதநேய அடிப்படையிலான சில சூழ்நிலைகளில் மட்டும் வங்கித் தொடர்பு அனுமதிக்கப்படுகிறது - என்றார்.

ஏற்கனவே நீண்டகால இடைக்கால ஏற்றுமதிகள் தடைசெய்யப்பட்டிருந்தநிலையில், குறுகிய கால ஏற்றுமதிகளும் தற்போது தடை செய்யப்பட்டுவிட்டன.

யுரேனியம் செறிவூட்டு தலை நிறுத்தாத வரையில் ஈரானுடன் நட்புப் பாராட்ட ஏனைய நாடுகள் தயாராகவில்லை.

ஈரான் மீது அமெரிக்காவின் ஆதரவுடன் இஸ்ரேல் இராணுவ நடவடிக்கை எடுக்கத் தயாராகி வருகின்றது. ஈரானின் பொருளாதார நிலையும் மேலை நாடுகளின் பொருளாதாரத் தடைகளால் மிக மோசமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ)

### பிலிப்பைன்ஸ் அரசு- எம்.ஐ.எல்.எப் இடையே

# ஒப்பந்தம் கைச்சாத்து

### முடிவுக்கு வந்தது 40 வருட கால போராட்டம்



AP

பிலிப்பைன்ஸ் அரசுக்கும், முஸ்லிம் போராட்டக்காரர்களுக்கும் இடையே வரலாற்று சிறப்புமிக்க அமைதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இதன்மூலம் மிண்டனாவ் மாகாணத்தில் நீடித்து வந்த 40 ஆண்டு கால போராட்டம் முடிவுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் தலைநகர் மணிலாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அக்வினோ, மோரோ இஸ்லாமிக் லிபரேஷன் ஃபுரன்ட் (எம்.ஐ.எல்.எப்) அமைப்பின் தலைவர் முராத் இப்ராஹிம் மற்றும் மலேசியப் பிரதமர் நஜீப் ரஸக் ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் படி மிண்டனாவ் மாகாணத்தில் முஸ்லிம்கள் அதிகளவில் வசிக்கும் பகுதி பாங்க்ஸ் மோரோ என்ற பெயரில் தன்னாட்சி அதிகாரத்துடன் செயற்படும்.

இதுகுறித்து பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்வினோ தெரிவித்ததாவது:- இந்த ஒப்பந் தத்தின் மூலம் மிண்டனாவ் மாகாணத்தில் போராட்டம் முடிவுக்கு வந்து அமைதி நிலவும் என்று நம்புகிறேன்.

இதன்மூலம் இந்தப் பகுதி இனி வளர்ச்சி அடையும். வன்முறையைக் கைவிட்டு ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்யும்- என்றார்.

புதிய தன்னாட்சி பெற்ற பாங்ஸ்மோரோ சட்டத்துக்கு பிலிப்பைன்ஸ் நாடாளு மன்றம் ஒப்புதல் வழங்கும் வரை இப்போது உள்ள நிலையே நீடிக்கும். இந்த ஒப்பந்தம் 2016 ஆம் ஆண்டில் செயற்பாட்டுக்குவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முஸ்லிம்கள் வசிக்கும் பகுதியைத் தனி நாடாக அறிவிக்கக் கோரி எம்.ஐ.எல். எப் அமைப்பு கடந்த 40 ஆண்டுகளாக போராடி வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில். மலேசியப் பிரதமரின் உதவியுடன் இந்த அமைதி ஒப்பந்தம் கைச்சாத்தாகி உள்ளது. எனினும் தனி நாடாக அறிவிக்க பிலிப்பைன்ஸ் அரசு மறுத்து விட்டது. இந்த கோரிக்கையை கைவிட வேண்டும் என்றும் குறித்த ஒப்பந்தம் வலியுறுத்துகிறது.(வ)

## அலாஸ்கா விமான நிலையத்தில் வெடிகுண்டு மிரட்டல்

### பியத்து எடுக்கப்பட்டன பொதிகள்

அமெரிக்காவில் உள்ள அலாஸ்கா டெட் ஸ்டீவன்ஸ் ஆங்கோரேஜ் என்ற சர்வதேச விமான நிலையத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

குறித்த விமான நிலையத்திலிருந்து பயணம் செய்ய வந்த ஒரு பயணியின் பொதியில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து பயணிகள் அனைவரும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு அருகேயுள்ள விமான நிலையத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

பின்னர் பயணிகளின் பொதிகள் அனைத்தும் பியத்துப் பிடுங்கிச் சோதனையிடப்பட்டன. ஆனால், வெடிகுண்டு எதுவும் இல்லை. வெறும் மிரட்டல் என்று தெரிய வந்தது.

எனவே அங்கு விமானங்கள் தரை இறங்க அனுமதிக்கப்பட்டது. ஆனால் விமானங்களில் பயணிகள் ஏற தடை விதிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ)

## தவறுதலாக விமானத்தை தரையிறக்கிய விமானி

### பதவியைப் பறிகொடுத்தார்



இந்தோனேஷியாவில் தவறுதலாக-விமானப்படை தளத்தில் விமானத்தை தரையிறக்கியதற்காக விமானி பணிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் உள்ள மேடன் நகரிலிருந்து ஸ்ரீவிஜயா ஏர்லைன்ஸ் விமானம் புறப்பட்டது.

படாங் நகரின் மினாங்காபாவ் விமான நிலையத்தில் இந்த விமானம் தரையிறங்க வேண்டும்.

ஆனால் விமானத்தை ஓட்டிய வெளிநாட்டு விமானி தவறுதலாக, டேபிங் விமானப்படைத் தளத்தில் விமானத்தைத் தரையிறக்கினார்.

இதனால் விமான நிலைய அதிகாரிகள் அதிர்ச்சியடைந்தனர்.

உடனடியாக விமானிக்கு தகவல் கொடுக்கப்பட்டு, விமானம் மினாங்காபாவ் விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

விமானத்தை உரிய இடத்தில் தரையிறக்காத வெளிநாட்டு விமானி பணியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்டார்.

விமானிக்குத் தகுந்த முறையில் கட்டுப்பாட்டு அறையிலிருந்து தகவல் தரப்படவில்லையா? என்பது குறித்தும் விசாரணை இடம் பெற்று வருகிறது. (வ)



ஈராக் தலைநகர் பாக்தாத் சர்வதேச விமான நிலையத்துக்குச் சென்ற சிரியாவுக்கான ஐ.நா. தூதர் லக்தர் பிராஹிமியை ஈராக் வெளியுறவு அமைச்சர் ஹோஸ்யர் ஷெபரி கைலாகு கொடுத்து வரவேற்றார்.


## கால்பந்து விளையாடியோர் மீது துப்பாக்கிச் சூடு


மத்திய அமெரிக்க நாடான ஹோண்டுராஸில் கால்பந்து விளையாடியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழந்தனர்.

ஹோண்டுராஸ் நாட்டில் போதை கடத்தல் கும்பல்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்தவாரம் சுகாதார அமைச்சர் மிரியம் பாசினின் கணவரை அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டுக் கொன்றனர்.

இதற்கிடையே நேற்று முன்தினம் கேட்டகாமஸ் என்ற நகரில் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த குழுவினரை நோக்கி மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 11 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ)

## அமெ. விஞ்ஞானிகள் இருவருக்கு பொருளாதாரத்துக்கு நோபல் பரிசு





ஸ்டாக்ஹோம், ஒக்.17

அமெரிக்காவைச் சேர்ந்த, ஆல்வின் ரோத், லாய்டு ஷெப்லே ஆகியோர் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலக்கியம், பொருளாதாரம், இயற்பியல், இரசாயனம், மருத்துவம் ஆகிய துறைகளில், சாதனை படைப்பவர்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும், நோபல் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த வாரம், மருத்துவம், இயற்பியல், இரசாயனம், இலக்கியம் ஆகிய துறையைச் சேர்ந்த நிபுணர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. அமைதிக்கான பரிசு, ஐரோப்பிய யூனியனுக்கு அறிவிக்கப்பட்டது. இதற்கிடையே, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு, அமெரிக்காவைச் சேர்ந்த ஆல்வின் ரோத், லாய்ட் ஷெப்லே ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹார்வாட் பல்கலைகழகத்தின், பொருளாதார பேராசிரியராக இருப்பவர் ஆல்வின் ரோத். கலிபோர்னியா பல்கலைக் கழக பேராசிரியர் ஷெப்லே. 'நிலையான விநியோகம் மற்றும் சந்தை விற்பனை நடைமுறை' குறித்து. இவர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியைப் பாராட்டி இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## கனடாவில் விபத்து 3 பேர் சாவு

கனடாவின் வான்கூவர் மாகாணத்தில் உள்ள மலாஹாத். நெடுஞ்சாலையில் ஏற்பட்ட விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோர் விக்டோரியா நகரத்திலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். படுகாயமடைந்தவர்களில் இரண்டு பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். குறித்த விபத்து இடம்பெற்ற வேளையில் அந்தப் பகுதியில் கனமழை பெய்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கனின் போர் பிரதேசங்களில் பார்வையிழந்தோர் 4 லட்சம் பேர்

ஆப்கானிஸ்தானில் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் மொத்தம் 4 இலட்சம் பேர் பார்வையிழந்தவர்களாக உள்ளனர்.

கடந்த சனிக்கிழமை, உலக பார்வையிழந்தோர் தினத்தை முன்னிட்டு ஆப்கானிஸ்தானின் பொது மக்கள் சுகாதார அமைப்பு சார்பாக கணேஷ்கா பக்ரஸ் எனும் பேச்சாளர் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் பேட்டியளித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

25 ஆயிரம் பேர் ஒவ்வொரு வருடமும் நோய் மற்றும் ஏனைய காரணங்களால் பார்வை இழந்து வருகின்றனர். எனினும் தீவிரவாதத்துக்கு எதிரான போரால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆப்கனில் வசித்து வரும் பார்வையிழந்தோர் தொகை இனி வரும் காலத்தில் குறைய வாய்ப்புள்ளது. இதற்குச் சான்றாக அவர்களுக்கு சுகாதார வசதிகள் அதிகளவில் வழங்கப்படவுள்ளன.



ஒரு தசாப்த காலமாக ஆப்கனின் கிராமப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் அமைத்து சுகாதார வசதிகள் அதிகரிக்கப்பட்டன. ஆப்கனில் நோயுற்றவர்களில் 80% சதவீதம் அதாவது 28 மில்லியன் சனத்தொகை தலிபான்களின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்தே வைத்திய வசதிகளைப் பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணயக்கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யுங்கள்

## அல்குவைதாவுக்கு பிரான்ஸ் ஜனாதிபதி வேண்டுகோள்



அல்குவைதா தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரெஞ்சு நபர்கள் ஆறு பேரை உடனடியாக விடுவிக்குமாறு பிரான்ஸ் ஜனாதி பதி பிராங்கோய்ஸ் ஹோலண்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலியின் வடக்குப் பகுதியை அக்கிம் என்ற அல்குவைதா இயக்கத்தினர் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். இவர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஆறுபேரைப் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர்.

ஐ.நா. சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலியின் ஒருங்கிணைப்பு குறித்து எடுத்த தீர்மானத்திற்கு ஹோலண்டே ஆதரவு தெரிவித்தது. இஸ்லாமிய போராட்டக்காரர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தி உள்ளது.

அல்குவைதா தீவிரவாதிகளை ஒழித்து விட்டு வடக்குப் பகுதியை தென் பகுதியுடன் இணைத்து ஒரே நாடாக்க வேண்டும்- என்றார்.

இந்நிலையில் வடக்கு மாலியின் இஸ்லாமியர்களின் தலைவரான ஓமர் ஹமாஹா கூறுகையில்,

இந்த இயக்கத்தினரை மிரட்டுவதால் அவரது நாட்டு பிணைக்கைதிகளுக்கு அவரே நரகத்தின் வாயிலைத் திறந்து வைத்துள்ளார். மாலிக்குள் பிரான்ஸின் தலையீடு இருந்தால் பிரெஞ்சு நபர்கள் கொல்லப்படுவது உறுதி என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தலைக்கு 1 மில். டொலர்

## பாக். உள்துறை அமைச்சர் அறிவிப்பு

வொஷிங்டன் , ஒக்.17

பாகிஸ்தான் பாடசாலை மாணவி மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவரைக் காட்டிக் கொடுத்தால் ஒரு மில்லியன் டொலர் பவுண்டி பரிசாக வழங்கப்படும் என்று பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாகிஸ்தானில் தீவிரவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்துவந்த பாடசாலை மாணவி மாலலா யூசுப் சாய் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியமைக்கு பாகிஸ்தானின் தெஹ்ரிக் -இ-தாலிபான் இயக்கத் தலைவரே பொறுப்பாவார். மாணவியைச் சுட்டுக் கொல்வதற்கு ஆப்கானிஸ்தானில் திட்டமிடப்பட் டுள்ளது. குறித்த இயக்கத் தலைவரைப் பிடித்துக் கொடுத்தால் ஒரு மில்லியன் டொலர் பவுண்ஸ் பரிசாக வழங்கப் படும்-என்றார். (வ)

## மேலதிக சிகிச்சைக்காக பாக். மாணவி லண்டனுக்கு

தலிபான்களால் துப்பாபாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த பாகிஸ்தான் மாணவி மேலதிக சிகிச்சைக்காக லண்டனுக்குஅனுப்பி வைக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் பெண் கல்விக்கு ஆதரவாகப் போராடிய 14 வயது மாணவி மலாலா பாடசாலையிலிருந்து இருந்து திரும்பும் போது சுவாத் பள்ளத்தாக்கில் உள்ள மிங்கோராவில் துப்பாக்கியால் சுடப்பட்டாள்.

இவரது கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலிபான் தீவிரவாதிகள் இவரை சுட்டனர். இவரது தலை, முதுகு மற்றும் உடலில் துப்பாக்கி குண்டுகள் பாய்ந்தன.

இதனால் உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் ராவல்பிண்டியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

தலையில் பாய்ந்து இருந்த குண்டு அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. இதையடுத்து அவர் மேலதிக சிகிச்சைக்காக லண்டனுக்கு அம்புலன்ஸ் விமானம் மூலம் அனுப்பப்பட்டார்.

# திரிபோலி சிறையிலிருந்து 120 கைதிகள் தப்பியோட்டம்

திரிபோலி, ஒக்.17

லிபியத் தலைநகர் திரிபோலியில் உள்ள சிறைலிருந்து 120 கைதிகள் தப்பி ஓடிவிட்டனர் என்று அந்த நாட்டு பாதுகாப்புத் தலைவர் காலத் அல்-ஷாரிப் தெரிவித்தார். இதுகுறித்து ஷாரிப் மேலும் தெரிவிக்கையில்,

அல்-ஜதைதா சிறையில் இருந்து 120 கிரிமினல் குற்றவாளிகள் தப்பியோடி விட்டனர். அவர்களைப் பிடிப்பதற்காக தேடுதல் வேட்டை தீவிரப் படுத்தப்பட்டுள்ளது -என்றார்.

கிரிமினல் குற்றவாளிகள் சிறை வைக்கப்பட்டு வரும் அல்-ஜதைதா சிறை நீதித்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் குறித்த சிறையில் ஏற்பட்ட தகராறில் கைதிகள் இருவர் காயமடைந்தனர். லிபியாவில், ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜனாதிபதி கடாபி கொல்லப்பட்டு, எதிர் வரும் 20 ஆம் திகதியுடன் ஓராண்டு நிறைவடைய உள்ள நிலையில் கைதிகள் இவ்வாறு தப்பியோடி இருப்பது அந்நாட்டு அதிகாரிகளுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (வ)

# மதி மயக்கிய மர்லினின் 'வெண்ணிற ஆடை' காட்சிக்கு

ஹொலிவூட் சினிமாவில் முற்பட்ட காலத்தில் கவர்ச்சிக் கன்னியாகத் திகழ்ந்து அனைவரையும் மதி மயக்கிய மர்லின் மன்றோவின் வெண்ணிற ஆடை பிரிட்டனில் நடைபெறவுள்ள கண்காட்சியில் காட்சிக்கு வரவுள்ளது.

ஹொலிவூட் சினிமாவில் ஒருகாலத்தில் கவர்ச்சிக் கன்னியாக திகழ்ந்தவர் மர்லின் மன்றோ. ரசிகர்கள் மட்டுமின்றி அரசியல் பிரமுகர்களையும் தனது வசீகரமான தோற்றத்தால் கவர்ந்த மர்லின் மர்மமான முறையில் உயிரிழந்தார்.

1955 ஆம் ஆண்டு வெளிவந்த படம் "த செவன் இயர் இற்ஸ்" இந்தப் படத்தில் அவர் வெண்ணிற ஆடை அணிந்து நடனமாடினார்.

இந்த ஆடை மிகவும் பிரபலமானதுடன், அதன் மதிப்பு சுமார் 3 மில்லியன் பவுண்ட் ஆகும்.

மர்லின் மன்றோவின் மறைவுக்குப் பின்னர், இந்த வெண்ணிற ஆடை தற்போது முதன்முறையாக பிரிட்டனில் நடைபெற உள்ள கண்காட்சி ஒன்றில் காட்சிக்கு வைக்கப்படவுள்ளது. (வ)


**Translator (Englsh-Tamil)-Walk in Interview**

We need a dynamic person to function as a Translator to an English Occupational Therapist who is working at base hospital,Tellippalai. Good level of English required in both verbal and written communication.

- Tanslator should work for 4 days in a week.
- Salary negotiable

Those who are willing to work are called for a walk in interview on Thursday 18th Oct. between 10 am to 3 pm.

**Secretary**
**Mental Helth Society, Base Hospital, Tellippalai.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2012 இல் 150 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த
செல்வன்
**தர்மராஜ் கனிஸ்ரன்**
அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
பார்த்தீபன் கஜானி - 122,
தவராசா ஜெயந்தா - 111,
ஜெயபால் ஹம்சிகா - 111,
ஜெயகாந்தன் மதுஷாளினி- 104 இவர்களுடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
பாடசாலைச் சமூகம்,
யா/மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி.
(சி/28002)(2-6-7)

**அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/ மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றும்
**சரவணை கிருஷ்ணன்**
(SLPS - III)
அவர்கள் கடந்த 02.10.2012 அன்று கொழும்பு அலரிமாளிகையில் நடைபெற்ற வைபவத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து இலங்கை அதிபர் சேவை தரம் III க்குரிய பதவி உயர்வு நியமனத்தைப் பெற்றுக் கொண்டமையை பாராட்டுவதுடன் அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
Best Wishes
ஆசிரியர்கள். மாணவர்கள். யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை. சாவகச்சேரி.
(சி/2800)(6.7.8)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**முடியப்பு எமிலியாம்பிள்ளை**
( Sp. Trained Social Studies, SLPS - 2, SLPS - 1, SLEAS - III)
Best Wishes
ஆசிரியராய், அதிபராய், மருவலயத்தின் மாந்தை மேற்கு கோட்டக்கல்விப் பணிப்பாளராக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, நிர்வாகியாகக் கடமையாற்றிய இவர், அலரிமாளிகையில் மாண்புமிகு ஜனாதிபதி முன்னிலையில் SLEAS - III பெற்றமையையிட்டு பாராட்டி வாழத்துகின்றோம்.
மேலும் பல பட்டங்கள் பெற்று பல பதவிகளை வகித்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
**வாழ்த்துவோர்: குடும்பத்தினர், நண்பர்கள்.**
(24429)(6.7.8)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



வவுனியா/ சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 154 புள்ளிகள் பெற்று பெருமை சேர்த்த கிருஸ்ணா குமாரக் குருக்கள் - சுபாசினி தம்பதியரின் புதல்வன்
**சங்கோபித சர்மா**
அவர்கள் ஆவரங்கால் இராமலிங்கன் துணையோடு சகல துறைகளிலும் மேன்மையடைய வாழ்த்துகிறோம்.
சிவன்கோயிலடி, ஆரவரங்கால்.
Best Wishes
வாழ்த்துபவர்கள்:
வே. நடராஜக் குருக்கள் (தாத்தா), சி. சிறிதரசர்மா (பெரியப்பா), குடும்பத்தினர்.

**சேவைநலன் பாராட்டும் 60 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்**
Best Wishes



**திரு.கந்தையா கிருஷ்ணசாமி**
(உத்தியோகத்தர், தாவரவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாவரவியல்துறையில் 31 வருடங்கள் அரும்பணியாற்றி 17.10.2012 இன்று ஓய்வு பெறும் மதிப்புக்குரிய திரு.கந்தையா கிருஷ்ணசாமி தமது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் வாழ இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.
**தாவரவியல்துறையினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
(24200) (2-6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரையும் கவர்வதற்கு அற்புத வழிகள்

(11)

நீங்கள் எடுத்திருக்கும் ஒப்பந்தத்தின் படி, ஒரு மாதத்துக்குள் இவ்வளவு பொருள்களை ஏற்றுமதி செய்தாக வேண்டும் என்றும், தொழிலாளர்கள் ஒத்துழைப்பால்தான் இது முடியும் என்றும் சொல்லுங்கள். உங்களுக்குக் கிடைக்கும் இலாபம் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் இலாபம் என்றும், உற்பத்திக்கு ஏற்றபடி ஊதிய உயர்வும் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் உண்டு என்றும் சொல்லுங்கள்.

அவர்கள் உண்மையை உணர்வார்கள். தமது கடமையை உணர்வார்கள். தமக்காக ஒரு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்ற நம்பிக்கையுடன் சுறுசுறுப்பாக இயங்குவார்கள். நீங்கள் நினைத்ததைவிட, பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்கள்.

பேர்ஸ் விடயத்தை எடுத்துக் கொள்வோம். பணத்துக்கு எப்போதும் அளவுக்கு மேல் மதிப்புக் கொடுக்காதீர்கள். உங்கள் உறவினர் பேர்ஸில் பணம் அதிகமாக வைத்திருக்கிறார் என்பதால் மட்டும், அது அதிர்ஷ்ட பேர்ஸ் ஆகிவிடாது. அதைவிட அழகிய பேர்ஸ் ஒன்றை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும். அதில் நிறையப் பணம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணுவதில் தவறில்லை. அதிலும் நூறு ரூபாய் நோட்டுக்களாக பேர்ஸில் வைத்துக் கொள்ள வேண்டும். முடியுமா? முடியும். எப்படி?

பேர்ஸைத் திருடவேண்டாம். அதைவிடக் கேவலமான விஷயம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. அவர் வைத்திருக்கும் பணத்தைப் பற்றியோ, பேர்ஸைப் பற்றியோ பேசாதீர்கள். அவர் எப்படி வாழ்கிறார், என்ன தொழில் செய்கிறார், அதில் இலாபமா? நஷ்டமா? என்று கேட்கலாம். தவறில்லை. ஆனால் அவரிடம் உள்ள பணத்தைப் பார்த்து எந்தக் காலத்திலும் மயங்காதீர்கள். மாறாக, அவர் உங்களை விட்டுப் பிரிந்து செல்லும் வரையில் அவர் கொண்டு வந்த பொருள்கள் அவ்வளவையும் அவர் பாதுகாப்பாகக் கொண்டு செல்லவேண்டும் என்று எண்ணுங்கள்.

உங்கள் எதிர்காலத்துக்கு திட்டமிடுங்கள்.

கடினமான உழைப்பால் மட்டும் பணம் சம்பாதிக்க முடியாது. மூளையும் தேவை. இதோ ஓர் உதாரணம்.

பிரேம்பூரி என்பவர் புகழ்பெற்ற ஒரு நிறுவனத்தின் அதிகாரி. கார் உற்பத்தி செய்யும் ஒரு நிறுவனத்தில் ஒரு சாதாரண தொழிலாளியாக வேலையில் சேர்ந்தார். வேலையில் அவருக்கு நாட்டம் அதிகம். தனது வேலைகளைப் பற்றி மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டார். கார்களைத் தயாரிப்பதில் ஒரு வேகத்தை உண்டாக்க என்னென்ன செய்யவேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு சுறுசுறுப்பாக இயங்கினார். விரைவில் இவர் கண்காணிப்பாளரானார். மேலும் பல சங்கதிகளைத் தெரிந்து கொண்டு நல்ல பெயர் வாங்கினார். மனேஜர் பதவி தேடிக் கொண்டு வந்தது. இன்னும் சில ஆண்டுகளில் கார் விற்பனை பெருகியதும், தலைமைப் பதவி தேடி வந்தது. நிறுவனத்தில் நிர்வாக இயக்குநரானார். ஆண்டு ஒன்றுக்கு அவர் வாங்கிய சம்பளம் பல லட்சங்கள். இலவச பங்களா, கார், பணியாள்கள், எங்கு போக வேண்டுமானாலும் விமான டிக்கெட். அவர் எடுத்த முடிவுகளைக் கைதட்டி வரவேற்றார்கள் மற்ற இயக்குநர்கள் ''கார்கள் உற்பத்தி விஷயத்தில் அவருக்கு இருக்கும் அறிவும், ஆற்றலும் அவருக்கு ஏகப்பட்ட பணத்தைச் சம்பளமாக வாங்கிக் கொடுத்திருக்கின்றன'' என்று மற்றவர்கள் பேசிக் கொண்டார்கள்.


ஆனால் பூரியைக் கேட்டால் என்ன சொல்கிறார் தெரியுமா? ''கார் உற்பத்தி விஷயத்தில் எனக்கு இருக்கும் அறிவைவிட, என்னிடம் வேலை செய்பவர்களிடம் அறிவு அதிகம். அவர்கள் மூளையையும், திறமையையும் நான் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறேனோ, அதை மற்றவர்கள் செய்யும்படி செய்கிறேன். அதுதான் என் வெற்றியின் இரகசியம்'' என்கிறார்.

எவ்வளவு உண்மை!

ஆக, நாம் நமது மூளையைப் பயன்படுத்தி மற்றவர்களைக் கவர்ந்திழுக்க வேண்டும். நாம் நினைப்பதை அவர்கள் அப்படியே நமக்காகச் செய்து முடிக்கும்படி செய்ய முடியும்.

**அவள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறாள்?**

நீங்கள் ஒரு பெண்ணைப் பார்க்கிறீர்கள். அழகிய பெண்.



கவர்ச்சிமிக்க பெண். "அவள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறாள்?" என்ற எண்ணம் உங்கள் மனதில் எழுகிறது.

அதே நேரத்தில் - அந்தப் பெண் உங்களைப் பார்க்கிறாள். அவள் மனதில், அவர் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்? என்ற எண்ணம் தோன்றுகிறது. இருவரும் ஹலோ என்று சொல்வதில்லை. வணக்கம் என்று சொல்வதில்லை. மாறாக-

ஒருவரை ஒருவர் பார்த்தும் பார்க்காததுபோல் போய் விடுகிறீர்கள். இதனால்தான் நாம் மற்றவர்களுக்கு அந்நியர்களாகவே வாழ்கிறோம். யாராவது ஒருவர் 'ஹலோ' என்று சொல்லலாம். 'வணக்கம்' என்று சொல்லலாம். முகத்தைத் திருப்பிக் கொள்வதால் நட்பு வளராது.

(தொடரும்)

-தமிழ்வாணன்-

# சிறுவருக்கு கல்வி, பாதுகாப்பு கிடைத்தால் துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்படும்

## சிறுவர் தின நிகழ்வில் நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், ஒக்.17

சிறுவர்களுக்கான உரிமைகள் மீறப்படும் போதே துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றன. இதனால் சிறுவர்கள் தமது உரிமைகளைத் தாமாகவே தட்டிக் கேட்க முன்வரவேண்டும் என்று கே.என்.எச்.நிறுவன நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் அன்ரனி விமலன் தெரிவித்தார்.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த 7 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற சிறுவர் தின நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்தும் போதே அன்ரனி விமலன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர்களின் முக்கிய உரிமையாக படிப்பு, பாதுகாப்பு என்பன உள்ளன. இந்த இரண்டு உரிமைகளும் சிறுவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பெற்றோர்களாலோ, பாதுகாவலர்களாலோ இந்த உரிமைகள் வழங்கப்படாவிட்டால் அதனைச் சிறுவர்கள் தட்டிக் கேட்க வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்களால் தற்போது பாடசாலை செல்லாத சிறுவர்கள் இனங்காணப்படுவதன் நோக்கம் அவர்களுக்கான கல்வி உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவே. அத்துடன் சிறுவர்களுக்கான தகுந்த பாதுகாப்பு கிடைக்காத பட்சத்தில் குறிப்பாக 14 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள்.

எனவே சிறுவர்களுக்கான உரிமைகள் சரிவர பெற்றுக் கொடுக்கப்படவேண்டியது அவசியமாகும். சிறுவர்களுக்கான நீதிமன்றம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை, யாழ்ப்பாணம் பெற்றுள்ளது என்றால், சிறுவர்கள் பாதுகாக்கப்படுவதே நோக்கமாக உள்ளது.

வடக்கு, தெற்கு என தற்போது சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது. சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றன. சிறுவர்கள் தமது உரிமைகள் என்ன என்பதை அறிந்து கொண்டு அவற்றைத் தாமாகவே பெற்றுக் கொள்ள வேண்டும். முக்கியமாக கல்வி, பாதுகாப்பு உரிய முறையில் கிடைக்கப் பெற்றால் துஷ்பிரயோகங்கள் தவிர்க்கப்படும் - என்றார்.

(எ-14)



தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் பிரதேச மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு காரைநகர் வியாவிலில் அமைந்துள்ள கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் காரைநகர் அபிவிருத்தி சபைத் தலைவர் க.சோமசேகரம் தலைமையில் இடம்பெற்றது. காரைநகர் கோட்டத்தில் சித்தியடைந்த 17மாணவர்களுடன் விருந்தினர்கள். (எ-250)

# போரின் பின்னர் மீண்டெழ வேண்டுமாக இருந்தால் எதிர்கால சந்ததி திடமானதாக உருவாக வேண்டும்

## உளநல மருத்துவர் தெரிவிப்பு

வவுனியா,ஒக்.17

போர் அழிவுக்குப் பின்னர், மீண்டெழவேண்டுமாக இருந்தால் எமது எதிர்கால சந்ததியினர் திடமானவர்களாக உருவாக்கப்பட வேண்டும் என்று வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல மருத்துவர் எஸ்.சிவதாஸ் தெரிவித்தார்.

''விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்'' எனும் தொனிப்பொருளில் சர்வதேச உளநல தின நிகழ்வு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிவதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்களாக இருக்கின்றவர்கள் மனச்சோர்வுக்கு உள்ளாகுவது மிகக் குறைவு. ஏனெனில் காலையில் இருந்து புன்னகையுடனும், குதூகலத்துடனும், துடிப்புடனும் இருக்கும் பிள்ளைகளுடன் பணியாற்றுபவர்களுக்கு மனச்சோர்வு உருவாகுவது மிகக்குறைவாகும். சில சூழ்நிலைகளில் ஒரு வகுப்பில் 30 முதல் 40 மாணவர்களைச் சேர்த்து நெருக்கடியை உருவாக்கினாலும் சந்தோஷமான தொழில் ஆசிரியத் தொழில்.

மனச்சோர்வு இந்த உலகத்தில் அதிகரித்துச் செல்கின்றதா? அல்லது மிகைப்படுத்தப்படுகின்றதா? என்பது தொடர்பில் பார்க்கப்பட வேண்டியுள்ளது. பொதுவாக உளமருத்துவத்தில் உளச்சிதைவு நோயின் வீதம் அதிகரிக்கப்படவில்லை. அது உயிரியல் அடிப்புடையைக் கொண்டது. எனவே உயிரியல் அடிப்படையைக் கொண்ட மனச்சிதைவு நோய் மாற்றமடையாது காணப்படுகின்றது. ஆனால் மனச்சோர்வு அதிகரித்துச் செல்வதாக கூறப்படுகின்றது. மனச்சோர்வு என்றால் என்ன என்று பார்க்க வேண்டிய தேவையுள்ளது. மனச்சோர்வு என்பது மனித வாழ்க்கையில் தவிர்க்க முடியாத ஓர் அங்கம்.

மனச்சோர்வு என்பது வியாபார நோக்கத்திற்காக ஊதி பெருப்பிக்கப்பட்ட ஒரு விடயமாகவே என்னால் பார்க்கமுடிகின்றது. தவிர்க்க முடியாமல் சில நாள்கள் மனச்சோர்வில் இருந்து மெல்ல மெல்ல விடுபட்டு தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதை நான் ஓர் இயைபாக்கம் என்றே கருதுகின்றேன். அதனை ஒரு நோய் என்று சொல்ல முடியாது.

இன்று முள்ளிவாய்க்காலுக்கு சென்றால் அங்குள்ள மக்கள் ஏதோ தோண்டிக்கொண்டிருக்கின்றார்கள். ஏதோ எடுக்கின்றார்கள். பழைய பதுங்கு குழிகளைத் தோண்டுகின்றார்கள். அதிலிருந்து பேணிகள் வருகின்றன. உடைகள் வருகின்றன. அரிக்கன் லாம்பு வருகின்றது. அவற்றில் எல்லாப் பொருளும் இருக்கின்றனவா? உறவுகள் இருக்கின்றனரா? என்று கவலைப்படும் சமூகத்தைப் பார்த்து நீங்கள் மனச்சோர்வுடன் இருக்கின்றீர்கள் என்றால் அது முட்டாள்தனம். மனச்சோர்வு ஓர் இயைபாக்கம்.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் மாணவர்கள் சிலர் ''கிளிநொச்சி மாவட்டம் பின்தங்கிப் போய்விட்டது. இதனை நாம் முன்னோக்கிக் கொண்டு வர வேண்டும்'' என்கின்றனர். போர் இடம்பெற்ற பிரதேசத்தில் மாணவர்களின் பெறுபேறு சில காலத்திற்கு பின்தங்கிச் செல்வது இயல்பானது. பின்தங்கியதை முன்னேற்றலாமே தவிர பின்தங்கியதைக் குறையாகச் சொல்ல முடியாது. பின்தங்கியது அசாதாரணமானதல்ல. போர் அசாதாரணமானது. அசாதாரண நிலைக்கு முகம் கொடுத்தவர்கள், எந்த நெருக்கடிக்கும் முகம் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் அவற்றிலிருந்து மீள் எழ வேண்டும்.

மனப்பிரச்சினையுள்ளவர்கள் அதனை உடல் பிரச்சினையாக அடையாளப்படுத்தி வருகின்றனர். அதனை நோயின் அறிகுறியாக உருவாக்கிக் கொள்கின்றார்கள்.

இன்று பாடசாலை மாணவர்கள் மத்தியில் 'சந்தோஷமாக வாழுதல்' என்பது அவர்களது நிகழ்ச்சி நிரலில் கிடையாது. பெற்றோர்களும் அவர்களது வாழ்வில் அதனை இணைப்பதற்கு முயற்சிப்பதில்லை. பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே திடமாகவும் மகிழ்ச்சியாகவும் வளர்க்க வேண்டும் - என்றார். (எ-421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

**விளம்பர முகவர்கள்:** 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ரிக்ஸ்' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311.


## தொடர்கிறது போர்

காணி அபகரிப்புப் பிரச்சினை முற்றி இப்போது பிரதேச சபைத் தலைவர் ஒருவர் இனந்தெரியாதநபர்களால் தாக்கப்படும் அளவுக்குச் சென்றுவிட்டது.

காணிகள் என்பது வடக்கு கிழக்கு மக்களைப் பொறுத்தவரையில் வெறுமனே சொத்து என்பதாக மட்டும் இல்லை. அது அவர்களின் இருப்புச் சம்பந்தமானது.

''போருக்குப்பின் வேறு வழிகளுக்கு ஊடாகப் போர் தொடர்கிறது என வடக்கு-கிழக்கு நிலைமைகளைப் பற்றி அவதானிகள் குறிப்பிடுகிறார்கள். நில அபகரிப்புக்கு எதிராக எழும் குரல்கள், நிலம் மக்களின் வாழ்வாதாரத்திற்கு அவசியமான உற்பத்திச்சாதனம் மட்டுமல்ல அதற்கும் அப்பால் அது அவர்களின் கூட்டு அடையாளத்தின் பொருள் ரீதியான அடித்தளமாகவும் அத்துடன் இணைந்த சுலபமாக அளவிடமுடியாத அகரீதியான குறியீட்டு விழுமியங்களின் உறைவிடமாகவும் விளங்குகிறது எனும் உணர்வையும் எதிரொலிக்கின்றன. அத்துடன் நில அபகரிப்பு ஒருவித மனித பாதுகாப்புப் பிரச்சினையுமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் மனித பாதுகாப்பே மக்களின் சீவனோபாயச் செயற்பாடுகளின் முன்நிபந்தனையாகிறது. இந்த நிலை பல குடும்பங்களின் வாழ்வாதார மற்றும் நீண்டகால தனிமனித விருத்திக்கு உதவும் சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்துகிறது அல்லது மறுக்கிறது.''

– இவ்வாறு இன்றைய நிலை குறித்த தனது பார்வையை வெளிப்படுத்தியுள்ளார் நோர்வே நாட்டில் உள்ள 'வாழ்வு அறிவியல் பல்கலைக்கழக'த்தின் அபிவிருத்தி கற்கைத் துறைப் பேராசிரியராக இருக்கின்ற என்.சண்முகரத்தினம்.

அவர் குறிப்பிடுவதைப் போலவே ''நில அபகரிப்பு இப்போது ஒருவித மனித பாதுகாப்பு பிரச்சினையுமாகி விட்டது''. நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தாக்கப்படுவதற்கு முன்னதாகவே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். நில அபகரிப்பால் தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரத்துக்கான அடிப்படை வழியை இழந்துவிட நேர்கிறது என்று அர்த்தப்படுத்தியே அவர் அதனைக் குறிப்பிட்டிருந்தார். எனினும் அதையும் தாண்டி இன்று நில அபகரிப்பு தனி மனித உயிர்களைக் குடிக்கக்கூடிய ஆபத்தையும் தோற்றுவித்துள்ளது.

வடக்கு – கிழக்கில் உள்ள மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கையில், வாழ்வாதாரத்துக்கே திண்டாடிக் கொண்டிருக்கையில் படையினருக்கு நிலங்கள் ஏன்? என்பதுதான் எழும் கேள்வி. பலாலியில் படையினர் விவசாயம் செய்ய முடியும் எனில் அதே நிலத்தில் மக்கள் ஏன் விவசாயம் செய்ய முடியாது? மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியில் 6 பரப்புக் காணியில் இராணுவ முகாமை எதற்கு அமைக்கிறார்கள்.

புவியியல் ரீதியிலோ இராணுவ மூலோபாய ரீதியிலோ இதுவரையில் தேவைப்படாத ஓர் இடத்தில் இராணுவ முகாம் அமைக்க வேண்டிய தேவை என்ன? தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களில் இராணுவத்தினரை நிறுத்துவதன் மூலம் இனக்கலப்புச் செய்வது இந்தத் திட்டத்தின் உள்நோக்கமாக இருக்கும் என்ற கருத்தை நிராகரிப்பதற்கு என்ன நியாயங்கள் இருக்கின்றன?

அப்படிப் பார்க்கையில் பேராசிரியர் குறிப்பிடுவது போல் போர் வேறு வழிகளில் தொடரத்தானே செய்கிறது. திணிக்கப்படும் அந்தப் போரை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள்? அல்லது அந்தப் போரில் இருந்து தப்பிப் பிழைக்கும் மார்க்கம் அவர்களுக்கு இருக்கிறதா? என்பன சிந்தனைக்கு உரியவையே!

# பாம்புகளும் பரமசிவன் கழுத்தும்

**செந்தூரி**

''குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள் அல்லது குறிக்கோள்களை அடைவதற்கானதொரு கட்டமைக்கப்பட்ட ஒழுங்கில் ஒழுகுகின்ற, இரண்டு அல்லது மேற்பட்ட நபர்களுடைய இணைவு - ''நிறுவனம்'' எனப்படுகின்றது. முகாமைத்துவத்துறை விற்பன்னரான பார்ஹர் பொலெட் எனும் அறிஞர் 1941 ஆம் ஆண்டில் சொல்லிச் சென்ற வரைவிலக்கணத்தின் இலகுபடுத்தப்பட்ட தமிழாக்கம் இது! ''குறித்துரைக்கப்பட்ட'', ''கட்டமைக்கப்பட்ட'' ''ஒன்றிணைக்கப்பட்ட'' போன்ற வினையெச்சங்களுக்குள் ''குறிக்கோள்'', ''ஒழுங்கு'', ''நபர்கள்'' எனும் பெயர்ச் சொற்கள் கச்சிதமாகப் பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள குறித்த நிறுவலினுள், வினையெச்சங்களின் பிரசன்னமில்லாத போது, பெயர்ச்சொற்களிடம் வெறுமையே எஞ்சும் என்பதை கொஞ்சம் மூன்றாம் கண் திறந்து பார்த்தால் தெரிந்துகொள்ள முடியும் எவராலும். வெறும் கற்களாலும், சாந்தினாலும் மரத்தினாலும் முடிக்கப்பட்ட ''வீடு'', மனிதர்களும், உணர்வுகளும், அன்பும், பண்பும் இணைந்து பின்னால் ''இல்லம்'' ஆக மாறுவதை மேலே கூறப்பட்ட நிலைமைக்கு இன்னொரு உதாரணமாக்கிட முடியும்.

அரச இயந்திரத்தின் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் என்பனவும், பொது வரைவுக்குள் அகப்பட்டுக் கொள்வதனால் சகல நிபந்தனைகளுக்குமான எழுத்துருவில் அரச, தனியார் என பாகுபடுத்தப்படுவதில்லை. இன்றைய நாள்களில் ஐரோப்பிய தேசங்களில் பிரபல்யமடைந்து வருகின்ற ''காகிதமற்ற அலுவலகங்கள்'' *(Paperless offices)* போன்ற புரட்சியாக'' மனிதர்களற்ற அலுவலகங்கள்'' எனும் மாற்றம் நிகழுமாயின் மட்டுமே உணர்வுகளற்ற நிறுவனங்களை தாபன விதிக் கோவையுடன் 100 வீதம் ஒத்துப் போகின்றவையாக இறுக்க முடியும் என்பது யதார்த்தம். தவிர, என்பு தோல் போர்த்த, இரத்தம் சுழன்றோடும், சிரிக்கும் விலங்குகளால் அங்கத்துவம் வகிக்கப்படுகின்ற நிறுவனங்கள் யாவையும், ''நெகிழ்வு'' எனும் மரியாதைக்குரிய பிரயோகத்துடனான ''விதிவிலக்கினை''ப் பெறுவதிலிருந்து தவறுவதேயில்லை.

எல்லா அதிகாரிகளும், எல்லாப் பணியாளர்களும் எல்லாச் சேவகர்களும் அரசின் அங்கங்கள் என்பதற்கு மேலாக யாரோவொரு தாயின் மகள் யாரோவொரு தந்தையின் மகள், அங்காடியிலிருந்து திரும்பும் பெண்ணின் கணவர், எதிர்ப்படும் மனிதனின் துணைவி, அந்தப் பேருந்திலிருந்து கைகாட்டும் குழந்தையின் தந்தை, வெள்ளிக்கிழமை முடிந்த சந்தோஷத்தோடு போகின்ற மாணவனின் தாய் போன்ற வகிபாகங்கள் உணர்வுபூர்வமானவையா? இல்லையா? இன்னமும் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டுச் சொல்ல வேண்டுமாயின் ''யாவருமே மனிதர்கள்'' இல்லையா? கண்ணீர், வலி, துக்கம், சிரிப்பு, அழுகை போன்ற வெளிப்பாடுகளை வீசிவிட்டுத்தான் அலுவலகம் வருபவர்கள் இல்லை எவருமே!

போரின் அவலங்களைத் தாண்டியும் மக்களுக்கு சிறப்பான சேவையாற்றியவர்கள் என்கின்ற எழுதாப்பெருமை வடக்கு - கிழக்கின் தமிழ் பேசும் அரச ஊழியர்கள் பற்றி நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ளவர்களால் இன்னும் பேசப்படுகின்றது. ஆனால் இன்றைய தமிழ் பேசும் பகுதிகளின் அரச நிர்வாகிகள் உண்மைத் தோலின் மேலுள்ள வியாதிகளை இன்னும் எத்தனை நாளைக்கு 'பழைய' அரிதாரங்களால் பூசி மெழுகி மறைத்திட முடியும்? குறிப்பாக 'வடமாகாண சபை'யின் தொற்று நோயாளர் விடுதி, அதிகார, ஏதேச்சாதிகார, நோயாளிகளால் நிரம்பி வழிவதை என்ன வகை 'ஸ்டிக்கர்' ஒட்டி மறைக்கப் போகின்றோம்?

இன்றைய திகதி வரைக்கும் வெளித்தெரிகின்ற முறைகேடுகள் வெகு நிலவாகவும், அறியப்படாத அவலங்கள் மிகப் பலவாகவும் சடுதியாக ஆர்முடுகுகின்ற 'நிர்வாக - நகரம்' என்ற சொல் வடமாகாண சபையைப் பொறுத்த மட்டில் மிகையில்லை. இராணுவ மிடுக்கும், இதயக் கோளாறும் கடும் போட்டியிருக்கின்ற 'கடவுள் பாதி, மிருகம் பாதி கலந்த' மனிதனின் மீதான புகார்கள், குற்றப்பட்டியல்கள் மீதான விசாரணைகள் என்றைக்குமே தீர்வு கண்டுவிடாத பேரினவாதத்தின் ஜனநாயக 'வால்வில்' உள்ள பெரும் அடக்குமுறை அடைப்பு. அது மாத்திரம்தான், பிரச்சினைகளின் ஏக புத்திரன் என்றால், தலைகீழாக நின்றாகினும் தலை முழுகி விடலாம்! இருக்க, இன்றைய இடங்களை தக்க வைக்கவும், நாளைய இடங்களை முன் பதிவுறுதி செய்யவும், நேற்றைய காலாவதிகளை நீடிக்கவும் கருதி, ஆறறிவிலிருந்து ஐந்து, நான்கு என்று அதல பாதாளத்துக்குள் மனிதமிழக்கும் எம்மவர்கள்தானே முதன்மைச் சிக்கல்கள்.

பிரிக்கப்பட்டதன் பின் இன்னமும், மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற பிரகிருதிகள், மன்னிக்க, பிரதிநிதிகள் சபை ஒன்று தோற்றுவிக்கப்படாமல் இருப்பது மட்டுமே இவையாவைக்குமான 'சர்வரோக நிவாரணி' என்று எடுத்த எடுப்பிலேயே கம்பீரம் காட்டிவிட முடியாது. காரணம், 'வீழ்த்திவிட முடியாத மாகாண சபை' என்று தொடை தட்டி, 'ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி'யின் மூக்குக்கு முன்னால் சபதம் செய்யுமளவுக்கு, மீதமிருந்த கொஞ்சநஞ்ச 'விரல் வித்தை'யையும் சற்று முன்னரே ஹசன் அலியிடமும் ஹக்கீமிடமும் காவு கொடுத்த, வலி சுமக்கும் உணர்வாளர்கள் எவரும் துணிந்து விடப் போவதில்லை. (பார்த்தீர்களா, கடைசியா 'முன்னணி' பெயரைச் சரியாகவே எழுதிட்டோமே!)

''மூன்றுநாள் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் கோரி வரும் சுற்றறிக்கை கடிதங்களைக்கூட ஊழியர்களிடம் மறைப்பது'', ''தேவை நிமித்தம் விண்ணப்பிக்கின்ற தற்காலிக இடமாற்றக் கோரிக்கைகளைக்கூட முற்றவிக்காமல் முடக்குவது'', ''ஊக்குவிப்புக் கொடுப்பனவு, பதவியுயர்வுகள், சம்பள ஏற்றங்களுக்கான விண்ணப்பங்களை பரிந்துரைக்கான ஒப்பமிடாமல் இழுத்தடிப்பது'' என்று விசமத்தனமாகத் தொடங்கும் அதிகார விசக் கொடுக்கின் தீண்டல்களால் பாதிக்கப்படாத 'வரலாற்றுத்தாள்' களும் 'ஆண்டறிக்கை' களும் வெகு சொற்பமே!

கடந்த மாதங்களில் அலுவலக மேசைகளில் கோப்புகளை விட அலாதியாக விரித்து வைக்கப்பட்டிருந்த சம்பவங்களான மகளிர் கல்லூரி அதிபர் நியமனத்துக்கும், முல்லைத்தீவிலிருந்து தீவகத்துக்கு தூக்கியடிக்கப்பட்ட வலயப் பணிப்பாளரின் இழுபறிக்கும் மேலதிகமாக இவ்வாரத் தொடக்கத்தில் தண்டனை இடமாற்றம் செய்யப்பட்ட முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் இன்றைய பொம்மைக் கதிரைக்கும் காரணமான முன்னோட்டங்களே, புளிக்காத அவல்!

இற்றைக்கு சரியாக மூன்று மாதங்களுக்கு முன்பாக, வலி.தெற்கு - சுன்னாகம் பிரதேச சபைக்கென்று பூரணப்படுத்தி முடிக்கப்பட்ட அழகான கட்டடம், திறப்பு விழா காண்பதற்கு முன்னைய இரவு கழிவு எண்ணெய் ஊற்றி கண்டன அபிஷேகம் செய்யப்பட்டது - யாவர்க்கும் நினைவிருக்கும். அன்றைக்கு எத்தி விளையாடப்பட்ட எண்ணெய் கழிக்கப்பட்ட வாகனத்தின் இலக்கத்தைக்கூட கண்டு பிடிக்கும் அதிகாரமும், கையில் வெண்ணையும் இருக்கின்ற போதிலும் தண்டிக்கப்பட்டது யார்?

வலி.தெற்கு பிரதேச சபையின் தவிசாளரிடம் கட்டடத்தின் சாவியை ஒப்படைத்த நேரடிக் காரணியாக அடையாளம் காணப்பட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரை பெயரே இல்லாத பதவியொன்றுக்கு இட்டு நிரப்பி ஆத்ம திருப்தி கண்டுகொண்டது அதிகாரி மையம். கட்டட ஒப்பந்தக்காரருடனான உடன்படிக்கை வாசகங்களின் பிரகாரம், வலி.தெற்கு பிரதேச சபையிடம்தான் புதுக்கட்டடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்கின்ற விடயம், அத்திபாரக் கல்லோடு சேர்த்து இடப்பட்ட விடயம். புதுக்கட்டடத் திறப்பு விழா ஆளுநரின் முதன்மையிலிருந்து தவறி, சபையின் மக்களதிகாரத்தைக் கைவசம் கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரிடம் சென்றுவிடக் கூடாதென்கின்ற அழுக்காறு, ஆயுத முனையில் மிரட்டி அசிங்கப்படுத்துமளவுக்கு துணிச்சலைக் கொடுத்துக் கெடுத்தது. காட்டுக் கந்தோர் ஒழுங்கையின் சார்பில், களமிறங்கச் செய்தது 'ஸ்ரான்லி வீதி' தான் என்பது, 'ஆடியபாதம் வீதிக்கு' மட்டுமன்றி அனைத்துக் குடாநாட்டுக்கும் தெரியும் என்றாலும், தவறே இல்லாத விடயத்துக்காக தண்டிக்கப்பட்டிருப்பது, அன்றைக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பதவியில் இருந்த இளம் அதிகாரியும், அவர் சார்பில் பதிலொப்பம் இட்டிருந்த பதவிநிலை உத்தியோகத்தருமே!

மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட பதவிப் பொறுப்பில் இருந்த குறித்த இலக்கை, நிர்வாக சேவை தரமுடைய அதிகாரியின் 'பணிக்கூர்மை' யினால் கவனித்து அவரை மாகாண சபைக்குள்ளான பொறுப்பான பதவிக்குள் ஈர்ப்பதற்கு காரணமான பெரிய அம்மணியே! இன்றைக்கு தண்டனை இடமாற்றத்துக்கான உத்தரவினை ஏவிவிட்ட பெருமிதத்துக்கும் காரணமானவர் என்பது நிச்சயம் தற்செயலானதோ, துர்ப்பாக்கியமானதோ அல்ல! குறித்த நிகழ்வு பற்றிய ஒழுக்காற்று விசாரணைகள் நிலுவையில் இருந்துகொண்டிருக்கும் பொழுதே, அந்த அதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு புலமைப் பரிசில் ஒன்றுக்கான வாய்ப்புக்கள் விமானப் பயணச் சீட்டு வரை வந்து சடுதியாக நிறுத்தப்பட்டதும் கூடவா அரச கொள்கை? ''கழிவு முகாமைத்துவம்'' தனியே மாநகரசபைக்கு மட்டுமன்றி, முழு மாகாண சபைக்குமான துப்புரவாக்குதலின் அவசிய சேவை. ஏனெனில் 'தூக்க' வேண்டிய கதிரைகள் தொகை பெரிது! பெரிது!

*''An Administrator does right the things, A leader does right things''* — மொழி பெயர்த்தால் ''சரியாக்கிச் செய்பவன் — நிர்வாகி, சரியானதைச் செய்பவன் — தலைவன்''! என்றாகும் சரி என்பதை எண்ணமாகவேனும் கொள்ளாதவர்களை எவ்வாறு நிர்வாகிகளாகவோ, தலைவர்களாகவோ காணப்போகின்றோம்.

எதிர்க்கட்சி வேட்பாளரை, தனது அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கும் பெருந்தன்மையும், எதிரில் நின்றவனையும் பக்கத்தில் வைத்துப் பார்க்கும் பக்குவமும் இருந்ததால்தானே, இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்புகூட கொடுமைப்படுத்தப்பட்ட அமெரிக்க கறுப்பினத்திலிருந்து வெள்ளை மாளிகைக்கு வரமுடிந்தது ஒபாமாவினால்! எங்களால், பழைய பூங்காவில் முதிர் மரங்களின் சாவின் மேல் பங்களா கட்டி, பளிங்குக்கல் பதித்துப் பால் காய்ச்ச மட்டுமே முடிந்தது!!

''யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஆள்கள் போக இயலாத நேரம், சோதினை எழுதி பதவிக்கு வந்தவைக்கு இவ்வளவுதானே மண்டை'' என்கின்ற அவப்பெயர்களும், அதே உயரதிகாரிகள் பெண்களாயுள்ளபோது எக்கச்சக்கமாக வீசப்படுகின்ற 'தனிப்பட்ட வாழ்வின்' கறை ஊகங்களும் பொய்யாகிவிட வேண்டும் என்பதே எமது பிரார்த்தனைகளும்கூட! 'வாளி தூக்குதல்', 'சோப்புப் போடுதல்', 'ஐஸ் அடித்தல்', 'கொள்ளி சொருகுதல்', போன்ற கொள்கைத் தொடர்களை வசனங்களாக மட்டுமே வைத்திருக்க வடமாகாணத்தின் எல்லா மேலதிகாரிகளும் வரும் நாள்களில் மனது வைப்பார்கள் எனவும் நம்பு வோமாக!

''நான்'', ''நீ'' எனும்போது உதடுகள் ஒட்டுவதில்லை, ''நாம்'' என்கையிலேயே உதடுகள்கூட ஒட்டும் என்று அரச பேருந்துகளில் எழுதி வைத்தவர் கலைஞர் கருணாநிதி! காலக் கொடுமை என்னவெனில், 'ஆளுநர்' என்கின்ற போது ஒட்டாத உதடுகள் 'அமைச்சர்' எனும்போது இறுகி ஒட்டிக்கொள்வதை மீளவும் உச்சரித்து சரிபார்க்கும் நானும் நீயும் மட்டுமே அப்பாவித் தமிழர்களடா!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனமும் தொழிற் சங்க நடவடிக்கையும்

ஜயந்த தனபால
பேராசிரியர் சாவித்திரி குணசேகர

இலங்கையின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை என நாம் கருதிய விடயங்களுடன் தொடர்புடைய பொது மக்கள் கருத்துக்கள் குறித்து சில காலத்துக்கு முன்னர் ஊடக மாநாடு ஒன்றினை வெள்ளிக் கருத்துக்களம் நிகழ்த்தியது. நாம் மேலும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் (FUTA) தொழிற் சங்க நடவடிக்கை குறித்தும், தொடர்புடைய அனைத்து ஆர்வமுடையோரின் கலந்தாலோசனையினை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையுடனான தீர்வின் மூலம் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர வேண்டிய அவசரத்தையும் குறிப்பிட்டிருந்தோம்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் தொழிற்சங்க நடவடிக்கை ஏறக் குறைய 3 மாதங்கள் தொடரப்பட்டு, அரச பல்கலைக்கழகங்களை உண்மையில் செயலிழக்கச் செய்துள்ளது. பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கங்களுக்கும் அரசுக்கும் இடையே பேச்சுக்கள் மூலம் தீர்வினைக் காண பாரம் பரிய முகவர்கள் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் துணை வேந்தர்கள் போன்ற தனிநபர்கள் தவறியதால் மூன்றாம் தரப்பினரின் தலையீட்டிற்கு இட்டுச் சென்றுள்ளது. மிக அண்மையில் கௌரவ அமைச்சர் பசில் ராஜபக்ஷ-இவரது தலையீட்டால் தீர்வு காணப்படாத விடயங்கள் உறுதியாக சீக்கிரம் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் நம்பினர். இது நடைபெறவில்லை. வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் கல்வி ஊழியர்கள் இறுதியில் வேலைக்குத் திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில், அரசுக்குள் அக்கறையின்மையும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் தொழிற் சங்க நடவடிக்கையினை உதாசீனம் செய்யும் போக்கும் காணப்படுவது போன்று தெரிகின்றது. அரச ஊடகங்களில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத் தலைவர்களை இழிவுபடுத்தும் பிரசாரம் வளர்ந்து வருவதோடு, பல்கலைக்கழக் திட்டத்தில் இந்த தொழிற்சங்க நடவடிக்கை அரசுக்கு எதிராக திட்டம் தீட்டும் தீவிரவாத மற்றும் துணைக் குழு என்ற தோற்றத்தை உருவாக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகின்றது.

கல்விச் சமூகத்தினிடமிருந்து அதிகரித்து வரும் ஆதரவுடன் கூடிய தொழிற்சங்க நடவடிக்கையின் வலுவான பிரசாரம் எனத் தெளிவாகத் தெரிகின்றதை புறக்கணிக்க வேண்டாமென நாம் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். சமய பிரமுகர்களும் தமது கவலையினை தெரிவித்து பேச்சு வார்த்தை மூலமான தீர்வை எய்த உதவி வழங்க முன் வந்துள்ளன. பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் தொழிற்சங்க நட வடிக்கைகள் வெறுமனே ஊழியர் சம்பளங்களை உயர்த்தும் பிரசாரம் அல்ல. இது உயர் கல்வித் துறை மற்றும் அரச பல்கலைக்கழக திட்டத்தின் நலனுக்காக அரசு பதிலளிக்க வேண்டிய விமர்சிக்கக் கூடிய முக்கிய விடயங்களையும் எழுப்பியுள்ளது. இந்த விடயங்கள் தீர்வு காணப்படாதுவிடின், சிறந்த ஆசிரியர் களும் ஆராய்ச்சியாளர்களும் இல்லாமல், அல்லது இந்த நிறுவகங்களின் கற்பித்தல் மற்றும் கற்றல் சூழ்நிலையை வலுப்படுத்த சாத்தியமற்ற அதிருப்தி மற்றும் விரக்தியடைந்த கல்வி ஊழியர் சமூகத்தில் இருந்து பல்கலைக் கழகங்களை செயற்படுத்த கட்டாயத்துக்குட் படுத்தப்பட்ட சூழ்நிலையினை மாணவர்களும் பெற்றோரும் முகங்கொடுக்க வேண்டியேற்படும். போதிய வளங்களின் ஒதுக்கீடு மற்றும் பல்கலைக்கழக தன்னாட்சியை மற்றும் நிறுவக அமைப்புக்களை மற்றும் நிர்வாக செயற்பாடுகளை வலுப்படுத்தல் போன்றவற்றில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனம் பிரசாரம் பொருத்தமானதும் காலத்தின் தேவையுமாகும். இந்த நாட்டின் அரச பல்கலைக்கழகத் திட்டம் தாக்குபிடித்து மேலும் விருத்தியடைய வேண்டுமாயின் இந்த விடயங்கள் தீர்வு காணப்பட வேண்டும்.

**வெள்ளிக் கருத்துக்களம்**

ஆக்கபூர்வமான இணைப்பில் ஈடுபடும் நோக்குடன் ஒருமித்த நிலைக்கு வருவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறை நடவடிக்கைகள் எனக் கருதும் விடயங்களை முன்னிலைப்படுத்த விரும்புகின்றது. பிரச்சினைக்கு தீர்வு காண்டு அவர்களது மாணவர்கள் மற்றும் பொது மக்களின் நலனுக்காக பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளை மீள ஆரம்பித்து ஒருமிப்பை கட்டியெழுப்புவதன் மூலம் கல்வியாளர்களை இணங்கச் செய்ய வேண்டும்.

**வள ஒதுக்கீடு**

கல்விக்காக மொத்த தேசிய உற்பத்தியில் (GDP) உடனடி 6% ஒதுக்கீடு குறித்த கோரிக்கைக்கு பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனம் நெகிழ்வாயிருக்கும் என நாம் நம்புகின்றோம். அரசு தமது பாகமாக, கிரமமாக அதிகரித்து வரும் வளங்களில் தமது அர்ப்பணிப்பை, காலவரையறையுடனும் குறிப்பிட்ட நோக்கம் மற்றும் இலக்குகளுடன் வழங்க வேண்டும்.

**ஊழியர் சம்பளம்**

சம்பளம் தொடர்பான விடயங்கள் ஜிப்ரி ரணசிங்க அறிக்கைக்கு அமைவாக தீர்வு காணப்பட வேண்டும். மறைந்த பேராசிரியர் ஜிப்ரி அவர்கள் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் முன்னாள் முதல் வரும் துணைத் தலைவரும் ஆவார் என்பதோடு அவரது மறைவின் போது கற்றுக்கொண்ட பாடங்களுக்கான ஆணைக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டார்.

சிரேஷ்ட கல்வி நிர்வாகிகளாக இருந்த, பேராசிரியர்கள் ஜிப்ரி மற்றும் மலிக் இரணசிங்க அவர்கள் நிதி வளங்களின் ஒதுக்கீடு குறித்து அரசு எதிர்நோக்கும் நெருக்கடியையும் தகை மையுள்ள ஊழியர்களை தக்கவைக்க பல்கலைக்கழ கங் களுக்கு வழங்க வேண்டிய உறுதுணையையும் சமப்படுத்த வேண்டிய தேவையை நன்றாக அறிந்திருந்தனர்.

**பல்கலைக்கழக தன்னாட்சி**

இவை பல்கலைக்கழக தன்னாட்சி குறித்து உடனடியாகத் தீர்வுகாணப்படக் கூடிய பல்வேறு விடயங்களாகும்:

1978ஆம் ஆண்டு பல்கலைக்கழக சட்டம், 1985ம் ஆண்டு திருத்தத்தின் பிரகாரம், பிரிவு 34(1)(அ), பல்கலைக்கழக மன்றம் ஒன்றினால் பரிந்துரைக்கப்படும் 3 பெயர்கள் உள்ளடங்கிய குழுவொன்றிலிருந்து ஒருவரை துணை வேந்தர் பதவிக்கென நியமிக்க ஜனாதிபதிக்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பரிந்துரைக்க வேண்டும் என விளக்கு கின்றது.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு மூன்று மன்ற வேட்பாளர்களின் பெயர்களையும் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது. அவர் ஒருவரை தெரிவு செய்து துணை வேந்தர் பதவிக்கு யாரை நியமிப்பது என்பதை தீர்மானம் செய்வார். இந்த செயன்முறை பல்கலைக்கழக சட்டத் தினை மீறும் செயல் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

துணை வேந்தர்களின் நியமனத்தின் தற்போதைய நடைமுறையின் பொருத்தமற்ற தன்மை பல்கலைக்கழகச் சட்டத்தின் சீர்திருத்தத்தின் போது மீண்டும் மீண்டும் முன்னிலைப்படுத்தப்பட்டது. முன்னைய அரசுக்கு தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட வரைவு சட்டமூலத்தில் பல்கலைக் கழக நிர்வாக அமைப்புக்கள் எமது பிராந்தியம் உள்ளடங்கலாக மற்றைய நாடுகள் ஏற்றுக் கொள்ளும் நடைமுறையை பின்பற்றி துணை வேந்தரை நியமிக்கும் புதிய செயன்முறையை பரிந்துரைத்தது.

பல்வேறு பல்கலைக்கழகங்கள் பதவி வெற்றிடத்தை விளம்பரப்படுத்துவ தில்லை எனினும் பல்கலைக்கழக நிர்வாக அதிகாரங்களின் தேடல் குழுக்கள் மூலம் வேட்பாளர்களை இனங்கண்டு கொள்வர். தற்போதைய நடைமுறையின் வரையறைக்குள், பல்கலைக்கழக சமூகத்தின் நம்பிக்கையைக் கொண்ட மிகச் சிறந்த மன்ற வேட்பாளர் ஒருவரை பதவிக்கு பரிந்துரைக்க உறுதி செய்வது மிகவும் முக்கியமானதாகும். ஆணைக்குழுவில் செனட் பிரதிநிதிகளின் மூலம் மன்றத்திற்கு ஐந்து வேட்பாளர்களைக் கொண்ட குழுவை சிபார்சு செய்யுமாறு நாம் செனட்டிற்கு பரிந்துரைக்கின்றோம். ஆணைக்குழு இரகசிய தேர்தல் வைக்காமல், கடந்த காலத்தைப் போன்றே இணக்கப்பாட்டுடன் மூன்று நபர்களை தெரிவு செய்ய வேண்டும். வெளி நெருக்கடியின் காரணமாக, சட்ட திட்டங்களை மீறி எந்த துணைவேந்தரோ அல்லது முதல்வரோ பதவியேற்க அனுமதிக்கக் கூடாது.

**ஆணைக்குழுவுக்கு அங்கத்தவர்களை நியமித்தல்**

பல்கலைக்கழகச் சட்டம், 1985ஆம் ஆண்டு திருத்தத்தின் [illegible] பிரகாரம், மன்றத் தின் பல்கலைக்கழகம் சாரா அங்கத்தினர்கள், "கல்வி சார், தொழில் சார், வணிக சார், நிறுவ னம் சார் விஞ்ஞானம் சார் அல்லது நிர்வாகம் சார் துறைகளில் புகழ் பெற்ற பணியாற்றிய நபர்களில் இருந்து ஆணைக்குழுவால் நியமிக்கப்படுவர்" ஆகையால் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு பல்கலைக்கழக செனட்டுடன் கலந்தாலோசித்து மன்றத்துக்கு நியமிக்கப்பட மேற்கூறிய துறைகளில் இனங் காணப்பட்ட புகழ் எய்தியுள்ள நபர்களை மட்டுமே தெரிவு செய்யவதை உறுதி செய்யும் நோக்குடன் வழிகாட்டல்களை விருத்தி செய்ய வேண்டும். இத்தகைய வழிகாட்டல்கள், பல்கலைக் கழக நிர்வாக அமைப்புக்களில் பொருத்தமான தகைமைகளும் அனுபவங்களும் இல்லாமல் நபர்கள் நியமிக்கப்படுவதை தவிர்க்கும். மன்ற அங்கத்தவர்களின் தக மைகளும் அனுபவங்களும் அனைத்து பல்கலைக்கழக இணையத் தளங்களிலும் பொதுமக்கள் நுண்ணாய்விற்காக வழங்கப்படல் வேண்டும்.

**தகுதிகாண் பரீட்சை**

பல்கலைக்கழகச் சட்டத்தின் பிரிவு 46(1) செனட் "பல்கலைக்கழகத்தின் கல்வி அதிகாரம் கொண்டு காணப்படும்" சட்டத்தின் பிரிவு 15 (VII) மற்றும் 15 (V) பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் அனுமதியை தெரிவுசெய்யும் அதிகாரத்தை வழங்கியுள்ளதோடு, மன்றத்தின் கலந்தாலோசனையுடன், நிர்வாக அதிகாரம், வழங்கப்பட வேண்டிய பாடநெறிகள் மற்றும் பட்டப்படிப்பு பயிற்சிகள் போன்றவற்றை தீர்மானிக்கும் அதிகாரத்தையும் வழங்கியுள் ளது. பிரிவு 15(X) (C) 1985ம் ஆண்டு சீர்த் திருத்தத்தின் பிரகாரம், பல்கலைக்கழகங்களில் கற்பிக்க வேண்டிய பாடநெறிகள் மற்றும் ஒழுக்கங்களைத் தீர்மானிக்கும் அதிகாரத்தினையும் வழங்கியுள்ளது. ஆகையால், சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வண்ணம், தகுதிகாண் பரீட்சை போன்ற, ஒரு குறிப்பிட்ட பாடநெறி யின் கல்வித் தேவைகள், "கல்வி அதிகாரம்" கொண்ட செனட்டினால் தீர்மானம் செய்யப் பட வேண்டும்.

தகுதிகாண் பரீட்சைகளின் முகாமைத்துவம் குறித்து முறைகேடுகள் முன்வைக்கப்படுமாயின், இந்த முறைப்பாடுகள் பல்கலைக்கழக மன்றங்களுக்கும் செனட்டிற்கும் விசாரணைக் காகவும் பின்னர் மாற்று நடவடிக்கைக்காகவும் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். சட்டத்தின் பிரிவு 15 (XII) 1985ம் ஆண்டு சீர்த்திருத்தம் செய்யப்பட்டதன் பிரகாரம், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு "கல்வி முகாமைத்துவம் மற் றும் மாற்று நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள்" மேற்கொள்ளும் அதிகாரத்தை வழங்கியுள்ளது, ஆயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கியுள்ள அதிகாரங்களுக்கு மதிப்பு வழங்கி செனட் மற்றும் மன்றத்துடன் கலந்தாலோசனையில் ஈடுபடவேண்டிய தேவையுள்ளது. கட்டடக் கலை, வடிவமைப்பு அல்லது கலைப்பிரிவில் பாடநெறி பயில விரும்பும் மாணவர்களுக்கு தகுதிகாண் பரீட்சைகளின் தேவைப்பாட்டினை ஒருதலைப்பட்சமாக புறக்கணிக்கும் அதிகாரம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் அல்லது அமைச்சுக்கு இல்லை. மாணவர்களுக்கு தொழில்சார் பாடநெறியினை பயில தேவையான தகுதியுள்ளதா என்பதை தீர்மானிக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையே தகுதிகாண் பரீட்சைகளாகும்.

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் 6/08/2012 சுற்றறிக்கை இல 991 - பல்கலைக்கழக ஊழியர்களின் நியமனம் மற்றும் இதர சுற்றறிக்கைகள்**

கௌரவ உயர் கல்வி அமைச்சருடனான எமது பிரதிநிதிகளின் கூட்டத்தின் போது அண்மையில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வெளியிட்ட ஒரு சுற்ற றிக்கையில், அனைத்து தேர்வு குழுக்களிலும் இரண்டு வேட்பாளர்கள் நியமிக்கப்படுவதோடு, தேர்வுகளில் தடுப்பதிகாரத்தையும் வழங்கியுள்ள அண்மைய சுற்றறிக்கையினை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தையும் அவர்கள் கூறினர். சுற்றறிக்கை இல. 991 "பல்கலைக்கழக ஊழியர்களின் தெரிவினை ஒழுங்குபடுத்த, பொருத்தமான தெரிவுக் குழுக்களில் பங்குபற்றும் இரண்டு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வேட்பாளர்களில் ஒருவராயினும் தெரிவினை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றும் "இரு அங்கத்தவர்களும் தெரிவில் உடன்படாத பட்சத்தில், அத்தகைய நியமனங்கள் தெரிவுக் குழுவினால் பரிந்துரைக்கப்படக் கூடாது" எனவும் கூறுகின்றது. நியமனங்களில் வேட்பாளர்களில் ஒருவர் அல்லது இருவரினதும் தடுப்பதிகார செயற்பாடு பல்கலைக்கழக தன்னாட்சியிலும், இந்த நிறுவகங்களுக்கு ஊழியர்களை நியமிக்க பல்கலைக்கழகத்திற்கு உள்ள சுயாதீனத்திலும் முன்னெப்போதுமில்லாத சீரழிவினை ஏற்படுத்துகின்றது.

1985ம் ஆண்டு சீர்த்திருத்தப்பட்ட சட்டத்தின் பிரிவு 15(IX) யின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு பதவியமர்வு மற்றும் ஊழியர் களின் நியமங்களுக்கான நடைமுறை களையும், ஊழியர்களின் தரங்களையும் ஒவ்வொரு தரத்திலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையும் பற்றிய திட்டங்களை வரையும் அதிகாரத்தை மட்டுமே வழங்கியுள்ளது.

பல்கலைக்கழக ஊழியர் தெரிவில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வேட்பாளர்களால் பிரயோகிக்கப்படும் இந்த தடுப்பதிகாரம் உண்மையான தெரிவுகளில் தலையிடுவதோடு, பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ அதிகாரம் கொண்டுள்ள மன்றத்திற்கும், கல்வி அதிகாரம் கொண்டுள்ள செனட்டிற்கும் வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான அதிகாரங்களுக்கு முரணாகவும் செயற்படுகின்றது. தற்போது இந்த அங்கமே தேர்வுக் குழுக்களிற்கு உறுப்பினர்களை சிபார்சு செய்வதோடு இந்த தெரிவுகள் பல்கலைக்கழகத்தின் மன்றத்தினால் மட்டுமே அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும்.

சட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்டதும் உச்ச நீதிமன்றத்தின் பரிபாலனத்துக்கும் உட்பட்ட பல்கலைக்கழக தன்னாட்சி கொள்கைக்கு ஒவ்வாத எதேச்சையான சுற்றறிக்கைகளை பிரகடனப்படுத்துவதை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தவிர்ப்பது மிகவும் முக்கியமானதாகும். கல்விச் சமூகம் தமது கருத்துக்களை முன்வைக்கக்கூடிய வெளிப்படையான கலந்தாலோசனைச் செயற்பாடு பல்கலைக் கழக தன்னாட்சிக்கு மதிப்பை உறுதி செய்ய உதவும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் சிந்தித்து மேற்கொண்ட பெரிய கொள்கை மாற்றங்கள் முன்னைய காலங்களில் இத்தகைய கலந்தாலோசனை செயன்முறையின் கீழ் விடயங்களை பல்கலைக்கழக செனட் மற்றும் மன்றத்திற்கு அனுப்பி வைத்து ஏற்றுக் கொண்டுள்ளது.

**தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி**

இந்த நிகழ்ச்சி குறித்து எமது கருத்துக்களை முன்வைத்தோம் என்பதோடு இடைநிலை பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கிடைத்த வேறுபட்ட சலுகைகளின் பிரகாரம், மாணவர்களுக்கான "வாழ்க்கைத் திறன்கள்" நிகழ்ச்சியின் கூறாக உடல் பயிற்சி மற்றும் சமூகத் திறன்கள் விருத்தி கருத்தினை நாம் வரவேற்கின்றோம். எனினும், பல்கலைக்கழகங்களில் கற்றல் கற்பித்தல் சூழலிற்கு இராணுவ நோக்குடன் கூடிய தலைமைத்துவ திட்டம் முரணாகவே காணப்படுகின்றது. இத்தகைய நிறுவகங்கள் இராணுவ படையணியை வழங்காமல் அறிவார்ந்த ஆர்வத்தைத் தூண்டும் பண்பையும் சுயாதீனத்தையும் உருவாக்க வேண்டும். பல்கலைக்கழக பீடங்களில் புதிய மாணவர்களுக்கான ஆரம்ப கற்கை நெறியின் பகுதியாக இந்த நிகழ்ச்சித் திட்டம் பல்கலைக்கழகங்களால் கொண்டு நடத்தப்பட வேண்டும் என மீண்டும் கோரிக்கையை முன்வைக்கின்றோம். மாறாக, இந்த நிகழ்ச்சித் திட்டம் மாகாண ரீதியாகவும் இடைநிலைப் பாடசாலைகளில் உடல் பயிற்சி மற்றும் வாழ்க்கைத் திறன்களை மையமாகக் கொண்டு சிறப்பான வசதிகளுடன் இராணுவ தலையீடு இல்லாமல் நடத்தப்படலாம். பகிஸ்தானின் கல்வித் துறையின் சேவைகளில் இராணுவம் செயல் திறனோடு செயற்பட்டது என்றும் இந்த அனுபவம் இரட்டிப்படைய வேண்டும் என்றும் சில தரப்பினரால் கூறப்படும் கருத்து, எமது கல்வித் துறையினை சீரமைக்க முயற்சிக்கும் இலங்கைக்குப் பொருத்தமாயிருக்காது. எமது அரசமைப்பு ஜனநாயகத்திற்கு அர்ப்பணிப்பைக் கோருகின்றது இராணுவ ஆட்சிக்கு அல்ல.

(குறிப்பு: இந்த அறிக்கை சென்ற வாரத்தில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தினால் கைவிடப்பட்ட தொழிற்சங்க நடவ டிக்கைக்கு முன்னால் தயாரிக்கப்பட்டது. எனினும் நாம் இதனை வெளியிடுகின்றோம், ஏனெனில் இதில் வழங்கப்பட்டுள்ள பொதுக் கொள்கைகள் இன்னமும் பொருத்தமானதாகவே உள்ளன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபம் கொள்ளாதே

தருமபுத்திரனும், பீமசேனனும் அண்ணன் தம்பி என்பதை நாம் அறிவோம். ஆனால் இந்த இரு சகோதரர்களுக்கும் குணத்தில் வேறுபாடு இருந்தது. தருமபுத்திரன் எந்தக் கால கட்டத்திலும் கோபத்துக்கு உட்படாதவனாக இருந்தான். ஆனால், பீமசேனன் கோபமும் மூர்க்கத்தனமும் கொண்டவனாக விளங்கினான்.

வஞ்சக சகுனியின் சூதாட்டத்தால் நாடு... நகரங்களை இழந்தார்கள் பாண்டவர்கள். தன் தம்பியரையும் பணயம் வைத்து தோற்றுப் போனான் தருமபுத்திரன். கடைசியில் பாஞ்சாலியையும் பணயம் வைத்து இழந்தான். துரியோதனன் பஞ்சாலியைச் சபை நடுவே நிறுத்தி அவமானம் செய்ய முயன்றான். இதனைக் கண்ட பீமனுக்கு அடங்காத கோபம் எழுகிறது.

''நாடு, நகரங்களை இழந்தார் பொறுத்துக் கொண்டோம். செல்வங்கள் அனைத்தையும் வைத்து இழந்தார் பொறுத்துக் கொண்டோம். எம்மையும் பணயம் வைத்தார் சகித்துக் கொண்டோம். ஆனால் துருபதன் மகளைப் பணயம் வைத்ததைப் பொறுப்பதற்கில்லை. தம்பி சகாதேவா...! எரிதழல் கொண்டு வா... அண்ணனின் கையை எரித்திடுவோம்'' என்கிறான் அவன்.

அப்போது அர்ச்சுனன் குறுக்கிட்டு, ''பீமசேனனன் கருத்தினைக் கண்டனம் செய்து பேசுகிறான்.... அண்ணா... யாரைப் பார்த்து இக்கொடிய வார்த்தைகளைப் பேசினாய்? எவருடைய முன்னிலையில் இத்தகாத வார்த்தைகளைப் பேசினாய்...? தருமத்தின் மறு வடிவமான நம் அண்ணனைப் பார்த்து இப்படிப் பேச உனக்கு எப்படி மனம் வந்தது....?

தருமத்தின் வாழ்வுதனைச் சூது கௌவும்... ஆனால் தருமம் மறுபடியும் வெல்லும். காண்டீபம் உண்டு... போர்க்களத்தில் அதன் வெற்றியைக் காண்பாய்... பொறுத்திரு...'' என்று அவன் கூறுகிறான்.

பாண்டவர்களில் மற்றவர்கள் அனைவரும் அமைதியாக இருக்க, பீமன் மட்டும் கோபாவேசம் கொண்டு தரும புத்திரன் மீது சுடு சொற்களை வீசினான். அப்போதும் தருமபுத்திரன் அமைதியாகவே இருந்தான். குருசேத்திர யுத்தத்தில் கௌரவர்களை அழித்து மீண்டு பாண்டவர்கள் அரசைக் கைப்பற்றி ஆட்சி செய்தார்கள்.

தங்கள் நூறு புதல்வர்களையும் இழந்து துரியோதனனின் பெற்றோராகிய திருதராட்டினனும், காந்தரியும் மிகவும் துன்பமுற்று வருந்திக் கொண்டு இருந்தார்கள். அந்தச் சமயம் தருமபுத்திரன் திருதராட்டிரனைத் தன் தந்தையாகப் பாவித்து பணிவிடைகள் செய்தான். அவனுடைய உண்மையான அந்தப் பணிவிடைகள் காரணமாகத் திருதராட்டிரன் ஆறுதல் அடைந்தான். அவனும் தரும புத்திரனைத் தன் மகனாகவே கருதினான்.

ஆனால் அந்தச் சமயத்திலும் பீமசேனன் கோபமும், மூர்க்கத்தனமுமாகவே நடந்து கொண்டான். கொடியவனாகிய துரியோதனனின் இரத்தத்தைத் தண்ணீர் போல் பருகினேன். அவனைக் கொன்ற இந்தக் கைகளில் சந்தனத்தை நான் பூசிக் கொண்டிருக்கின்றேன். எங்களுடைய உணவை இந்தக் கிழவன் வெட்கமின்றி தின்று கொண்டிருக்கின்றான். இவன் வாழ்வதால் என்ன பிரயோசனம்...? என்று அடிக்கடி திருதராட்டிரன் மனம் புண்படும்படி அவன் பேசி வந்தான். இந்தச் சுடு சொற்களைத் தாங்க முடியாததால் அவன் காந்தாரியை அழைத்துக் கொண்டு கானகம் செல்ல முடிவு செய்தான்.

தருமபுத்திரன் எவ்வளவோ தடுக்க முயன்றும் முடியவில்லை. ''தருமபுத்திரா... அரசனாக ஆட்சி செய்தவன் சிலகாலம் வனவாசம் செய்து பரம்பொருளை நாட வேண்டும். அப்படிச் செய்வதால் அந்தப் பலன் உனக்கும் வந்து சேரும். என்னைத் தடுக்க வேண்டாம்'' என்று கூறிவிட்டு அவன் கானகம் சென்றான்.

அதன்பிறகு அவன் அஸ்தினாபுரம் திரும்பவே இல்லை. கானகத்திலேயே அவன் உயிர் பிரிந்தது. அரசனாக ஆட்சி செய்தவன் கானகத்தில் சிறிது காலம் வசிக்க வேண்டும் என்கிற விதியை அவன் கூறியது உண்மைதான் ஆனால், பீமனின் சுடு சொற்களைத் தாங்க முடியாமல் தான் அவன் நாட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றான்.

திருதராட்டிரனைப் பொறுத்த வரையில் இயற்கையாக ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்வானோ அதுபோல் நடந்து கொண்டான். எல்லா நீதிகளையும் அறிந்திருந்த அவன் தன் மகன் துரியோதனனுக்குப் பல அறிவுரைகளைக் கூறினான். பாண்டவர்களைத் தேவர்களாலும் வெல்ல முடியாது. அவர்களை நீ பகைக்காதே.... அவர்கள் உன் சகோதரர்கள். இந்தப் பெருமையை நீ பயன்படுத்திக் கொண்டால் உன்னைப் பகை கொண்டு எவரும் தாக்க முடியாது. இருப்பதை வைத்துக் கொண்டு கவலை இன்றி இந்தப் பூமியை ஆண்டு வா என்று அவன் புத்திமதிகளைக் கூறினான்.

தீயவனான துரியோதனன் தன் தந்தையின் வார்த்தைகளை கேட்கவில்லை. ஒன்று நான் வாழ வேண்டும். அல்லது பாண்டவர்கள் வாழட்டும். அவர்களுக்கு கட்டுப்பட்டு இந்தத் துரியோதனன் உயிர்வாழ விரும்பவில்லை என்று அவன் உறுதியாகக் கூறி விட்டான். புத்திரபாசமுள்ள திருதராட்டினன், வேறு வழியின்றி அவன் போக்குக்கே விட வேண்டியதாயிற்று.


ஆகவே புத்திரர்களை இழந்து வயது முதிர்ந்த திருதராட் டினனை பீமசேனன் இத்தகைய சுடு சொற்களால் துன்பப்படுத்தி இருக்கக்கூடாது. அவனுடைய முரட்டு சுபாவமும், கோபமும்தான் இப்படி அவனைப் பேச வைத்தன. ஆனால், தருமபுத்திரன் அவ்வாறு கோபம் கொள்ளாமல் கடைசி வரை திருதராட்டினனிடம் அன்பு காட்டிப் பணி விடைகள் செய்தான். இந்த இரு சகோதரர்களின் குணம் வேறுபாடுகளுக்கு ஏற்றாற்போல் அவர்களுடைய இறுதிக் கட்ட முடிவு நேர்ந்தது.

அர்ச்சுனனின் பேரனாகிய பரீட்சித்துவுக்கு பட்டம் கட்டிவிட்டு பாண்டவர்களும் திரௌபதியும் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டார்கள். அப்போது எல்லோரும் விழுந்து மாண்டு போகிறார்கள். ஆனால் தருமபுத்திரன் மட்டும் இறக்கவில்லை. பொறுமையும் நீதியும் நிறைந்தவனாக அவன் இருந்த தால் யமன் கூட அவனை நெருங்க முடியவில்லை. ஆனால் கோபமும், முரட்டுத் தனமும் பீமனின் குணங்களாக இருந்ததால் அவன் விழ வேண்டியதாயிற்று.



**பரமஹம்ஸ ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்**

# நுண்நிதி நடவடிக்கையை மேற்கொள்ளும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனம்



*(கடந்த வாரத் தொடர்ச்சி..)*

**கர்ணன்**

நல்லொழுக்க நிறுவனத்தைப் பொறுப்பேற்ற தலைவர் நா.கண்ணதாசன் இவ்வாண்டில் (2009) நிறுவனம் எதிர்கொள்வது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்:-

போரூட் நிறுவனம் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரை தனது திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்குடன் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தை பங்காளர் நிறுவனமாக ஏற்று திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது. ஆனால் போரூட் நிறுவனத்தின் இவ்வாண்டு (2009) திட்ட செயற்பாடுகளின் மாற்றம் காரணமாக எமது நிறுவனத்திற்கு அவர்களிடமிருந்து எந்தவித திட்டங்களும் கிடைக்காத பட்சத்தில் எமது நிறுவன நிர்வாகச் செலவை ஈடுசெய்வது கஷ்டமாக இருந்தது. எனினும் நிர்வாகக் குழுவின் ஆதரவோடும், உத்தியோகத்தர்களின் அனுபவத்தோடும், நுண்நிதித் திட்ட செயற்பாட்டின் மூலம் அங்கத்தவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்தை எம்மால் இயன்றவரை செயற்படுத்துகிறோம்.

போரூட் அமைப்பானது பங்காளியாக இருந்த எமது வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தை விடுவித்தாலும் இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் நல்லொழுக்க நிறுவன தொழில் பரப்பில் உள்ள பிரதேச செயலாளர்கள் அனுமதியுடன் நடைமுறைப்படுத்த முனைந்துள்ளதால் வடமராட்சி நல்லாழுக்க நிறுவனத்துக்கு ஒரு பயனுறுதித் தன்மையாக அமையும் என எதிர்பார்க்கலாம். பிரதேச செயலர்களின் ஆலோசனைகளும், அனுசரனைகளும் எமது நிறுவனத்தில் பிரதான செயற்பாடான நுண்நிதித் திட்டத்தினை செயற்படுத்த துணை நின்றன. அத்தோடு பயனுறுதி பெற்ற அங்கத்தவர்களின் அங்கத்துவ அமைப்புகளை ஏனைய அங்கத்துவ அமைப்புக்கள் கவனத்திற்கொண்டு எமது நிறுவனத்திற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இந்த எமது நிறுவனம் வடமராட்சியில் நுண்நிதித்திட்ட செயற்பாட்டில் முன்மாதிரியான நிறுவனமாகத் திகழ வாழ்த்துகின்றேன் எனக் குறிப்பிட்டிருந்தார்.

> **வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் செயற்பாடாக நுண்நிதி நடவடிக்கைகளை அங்கத்துவ கிராமங்களிடையே இந்த நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. அந்தத்திட்டத் திற்கமைய வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த அங்கத்தவர்களுக்கு கிராம அமைப்புக்களில் விசேட கடன் நடைமுறைகளை அறிமுகப் படுத்தி, 13 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 60ஆயிரம் ரூபா கடனாக அங்கத்துவ கிராம மக்கள் ஊடாக இவ்வாண்டு (2009) வழங்கப்பட்டது.**

இந்த நிதியாண்டில் கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் இரு கிராம அமைப்புக்களும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இரு கிராம அமைப்புக்களும் புதிதாக நல்லாழுக்க நிறுவனத்துடன் இணைந்ததுடன் மொத்தமாக 34 கிராம அமைப்புக்கள் அங்கத்துவ அமைப்புக்களாக இயங்கி வந்தன.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து கணுக்கால், கரவெட்டி வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், மண்டான் கிராம அபிவிருத்திச் சங்கமும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இருந்து, புலோலி கிழக்கு கூழாவடி திருவருள் சனசமூக நிலையமும், அல்வாய் வடக்கு அம்மன் கோவிலடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமுமே புதிதாக இணைந்து கொண்ட அங்கத்துவ அமைப்புகளாகும். மொத்தமாகவுள்ள அங்கத்துவ அமைப்புகளில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 19 அமைப்புக்களும், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் இருந்து 15 அமைப்புக்களும் அங்கத்துவம் பெற்றிருந்தன.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் இவ்வாண்டு (2009) செயற்பாடாக வழமையான திட்டங்களுடன் மரம் நடுகை, வன்னி இடம்பெயர்வு உதவி, செவிப்புலனற்றோர் உதவி ஆகிய புதிய திட்டங்களுமாக 4 செயற்பாடுகள் செயற்படுத்தப் பட்டன.

வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்தும் செயற்பாடாக நுண்நிதி நடவடிக்கைகளை அங்கத்துவ கிராமங்களிடையே இந்த நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. அந்தத்திட்டத்திற்கமைய வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்த அங்கத்தவர்களுக்கு கிராம அமைப் புக்களில் விசேட கடன் நடைமுறைகளை அறிமுகப்படுத்தி, 13 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 60ஆயிரம் ரூபா கடனாக அங்கத்துவ கிராம மக்கள் ஊடாக இவ்வாண்டு (2009) வழங்கப்பட்டது.

இந்த நிதியாண்டில் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அந்தணன் திடல், அல்வாய் தெற்கு, அல்வாய் கிழக்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 8 பயனாளிகளுக்கு விவசாயத்திற்கும் அந்தணன் திடல் கிராமத்தைச் சேர்ந்த மற்றொரு பயனாளிக்கு கால் நடை வளர்ப்புக்குமாக மொத்தம் 9 பயனாளிக்கு 2 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் போதராமடம் துறையாமூலை, வல்லிபுரம், பொலிகண்டி மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 70 பயனாளிகளுக்கும் விவசாயம், கடற்றொழில், வெதுப்பகம், கால்நடை, அரைக்கும் ஆலை, பனங்கட்டி உற்பத்தி ஆகியவற்றுக்கென 43 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டது. இதில்வெதுப்பக உற்பத்திக்கு ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாவும் பனங்கட்டி உற்பத்திக்கு 6 பேருக்கு ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபாவும், கடற்றொழிலுக்கு 28 பேருக்கு 19 லட்சத்து 15 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்பட்டமை முக்கிய அம்சமாகும்.

மதுபாவனையைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுத் திட்டத்தின் கீழ் மதுபாவனையால் ஏற்படும் தீங்குகளை சமுதாயத்தினரிடையே எடுத்துரைப்பதன் மூலம் மாற்றத்தை உருவாக்கும் எண்ணக் கருவில் வளர்ந்து வருகின்ற சமுதாயமாகிய மாணவர்களிடையே விழிப்புணர்வுக் கருத்தரங்கு நான்கு பாடசாலைகளில் நடத்தப்பட்டது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை புலோலி புற்றளை மகா வித்தியாலயம், கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி, கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கில் 218 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இவற்றோடு மதுபாவனையால் ஏற்படும் பாதிப்புக்களையும், மதுபாவனையற்ற சந்தோஷமான குடும்பத்தைப் பிரதிபலிக்கும் படத்தைக் கொண்டதான 2010 ஆம் ஆண்டுக் கலண்டர்கள் 500 பிரசுரிக்கப்பட்டு குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மதுபாவனையைத் தடுத்தலுக்கான விழிப்பு ணர்வு நிகழ்வாக சர்வதேச நல்லொழுக்க தினத்தில் கரவெட்டி பிரதேச செயலர் மண்டபத்தில் வளவியலாளர்கள் மூலம் சிறப்புச் சொற்பொழிவும், இசை நிகழ்வும் நடத்தப்பட்டன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடும் பனிமூட்டம் குறித்து சாரதிகளுக்கு எச்சரிக்கை



நுவரெலியா,ஒக்.17

மத்திய மலைநாட்டில் தற்போது அதிக மழையுடனான காலநிலை நிலவுகின்றது. இந்தக் காலநிலையுடன் சில இடங்களில் அதிக பனி மூட்டமும் காணப்படுகின்றது.

கொழும்பு - ஹற்றன் பிரதான வீதியில் அதிக பனிமூட்டம் நிலவுகின்றது. இதனால் வாகன சாரதிகள் சிரமத்துடன் தமது வாகனங்களைச் செலுத்துகின்றனர். எதிரில் வரும் வாகனங்கள் மின் விளக்குகளை ஒளிரவிடாமல் வரும் சந்தர்ப்பங்களில் வாகனங்களை அடையாளப்படுத்த முடியாது சாரதிகள் சிரமப் படுகின்றனர்.

எனவே வாகனச் சாரதிகளை அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ச)

## பாடசாலை வளாகத்தில் திடீர் வெடிப்புகள்

### மாணிக்கக் கல் அகழ்வே காரணம்

ஹற்றன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ திறேசியா தமிழ் வித்தியாலயத்துக்குச் சொந்தமான வளாக நிலங்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பாடசாலைக்குச் சொந்தமான இடங்களில் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வு பிரதேச மக்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் காரணமாகக் குறித்த பாடசாலை வளாகம் முழுவதும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது என்று வித்தியாலயத்தின் அதிபர் தெரிவித்தார்.

கடந்த ஒரு வாரமாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை அதிக வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன என்று பாடசாலை மாணவர்கள் தெரிவித்தனர். (ச)

# கல்முனையில் பிரதேச சபை இதுவரையில் அமையாதது ஏன்?

### தமிழர்கள் திட்டமிட்டுப் புறக்கணிப்பு என்கிறார் கலையரசன்



எருவில்,ஒக்.17

8 ஆயிரத்திற்குக் குறைவான மக்கள் தொகுதியைக் கொண்ட இறக்காமத்தில் பிரதேச சபையை அமைக்க முடியுமாக இருந்தால் 21 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களைக் கொண்ட கல்முனையில் ஏன் மாநகரசபையும், பிரதேச சபையும் அமைய முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் கேள்வி எழுப்பினார்.

கிழக்கு அபிவிருத்தியில் தமிழ் மக்கள் அரசாலும், அதனுடன் சேர்ந்துள்ளோராலும் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டுவருகின்றனர் எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று கூட்டமைப்பின் சார்பில் கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவான த.கலையரசனை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது தமிழ்ச் சமூகம் அன்றிலிருந்து இன்றுவரைக்கும் பல வழிகளிலும் ஒதுக்கப்பட்ட சமூகமாகவே இருந்து வருகின்றது. அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மூன்று இனங்கள் வாழ்ந்து வரும் சூழ்நிலையிலும் அனைத்துக்கும் சமமான பங்கீடுகள் எப்போதுமே வழங்கப்படாமை வரலாற்று உண்மைகளாகும். அந்தவகையிலேதான் கல்முனையிலுள்ள பிரதேச சபையும் எந்தவித அதிகாரமும் அற்ற நிலையிலேதான் தற்போதும் இயங்கிக்கொண்டு வருவதைப் பார்க்கமுடிகின்றது.

அதுபோன்றுதான் ஏனைய இடங்களைப் போன்று கல்முனையிலும் பிரதேச சபை அமையாதது தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் ஒரு கேள்விக்குறியாகவே அமைந்து காணப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலை அரசு திட்டமிட்டு நடத்தியமையால், இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தநிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவேண்டும் என்ற நிலையில் நாமும் எமது தலைமைகளும் செயற்பட்டோம். ஆனால், நிலை வேறாக மாறிவிட்டது.

சிறுபான்மைச் சமூகத்துக்காக கொண்டுவரப்பட்ட கிழக்கு மாகாணசபையும், அதன் அதிகாரங்களும் முதலாவது மாகாணசபை அமர்விலே மாகாணசபைக்கான அதிகாரங்களைப் பிடுங்கி எடுக்கும் திட்டமாகவே 'திவிநெகும' சட்ட வரைபு நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதனை நிறைவேற்றுவதற்காக முஸ்லிம் கட்சிகளும் துணைபோய்விட்டன. இந்தச் சட்ட நிறைவேற்றம் சிறுபான்மை மக்களுக்குச் செய்த பெரும் துரோகமாகும்.

இன்று உங்கள் முன் மாகாணசபை உறுப்பினராகத் தெரிவாகி இருக்கும் எனக்கு நீங்கள் ஒவ்வொருவரும் அளித்த வாக்கானது எனக்காக அல்ல, தேசியத்தின்பால் பற்றுக்கொண்டு அரசியல் உரிமையைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளீர்கள். இதற்காக எமது மக்களின் இனவிடுதலைக்காக எனது அரசியல் பயணம் தொடரும். இதனை எவரும் தடுக்கவோ, மறுக்கவோ முடியாது.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் முடிவுற்ற நிலையில் இன்று 'திவிநெகும', 'தேசத்தின் மகுடம்' போன்ற திட்டங்கள் மூலம் ஏனைய பிரதேசங்களைவிட, தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மிகவும் குறைவான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டமை தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்படும் செயலாகும்.

தமிழர்களின் காணிகள் நாளாந்தம் அரசின் சதி முயற்சியால் அபகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பல வீனப்படுத்தும் செயற்பாடுகளையும் அரசு செய்துகொண்டு வருகின்றது. இந்த நிலைக்கு நாம் ஒருபோதும் அடிபணியக்கூடாது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஒன்றுபட்டு தமிழ் இனத்தின் விடிவுக்காக குரல் கொடுக்கவேண்டும்.- என்றார். (ச-31)



வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு தரிசனம் விழிப்புலனற்றோர் பாடசாலையின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பில் ஊர்வலம் நடைபெற்றது.

## ஓட்டோ மோதி ஒருவர் சாவு

அம்பாறை,ஒக்.17

அம்பாறை, தம்பிலுவில் பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை மாலை ஓட்டோ மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தம்பிலுவிலைச் சேர்ந்த கணேசபிள்ளை கோணேசமூர்த்தி (வயது 36) என்பவரே குறித்த விபத்தில் உயிரிழந்தவராவார்.

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த இவர், திடீரென கீழே விழுந்துள்ளார். இதனால் பின்னால் வந்துகொண்டிருந்த ஓட்டோ இவர் மீது மோதியுள்ளது என்று திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர். மதுபோதையில் நடந்து வந்துகொண்டிருந்தபோதே இவர் திடீரென கீழே விழுந்துள்ளார் என்று பொலிஸார் கூறினர். (ச)

## இழுத்து மூடப்பட்டது மது நிலையம்

### கல்முனை முதல்வர் உத்தரவு



கல்முனை,ஒக்.17

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மணச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள மதுபான விற்பனை நிலையத்தை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல், மறு அறிவித்தல் வரும்வரை மூடுமாறு கல்முனை முதல்வர் சிராஸ் மீரா சாஹிப் உத்தரவிட்டுள்ளார்.

மணச்சேனையைச் சேர்ந்த மத வழிபாட்டு தலங்கள், விளையாட்டுக் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொதுநல அமைப்புகள் உள்ளிட்ட 15 இற்கு மேற்பட்ட நிறுவனங்கள் கல்முனை முதல்வரிடம் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு இணங்கவே இந்த உத்தரவை முதல்வர் பிறப்பித்துள்ளார். (ச)

## புதிய தொழிற்சங்க சம்மேளனத்தில் நிபந்தனையுடன் இணையத் தயார்

### தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் கூறுகிறார்

நுவரெலியா,ஒக்.17

மலையகத்தில் கூட்டு ஒப்பந்தம் மற்றும் சம்பள உயர்வு விடயங்களை முன் வைத்து புதிய தொழிற்சங்க சம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையைத் தொழிலாளர் தேசிய சங்கம் வரவேற்றுள்ளது. அத்தகைய புதிய சம்மேளனத்தின் அங்கத்தவர்கள், இலக்குகள், நோக்கங்கள் போன்றன கலந்துரையாடல் மூலம் தீர்மானிக்கப்பட வேண்டியவை என்பதிலும் நாம் உறுதியாகவுள்ளோம் என்று தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் பி.திகாம்பரம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கூட்டு ஒப்பந்தம் காலாவதியாகும் ஒவ்வொரு காலப் பகுதியிலும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள் கொள்கையளவில் உடன்பாட்டுடன் குரல்கொடுத்து வந்துள்ளன. அத்தகைய கொள்கையளவு உடன்பாட்டு அடிப்படையிலான கூட்டு செயற்பாடுகள் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கு மாத்திரமன்றி கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் மலையகத் தொழிற்சங்கங்கள் மீதும் ஓர் அழுத்தத்தைக் கொடுத்து வந்துள்ளன.

இந்தநிலையில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து கொள்கையளவில் மாத்திரமன்றி, புதிய மலையகத் தொழிற்சங்கங்களின் சம்மேளனமாக செயற்பட முன்வருவதானது, ஒப்பந்த தரப்பினரிடையே மேலும் அழுத்தத்தைக் கொடுக்கும். இது ஓர் உபாயம் என்ற வகையில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் மனோகணேசனின் அழைப்பைக் கொள்கையளவில் வரவேற்கிறோம்.

இந்த நிலைமையில் புதிய தொழிற்சங்க சம்மேளனத்தின் இலக்குகள், நோக்கங்கள் குறித்து கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

### டெங்கை அசட்டை செய்ததால்

மட்டக்களப்பு,ஒக்.17

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேசத்தில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாக இருந்ததாகக் கூறப்படும் இருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஏறாவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஏறாவூரில் பழைய சந்தை வீதியை அண்மித்த பகுதியில் இந்த மாதம் டெங்கு நோய்த் தாக்கம் காரணமாக 5 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், புகை அடித்தலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பெரியவர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுவீர்கள். உங்களின் பொறுப்பான பணி சிறந்து பாராட்டுப்பெறும். தொழில், வியா பாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டு. பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். உத்தியோகத் தர்களுக்கு பாராட்டு வெகுமதி கிடைக்கும்.

**இடபம்:** ஒவ்வொரு செயலிலும் முன்யோச னையுடன் செயற்படுவீர்கள். மாறுபட்ட சூழ் நிலையும் அனுகூலம் தருவதான புதியமாற்றம் தரும். தொழில், வியாபாரம் வளர தேவையான உதவி கிடைக்கும். சராசரி பணவரவுடன் உபரிபண வருமானமும் உண்டு.

**மிதுனம்:** எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்கக் கூடாது. தொழில், வியாபார இலக்கு நிறைவேற அதிக உழைப்பு அவசியம். பணவரவு எதிர்பார்த்த வகையில் கிடைக்கும். புதிய இனங்களில் கூடுதல் பணச்செலவு ஏற்படலாம்.

**கடகம்:** உங்கள் மனதில் உள்ள விரக்தி பேச்சில் வெளிப்படலாம். பிறரிடம் வாக்கு வாதத்தை தவிர்ப்பதால், நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள போட்டியை புதிய யுக்தியால் சரிசெய்வது அவசியம். உத்தியோகத்தர், பணியாளர்களை அனுசரித்து வேலை வாங்குவதால், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**சிங்கம்:** நீங்கள் எதிர்பார்த்த காரியம் வெற்றிச்செய்திதரும். உறவினர், நண்பர்களின் பாராட்டுக் கிடைத்து, மனதில் மகிழ்ச்சி கொள்வீர்கள். தொழில்,வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பணவரவில் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**கன்னி:** உங்கள் மனதில் தைரியம் அதிகரிப்பதால் மட்டுமே செயல்களில் எதிர் பார்த்த அனுகூலம் கிடைக்கும். குடும்ப உறுப் பினர் ஆதரவாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரம் சிறக்க அதிக பணி புரிவீர்கள். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் ஏற்படும்.

**நாளை**

ஐப்பசி -02 வியாழன் 18.10.2012
திதி: திருதியை மு.ப. 11.53வரை
நட்சத்திரம்: அனுசம் பி.இ 04.19 வரை
சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 07.32- 09.02 வரை
ராகுகாலம்: 1.32- 03.02 வரை

**துலாம்:** உங்கள் பேச்சில் மங்கலத்தன்மை மிகுந்திருக்கும். புதியவர்கள் அறிமுகமாகி நட்பு பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சி பணி இலக்கு எளிதாக நிறைவேறும். பணப் பரிவர்த்தனையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**விருச்சிகம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். நிதானத்தைப் பின்பற்று வதால் எதிர்காலத்தில் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் உள்ள இடர்களைச் சரிசெய்வீர்கள். செலவுகளுக்கான பணத்தேவை அதி கரிக்கும்.

**தனுசு:** உங்களுக்கு இடையூறாக செயற்பட்ட ஒருவர் விலகிப்போவார். பூர்வீகசொத்தில் பெறுகிற பணவருமானம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**மகரம்:** உங்கள் செயலில் சமயோசிதத்தன்மை நிறைந்திருக்கும். வாழ்க்கையில் வளம்பெற புதிய அனுகூலம் உருவாகும். நண்பருக்கு இயன்றளவில் பண உதவி செய்வீர்கள். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு, ஊக்கத்தொகை பெறுவர்.

**கும்பம்:** எதிர்பாராத வகையில் அவசரப் பணி ஒன்று ஏற்படலாம். செயல்களை மனப்பூர்வமாக நிறைவேற்றுவதால் மட்டுமே, உரிய பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் சீர்பெற நண்பரால் உதவி உண்டு. அளவான பணவரவினால் சேமிப்புப் பணத்தை முக்கிய செலவுக்கு பயன்படுத்துவீர்கள்.

**மீனம்:** சமூக நிகழ்வுகளால் உங்கள் மனதில் மாறுபட்ட சூழ்நிலை இருக்கும். குடும்பத்தில் எவருடனும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். சிக்கன பணச்செலவு செய்வதால், சிரமம் பெருமளவு குறையும். கண்களின் பாதுகாப்பில் கூடுதல் கவனம் தேவை.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | | 6 | | | 8 | | |
| 9 | 8 | 5 | | | | | 2 | |
| 3 | | | 2 | | | | 9 | 1 |
| | | | 4 | 1 | | 6 | | 8 |
| | 4 | | 7 | | 6 | | 5 | |
| 6 | | 3 | | 9 | 2 | | | |
| 5 | 3 | | | | 4 | | | 2 |
| | 7 | | | | | 9 | 1 | 4 |
| | | 1 | | | 7 | | 6 | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 5 | 7 | 6 | 4 | 1 | 8 | 9 | 3 |
| 3 | 4 | 9 | 7 | 8 | 2 | 6 | 5 | 1 |
| 6 | 1 | 8 | 5 | 3 | 9 | 4 | 2 | 7 |
| 5 | 3 | 1 | 9 | 7 | 4 | 2 | 6 | 8 |
| 7 | 6 | 2 | 8 | 1 | 5 | 9 | 3 | 4 |
| 9 | 8 | 4 | 2 | 6 | 3 | 1 | 7 | 5 |
| 8 | 9 | 5 | 1 | 2 | 7 | 3 | 4 | 6 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 4 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



கொழும்பிலுள்ள இரண்டு பிரபல பாடசாலைகளின் மாணவர் குழுவிற்குள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மோதல் ஏற்பட்டது. கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகில் ஏற்பட்ட இந்த மோதலை பொலிஸார் தலையிட்டு நிறுத்தியுள்ளனர்.

# பொருள்களின் விலைகளை உயர்த்தும் முயற்சியில் அரசு

**ரவி கருணாநாயக்க எம்.பி. குற்றச்சாட்டு**



கொழும்பு,ஒக்.17

வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னரே பொருள்கள், சேவைகளுக்கான விலையை உயர்த்துவதற்கு அரசு முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிமெந்து, சிகரட், கோழி இறைச்சி, மதுபானம் உள்ளிட்ட பல பொருள்களின் விலைகளை அரசு ஏற்கனவே உயர்த்தியுள்ளது.

எதிர்வரும் நாள்களில் பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளும் உயர்த்தப்படும்.

மக்களை நெருக்கடிக்குள் ஆழ்த்தும் நோக்கில் அரசு இவ்வாறு பொருள்கள் சேவைகளுக்கான விலைகளை உயர்த்தி வருகின்றது.

அரசு பெற்றுள்ள கடனுக்காக வருடாந்தம் 65609 கோடி ரூபா வட்டியாக அரசு செலுத்தி வருகின்றது.

இந்தக் கடனைச் செலுத்துவதற்காகவே மக்கள் மீது வரிச் சுமை திணிக்கப்படுகிறது.- என்றார். (ச)

# மாணவருக்கும் மாரடைப்பு; எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு,ஒக்.17

பாடசாலை மாணவர்களுக்கு மாரடைப்பு நோய் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 89 வீதமானவர்கள் உடற்பயிற்சி எதனையும் மேற்கொள்வதில்லை. 5 வயது தொடக்கம் 19 வயது வரையிலான மாணவர்கள் நாளொன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலமேனும் உடற் பயிற்சி செய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 17 வீதமானவர்கள் உடல் எடை கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால் பாடசாலை மாணவர்களில் 10 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சில தசாப்தங்களுக்கு முன்னர் நீரிழிவு, மாரடைப்பு போன்ற தொற்றாத நோய்கள் பெரியவர்களுக்கு மட்டுமே ஏற்பட்டன. தற்போது மாணவர்களுக்கும் இந்த நோய்கள் ஏற்படுகின்றன என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச)

# சுற்றறிக்கைகள் சிங்களத்தில்; தடுமாறும் அஞ்சல் அதிகாரிகள்

**தேசிய மொழிகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்படும் என்கிறார் பைஸர்**

கொழும்பு,ஒக்.17

அஞ்சல் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தினால் அஞ்சல் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கைகள் யாவும் தனிச் சிங்களத்தில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுகின்றன என்று அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் யூ.எல்.எம். பைஸர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் அஞ்சல் மா அதிபதி எம்.கே.பி. திசாநாயக்கவின் காலத்திலிருந்து இவ்வாறான நடைமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போதைய அஞ்சல் மா அதிபர் டீ.எல்.பி. றோஹண அபேரத்னவிடம் இது தொடர்பாக பல தடவைகள் முறையிட்டும் இதுவரை ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறு தனிச் சிங்களத்தில் சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்படுவதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் தமிழ்மொழி பேசும் அஞ்சல் அதிபர்கள் மற்றும் உப அஞ்சல் அதிபர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக உப அஞ்சல் அதிபர்கள் தாய் மொழியிலேயே சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக சுற்றறிக்கைகளை வாசித்து விளங்கிக் கொள்வதில் சிங்கள மொழி தெரிந்த இன்னுமொரு நபரை நாட வேண்டியுள்ளது.

இது தொடர்பாக அஞ்சல் திணைக்களம் நடவடிக்கை எடுக்காதுவிட்டால் எதிர்காலத்தில் தேசிய மொழிகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்படும்.

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அஞ்சல் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்தில் அனுப்பி வைக்கப்படுவதால் அங்கு கடமை புரியும் அதிகாரிகள் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகள் அரச கரும மொழிகளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்படும் அனைத்து சுற்றறிக்கைகளும், கடிதங்களும் தனிச் சிங்களத்தில் அனுப்ப வைக்கப்படுவது தமிழ் மொழியில் கடமையாற்ற நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.- என்றார்.

அரசகரும மொழிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்போது தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ச)

# சமநிலையில் முடிந்துவிட்டது விரிவுரையாளர் போராட்டம்

**அமைச்சர் பஸில் கூறுகிறார்**

கொழும்பு,ஒக்.17

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் போராட்டம் யாருக்கும் வெற்றி, தோல்வி இன்றி சமநிலையில் தீர்க்கப்பட்டுள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மஹாநாயக்கர்களின் ஆலோசனையின் அடிப்படையில் செயற்பட்டதாலேயே இந்தப் பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வுகாண முடிந்துள்ளது என்று அவர் கூறினார்.

எனினும் அரசு வழங்கிய உறுதிமொழிகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றப்படாவிட்டால், மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பிக்க நேரிடும் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போது தற்காலிகமாகவே தங்களது போராட்டம் நிறை வுறுத்தப்பட்டுள்ளது. இந்த போராட்டம் நிலையாக நிறுத்தப்படுவது அரசின் செயற்பாடுகளிலேயே தங்கி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கை மீனவர்கள் மீது கடற்கொள்ளையர் தாக்குதல்

கொழும்பு,ஒக்.17

தெவிநுவர கரைக்கு அப்பால் சென்றுகொண்டிருந்த 5 இலங்கை மீனவர்கள் கடற்கொள்ளையர்களினால் தாக்கப்பட்டு கடலில் வீசப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வணிகக் கப்பலொன்றில் சென்றவர்களினால் இரண்டு மீனவர்கள் காப்பாற்றப்பட்டு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசலவர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இந்த இரண்டு மீனவர்களும் விசாரணை மேற்கொள்வதற்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

கடலில் வீசப்பட்டதாகக் கூறப்படும் ஏனைய 3 மீனவர்கள் பற்றிய தகவல் எதுவும் இவர்களுக்கு தெரியவில்லை என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# ஊழியர் சேமலாப நிதி வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.17

ஊழியர் சேமலாப நிதியை முறைகேடான வகையில் பயன்படுத்தியதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

11 தொழிற்சங்கங்கள் இணைந்து தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதியை வேறு நிறுவனங்களில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்ததால் தொழி லாளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மனுதாரர்கள் தெரிவித்தனர்.

மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், நிதி அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர உள்ளிட்ட 9பேர் மனுவில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# அரசு கடன் எல்லையை அதிகரிக்கத் தீர்மானம்

கொழும்பு,ஒக்.17

இந்த ஆண்டில் அரசின் கடன் எல்லையை ஆறாயிரம் கோடி ரூபாவால் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

முப்படை, இலங்கை மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குச் செலுத்த வேண்டிய கடனுக்காக ஆறாயிரம் கோடி ரூபாவுக்கு திறைசேரி கடன் பத்திரங்களை விநியோகிப்பதே அரசு கடன் எல்லையை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது.

இந்தநிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முப்படையினர் வழங்க வேண்டிய கடனுக்காக 950 கோடி ரூபாவுக்கும், இலங்கை மின்சார சபையினால் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்க வேண்டிய கடனுக்காக 5,050 கோடி ரூபாவுக்கும் திறைசேரியின் கடன் பத்திரங்கள் விநியோகிக் கப்படவுள்ளன.( ச)

# நட்சத்திர ஹோட்டல் உச்சிமுனைத்தீவில்

கொழும்பு,ஒக்.17

கற்பிட்டி உல்லாசப் பயணத்துறை வலயத்துக்குட்பட்ட உச்சிமுனைத் தீவில் சுமார் 450 ஏக்கர் நிலப்பரப்பில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் குறித்த நிலப்பரப்பை 107 கோடி ரூபாவுக்கு 99 வருட குத்தகைக்கு விட அரசு தீர்மானித்துள்ளது.

வரையறுக்கப்பட்ட செபயர் பே ரிசோர்ட் நிறுவனத்தினால் குறித்த ஹோட்டல் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த ஹோட்டல் நிர்மாணத்துக்காக குறித்த நிறுவனம் 16 கோடி அமெரிக்க டொலர்களைச் செலவிட தீர்மானித்துள்ளது. (ச)

# துப்பாக்கி முனையில் ரூ.15 லட்சம் கொள்ளை

**மோட்டார் சைக்கிள் கள் இரண்டில் வந்த கொள்ளையர்கள், பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்**

உனவட்டுன உல்லாசப் பயணிகள் ஹோட்டலொன்றின் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக வங்கியிலிருந்து எடுத்துச்செல்லப்பட்ட 15 லட்சம் ரூபா பணம், மோட்டார் சைக்கிள்களில் வந்த கொள்ளையர்களால் துப்பாக்கிமுனையில் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளொன்றில் குறித்த பணம் எடுத்துச்செல்லப்பட்டபோது, யக்தெஹிமுல்ல பகுதியில் வைத்து வழிமறித்துள்ள மோட்டார் சைக்கிள்கள் இரண்டில் வந்த கொள்ளையர்கள், சம்பளப் பணத்தைப் பறித்துச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மயில்வாகனம் பாக்கியலட்சுமி**

தோற்றம்
13★03★1938

மறைவு
29★09★2011

குடும்பத்தின் ஒளிவிளக்காய் குவலயத்தே மிளிர்ந்தாயே!
கூரறிவு கொண்டோராய் எமையென்றும் வளர்த்தாயே!
பாரினிலே பண்புயர் தெய்வமாய் திகழ்ந்தாயே!
பல்லாண்டு சென்றிடினும் மறவோமே உம்மை என்றும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

27/5, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(24452) (45.6.7)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
01.06.1955

இறைவன் அடியில்
17.10.2011

அமரர் **பிலிப்பையா அன்ரன் மரியதாஸ்**

ஓர் விடியல் ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்!
விண்ணில் விடி வெள்ளியாய்
போன பின்பும்
எங்கள் விழியில் ஈரம் தனைத் தந்ததேனோ?
அன்பு, பாசம் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் உங்கள் பிரிவால்
புலம்புகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
வேண்டும் என்று தினம்
பிரார்த்திக்கின்றோம்.

24/1, புது வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**மார்க்கண்டு ஜெயகாந்தன்**
(இளைப்பாறிய ஊழியர், இலங்கை மின்சாரசபை, வவுனியா)

வேலணை கிழக்கு,1ஆம் வட்டாரம் மணிய காரன் வீட்டடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் தற்போது வவுனியாவை இருப்பிடமாகவும் கொண்ட **மார்க்கண்டு ஜெயகாந்தன்** 14.10.2012 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு- மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மருமகனும், காந்தரூபியின் பாசமிகு அன்புக் கணவரும் ஜெனிற்றீன் (கனடா) பாசமிகு அன்புத் தந்தையும், சரண்யாவின் (கனடா) பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற விஜயகாந்தன் (முன்னாள் இலங்கை வங்கி ஊழியர்), இலட்சுமி காந்தன் (ஜேர்மனி), இராமாமணி (வவுனியா), விமலாதேவி (ஜேர்மனி), சிறிகாந்தன் (முன்னாள் இலங்கை வங்கி ஊழியர்,- பிரான்ஸ்), றோகினிதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு அன்புச்சகோதரனும், குலேந்திரன், பாலேந்திரன், நகுலேந்திரன், ஆனந்தரூபி, நிர்மலாரூபி, ஜெயரூபி, புஸ்பரூபி, விஜியரூபி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், பேபி அன்ரியின் (கிராண்ட்பாஸ்) பாசமிகு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 16.10.2012 பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2012) புதன்கிழமை நடைபெற்று தகனக்கிரியைகள் பொரளை கனத்தை மயானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/4, ஸ்டேஸ் றூட்,
கொழும்பு -14.

077 8128595,
0112440086

தகவல்:
மனைவி,
சகோதரர்கள்


## தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள்

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் மிருசுவில் பொது நூலகத்தினால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளை முன்னிட்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வாசிப்பை ஊக்கப்படுத்தல், பதாகை காட்சிப்படுத்தல், நூலக சிரமதானம், முன்பள்ளி மாணவர்களிடையே கதை கூறல் போட்டி, பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி, சித்திரப்போட்டி, வாசகரிடையே பொது அறிவுப் போட்டி என்பன நடைபெறவுள்ளன. அந்த வகையில் இன்று கட்டுரைப் போட்டியும் நாளை வியாழக்கிழமை சித்திரப் போட்டியும் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் இன்று மிருசுவில் நூலக மண்டபத்துக்குச் சமுகமளிக்குமாறு மிருசுவில் பொது நூலகர் தெரிவித்தார்.

## 15 ஆம் ஆண்டு நினைவுநாள்



மறைவு
17★10★1997

அமரர்
**கனகசபை நடேசன்**
(பங்காளர் சிவகணேசன் ரேக்ஸ்,யாழ்)

ஆண்டுகள் கழிந்தாலும்
என்றைக்கும் சிந்தையில்
நீங்காமல் நிற்பதெல்லாம்
நீங்கள் தந்த அன்பும்
கரிசனமும் தான்!

23, கோபால் லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
[சி/2017][5-6-7]

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 17 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21.04.1971

இறைவன் அடியில்
17.10.1995

**மயில்வாகனம் சிவதாசன்**



சீரோடும் சிறப்போடும் வாழவைத்து
காலமெல்லாம் உம் சிறப்பை நினைக்க
வைத்து ஞாலத்தில் எம்மை உயர்த்தி
விட்டு காலக் கடன் தீர்க்க
விரைந்ததேனோ......

(24430)(6.7.8)

குடும்பத்தினர்.

## அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் "பிரதீபா பிரபா" விருது - 2012
எமது மதிப்பிற்குரிய அதிபர்

**திரு.சுப்பிரமணியம் நடராசா**

Best Wishes

அவர்களுக்கு அதிபருக்கான
"பிரதீபா பிரபா" விருது 09.10.2012
அன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால்
வழங்கப்பட்டமையை முன்னிட்டு நாம் பெருமகிழ்வடைந்து
உள்ளம் உவந்து வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/அழகாபுரி வித்தியாலயம், இராமநாதபுரம், கிளிநொச்சி.

(24446)(2.6.7)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு
கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்க

## விசேட பொதுக்கூட்டம் 2012

இடம் : சங்க அலுவலக மண்டபம், நாவலர் மடம்
காலம் : 20.10.2012 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 9.30 மணி

தலைவர்: நா. மகேந்திரன்
பிரதம விருந்தினர் : வி.கே. அருந்தவநாதன்
(கூட்டுறவு உதவி ஆணையாளர், யாழ்ப்பாண மாவட்டம்)

தகைமை உள்ள அங்கத்தவர்கள் தவறாது
சமுகமளிக்கும்படி
கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நா. மகேந்திரன்
தலைவர்.

(23654)(6.7.8)

த. உமாப்பிரியா
செயலாளர்.

## இந்திய திருத்தல யாத்திரை

இந்த யாத்திரைகள் 05.01.2000 ஆண்டு காலமான, என் மனைவியின் வேண்டுகோளிற்காக சேவை நலன் கொண்டு குறைந்த செலவில் நடாத்தப்படுகின்றது.

இது தமிழ்நாடு, ஆந்திரா, பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களிலுள்ள பிரசித்திபெற்ற புண்ணிய வரலாற்று சிறப்பு மிக்க குறிப்பாக, மலைக்கோட்டை வினாயகர், பொற்கோயில், திருப்பதி, குருவாயூர், 9 நவக்கிரக ஆலயங்கள் தனித்தனியாக சிதம்பரம் உட்பட பஞ்சபூத திருத்தலங்கள் ஆறுபடை வீடுகள், மேல் மருவத்தூரையும் சுசீந்திரம்ஆஞ்சநேயர், கன்னியாகுமரி. முருகன், கபாலீஸ்வரர்சிவன், சுவாமிமலைமுருகன், வனத்திருப்பதி, காளகஸ்திரிசிவன், பார்த்தசாரதிவிஷ்ணு, ஏகம்பரேஸ்வரர்சிவன், சௌமியதாமோதரப்பெருமான், தாராசுரம்சிவன், திருவானைக்காவல்சிவன், தனித்தனியாக நவக்கிரகங்கள்9கோவில், மெரீனாபீச், ஸ்ரீதிரிநேத்ரதஜபுஜ வீரஆஞ்சநேயர், உவரிமுருகன், 60 க்கு மேற்பட்ட ஆலயங்களையும் தரிசிக்கலாம்.

தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை இருவழி விமான ரிக்கட், கொழும்பிலிருந்து எயர்போட் போகவும் திரும்பி வரவும். வாகன வசதி யாத்திரை தொடங்கி முடியும் வரை 18 நாட்கள் A.C., V.D.O. AUDIO உள்ள சொகுசு வாகன வசதி. காலையும் இரவும் காப்பி, டிபன், மதியம் தரமான சைவ உணவு (சாதம்) ஹோட்டல்களில் 1 நாளைக்கு ஒருவருக்கு 1 லீற்றர் மினரல் வாட்டர், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியல் அறையுடன் கூடிய சுகாதாரமான றூம்கள் எடுத்து தங்க வைக்கப்படுவீர்கள். முக்கியமாக இரவு 10 மணிக்கு மேல் வண்டி ஓடப்படமாட்டாது. வயதானவர்களுக்கும், ஆண்கள், பெண்கள் தோஷ நிவர்த்தி செய்பவர்களுக்கும் முன்னுரிமை உண்டு.

விருப்பமுடையவர்கள் பாஸ்போட் படமுள்ள பக்கம் ஒரு போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போட் கலர் புகைபடமும் அனுப்பி பதிவு செய்யவும்.

செல்லுமிடங்களில் குரூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 60 படமும், அல்பமும் ஊர் திரும்பும்போது தரப்படும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து 6 பேருக்கு மேல் வருபவர்களுக்கு கொழும்பு எயர்போட்டிலிருந்து திரும்பிச்செல்ல எமது செலவில் வாகன வசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களை கேட்டு அறிந்து கொள்க.
கட்டண விபரம் கேட்டு அறிந்துகொள்க!

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன்
No. 66/2 - 3/2, Joseph Dias Lane, Colombo-15.
Tel : 0777 680102, 0724 - 222989, 0777 864061
Web : www.sridevipilgrims.com

(சி/2016)

சென்ற யாத்திரையில் கலந்துகொண்டவர்கள் மட்டக்களப்பில்
K. ராஜகோபால் - Tel : 065 3653719
N. Vakson - Tel : 065 2225285, 077 6159685
திருகோணமலையில்
திரு. T. சிவபாலன் - Tel : 0777 293271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தொடரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

அளவெட்டி, ஒக்.17

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக் குட்பட்ட பிரதேசங்கள் ஏழு வலயங்களாக பிரிக்கப்பட்டு பொதுசுகாதார பரிசோதகர் நெறிப்படுத்தலில் டெங்குக் கட்டுப்பாட்டு வாரம் சிறந்த முறையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த டெங்கு கட்டுப்பாட்டு வாரம் தொடர்பாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.நந்தகுமாரிடம் வினவியபோது;

டெங்கு தொடர்பான விழிப்புணர்வுகளை, ஒலிபெருக்கி மூலமாகவும், சுகாதார குழுக்கள் மூலமாகவும் மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தி வருகின்றோம். இந்த நடவடிக்கைக்கு வலிவடக்கு பிரதேச சபையின் முழுமையான ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவர்களின் ஆளணி, வாகன உதவிகளும் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள் கிராமிய அமைப்புக்கள் தாமாக முன்வந்து ஒத்துழைப்பு வழங்கும் நிலை இயல்பாக வர வேண்டும்.

டெங்கு நுளம்பு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பிரசாரத்துக்காக நேற்று வரை 6,000 வரையான வீட்டுத்தரிசிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றில் பல இடங்களில் நீர்த் தொட்டிகள் பிரச்சினைக்குரியவையாக இருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. இவற்றுக்குத் தீர்வாக நீர் தொட்டிகள் மூன்று நாள்களுக்கு ஒரு முறையாவது நன்றாகத் தேய்த்து கழுவி சுத்தம் செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் தொட்டிகளில் ஒட்டிக் கொள்ளும் நுளம்பு, முட்டைகள், குடம்பிகள் அழிக்கப்பட்டுவிடும். தொட்டிகள் நுளம்பு உட்புகா வண்ணம் வலைகள் போட்டு மூடிவிடுவது சிறந்த வழியாகும். தற்போது கைவிடப்பட்ட காணிகள், கிணறுகள் தான் எமக்கு பெரும் பிரச்சினையாக உள்ளன. இவற்றை இனங்கண்டு பொதுமக்கள், சமூக நிறுவனங்கள் எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இதன் மூலம் தகுந்த பரிகாரம் காணமுடியும். வளவுகளின் காணப்படும் குப்பை கூளங்கள் அகற்றப்பட்டபின் செடிகளில் காணப்படும் கீழ்த் தொங்கும் இலைகளில் இவை முட்டையிடும் வாய்ப்பு உள்ளது. எனவே அவற்றையும் சுத்தம் செய்ய வேண்டும். எல்லாம் சுத்தம் செய்த பின் ஒரு சிறிய பாத்திரத்தில் நீரை விட்டு ஓர் இடத்தில் வைத்து மூன்று நாளைக்கு ஒரு முறை அவற்றைச் சுத்தம் செய்து அகற்றுவதன் மூலம் நுளம்பு பெருகுவதை ஒரு சிறிய வாய்ப்பு மூலம் வலிந்து இழுத்து அழிக்க முடியும். மேலும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வு விளக்க முறைகள் இன்று நேற்றல்ல கடந்த ஏழு வருடங்களாக மக்களுக்கு சொல்லி வருகிறோம். இருந்தும் மக்கள் இவற்றைக் கடைப்பிடித்து நடைமுறைச் சாத்தியங்களுடன் ஒத்துப் போவது மிகவும் குறைவாகவே உள்ளது என அவர் தெரிவித்தார்.

(3-36)

# டெங்கு ஒழிப்பில் மெய்கண்டான் மகா வித்தியாலயம்

சுழிபுரம், ஒக்.17

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். வீடு வீடாகச் சென்று கழிவுப் பொருள்கள் இருக்கும் இடங்கள், தண்ணீர் தேங்கி இருக்கும் இடங்களைப் பார்வையிட்டு வேண்டிய ஆலோசனைகளைக் கூறிவருகின்றனர். கழிவுகளை அப்புறப்படுத்துமாறும் இடங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் மழைகாலம் ஆரம்பித்திருப்பதால் மக்களை விழிப்பாக இருக்கும்படி தெரிவித்துள்ளனர்.

(3-28)

## 'பிள்ளைகளுக்கு வேண்டாம் கைத்தொலைபேசி'

கெருடாவில் அம்பிகை கல்வி மன்றத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான கருத்தரங்கு மன்றத் தலைவர் இ.குணசேகரம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய வல்வெட்டித்துறை பொலிஸ் அதிகாரி ''சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த நாம் ஒன்று கூடி உழைக்க வேண்டும்'' எனத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பெண் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெற்றவர்களையே சாரும். பிள்ளைகளுக்கு கமரா, 'நெற்' தொடர்பு உள்ள கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை வாங்கிக் கொடுக்கக் கூடாது.

தொலைபேசிகள் ஊடாக ஆபாசப் படங்களைப் பார்த்து பிள்ளைகள் வழிதவறிப் போகின்றார்கள்.

இந்த விடயத்தில் பெற்றோர்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டும்-என்றார்.

(3-253)




யாழ்ப்பாணம், ஒக்.17

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் நவராத்திரி பூஜை நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சரஸ்வரதி பூஜையும், மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு விஜயதசமி பூஜையும் இடம்பெறும். (3-14)

* * *

மூளாய் அரிகர புத்திர ஐயனார் ஆலயத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நவராத்திரி பூஜைகள் ஆரம்பமாகியுள்ளன. தொடர்ந்து நவராத்திரி பூசைகள் நடைபெற்று எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை விஜயதசமியன்று மானம்பூ திருவிழா நடைபெறவுள்ளது. (3)

* * *

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் கண்ணகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நேற்று நவராத்திரி விழா ஆரம்பமாகி தொடர்ந்தது 9 தினங்கள் நடைபெற்றும் மானம்பூத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது. நவராத்திரி விழாக் காலத்தில் தினமும் அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களின் பஜனைப் பாடல்கள் நிகழவுள்ளன. (3)

## ஏழாம் திருமுறை முற்றோதல்

மாதம் ஒரு கோயில், மாதம் ஒரு திருமுறை என்னும் அடிப்படையில் திருநெல்வேலி பேச்சியம்மன் ஆலயத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய ஏழாம் திருமுறை முற்றோதல் இன்று ஆரம்பமாகின்றது.

அகில இலங்கைத் திருமுறை மன்றம், திருமுறைகள் முற்றோதல் நிகழ்வை ஒழுங்கு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## சைவசமயப் பரீட்சை

சைவபரிபாலன சபையினால் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 தொடக்கம் பிற்பகல் 12.30 மணிவரை சைவசமயப் பரீட்சை நடைபெறவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 1.30 மணியிலிருந்து க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான கணித பாட செயலமர்வு நடைபெறவுள்ளது என வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (3)

## சுழிபுரம் சிவன்ஆலயத்தில் நவக்கிரகம் பிரதிஷ்டை

சுழிபுரம், ஒக்.16

சுழிபுரம் வடகிழக்குப் பகுதியிலுள்ள சிவன் ஆலயத்தில் ஏற்கனவே இருந்த சனீஸ்வரன் விக்கிரகத்துடன் நவக் கிரக விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை நவக்கிரக தோஷ சாந்தி வழிபாடு கள் இங்கு நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(3-28)

## வேலைவாய்ப்பு

★ குடிசார் இயந்திரவியலாளர்(Civil Engineer):
குடிசார் இயந்திரவியல் பட்டதாரி அல்லது தேசிய தொழிநுட்ப டிப்ளோமா மற்றும் குறைந்தது ஐந்து வருட முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

★ தொழிற்சாலை உற்பத்தி முகாமையாளர்(Factory Production Manager):
கட்டடப் பொருள்கள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்திசார் முகாமைத்துவ அனு பவமுள்ள பொறியியல் துறை சார்ந்தவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

★ படவரைஞர் (Draughtsman):
AutoCAD வரைதலில் இரண்டு வருடங்களுக்கு குறையாத முன்னனுபவமுள்ள குடிசார் பொறியியல்துறை சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

★ Instrument Technician:
power tools, போட்டோ பிரதி இயந்திரம், பிறின்டர்,PABX இயந்திரம் மற்றும் இலத்திரனியல் கருவிகள் போன்றவற்றை பராமரிப்பதிலும் பழுது பார்ப்பதிலும் முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் தகுதிச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

Euroville
ENGINEERS AND CONSTRUCTORS (PVT) LTD
இல.15, [illegible]
யாழ்ப்பாணம்.
(சி/4175)(5-6)

## சேவை நலன் பாராட்டு



யாழ். கல்வி வலய நடன ஆசிரிய ஆலோசகராக கடந்த 15 ஆண்டுகள் அரும்பணியாற்றி இன்று தமது அகவை அறுபதில் சேவையில் இருந்து ஓய்வுபெறும் எமது அன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய

நடன வாரிதி
திருமதி பத்மினி செல்வேந்திரகுமார்
அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் மேலும் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:
யாழ். கல்வி வலய நடன ஆசிரியர்கள்.
(சி/41125)(9.7.14)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி ஜெறாட் ஜெயந்தன் தம்பதியரின் செல்வப் புதல்வன்
ஜெவ்றி ஜானுஜன்
அவர்கள் யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கல்வி பயின்று 2012, 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
தொட்டப்பா, தொட்டம்மா.
(24436)(2-6-7)

## 79 ஆவது பிறந்த நாள் நல் வாழ்த்துக்கள்

HAPPY BIRTH DAY





வினாசித்தம்பி கேதீஸ்வரன்
இன்று (17.10.2012) புதன்கிழமை தனது 79 ஆவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்புச் சகோதரி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சுதுமலை ஈஞ்சடி வைரவர் அருளால் சீரும் சிறப்புமுற வாழ வாழ்த்துகின்றனர்.
ஈஞ்சடி வைரவர் கோயிலடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
(24414) (2-6-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும்

செல்வன்

**ஜெயரட்ணம் ஜெயமாறன்**

2012, 5 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 153 புள்ளிகளைப் பெற்று எமக்குப் பெருமை தேடித்தந்த செல்வனையும் அவரது வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினரையும் மனதாரப் பாராட்டுவதோடு அவர் மேன்மேலும் பல சித்திகள் பெற்று வளர்ச்சியடைய வாழ்த்துகின்றோம். Best Wishes

திரு.திருமதி முருகையா ஜீவராணி குடும்பத்தினர்.
ஞானவைரவர் கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.

(சி/4183)(2-6-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி இந்துக்கல்லூரியின் பிரதி முதல்வரும் விஞ்ஞான பாட சிரேஸ்ட ஆசிரியருமான



**திருமதி கமலவேணி தர்மகுலசூரியர்**

அவர்கள் நல்லாசிரியருக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருது பெற்றதனையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணியில் Merit சித்தி பெற்றதனையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
கல்லூரிச் சமூகம்
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி.

(242145)(2.6.7)

# வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனம்

**இலவச தொழில் திறன் பயிற்சி வகுப்புக்கள் (அணி-04)**

பாடசாலையை விட்டு விலகியோருக்கான

- ★ தையல்
- ★ கேக் ஐசிங்
- ★ தலைமுடி அலங்காரம்
- ★ உணவு தயாரிப்பு மற்றும் கணினி பயிற்சி ஆகியன.

இல. 26, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் அமைந்துள்ள வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன பயிற்சி வளாகத்தில் நடைபெற உள்ளன. ஆர்வம் உடையோர் 20.10.2012, 21.10.2012 ஆகிய தினங்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப. 02.00 மணிவரை நேரில் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளவும்.

தலைவர்,
வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனம்

(சி/4180)(5-6-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 * 04 * 1941

மறைவு 29 * 10 * 2011



அமரர்

**தம்பு சண்முகசுந்தரம்**

கண்ணிமைக்கும் கணப்பொழுதில்
கடுகதியாய் வந்தானோ காலன்?
எண்ணி முடியுமுன் வந்ததையா ஓராண்டு!
குன்றா உழைப்பும், குறையா ஊக்கமும்
வற்றா அன்பும், வியக்கும் கடமையும்
நித்தமும் மலருதடா எம் மனதில்
மங்காத உன் நினைவுடன், என்றும் வாழ்வோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!!

61/1, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

# டெங்கு ஒழிப்பை முன்னிட்டு சிரமதானப் பணி

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

அதன் ஓர் அங்கமாக கடந்தவாரம் சிவதொண்டர், இந்து மகாசபை கீரிமலை ஆலயச் சுற்றாடலிலும், பிரதேச செயலக ஊழியர்கள் தமது பிரதேச செயலக வளாகத்திலும் துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர். சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உள நல புனர்வாழ்வு நிலையம், தெல்லிப்பழை துர்க்காதேவி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை ஆகியன இணைந்து தமது பணிமனைகள் அமைந்துள்ள தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை வளாகத்தையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

இவ்வாறான பணிக்கு தொடர்ந்தும் கிராம மட்ட அமைப்புக்களின் ஒத்துழைப்பு அவசியம் எதிர்பார்க்கப்படுகிறது. (3-36)




**சரவணா ரெக்ஸ்**

Saravana Tex

உங்கள் வீட்டுத் திருமணத்தை
சரவணாவின்
பட்டுச்சேலைகளால் அலங்கரியுங்கள்

**நல்லூரில்:** இல. 526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி) யாழ்ப்பாணம். T.P : 021 222 1723

**யாழ்ப்பாணத்தில்:** இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, (தட்டாதெரு சந்தி), யாழ்ப்பாணம். T.P : 021 222 0421

**வடமராட்சியில்:** இல. 171, பிரதான வீதி நெல்லியடி. T.P : 021 226 2992

**சங்கானையில்:** 219 பிரதான வீதி, சங்கானை (HNB வங்கி முன்பாக) T.P : 021 2250909

(சி/4179)(2-6-7)



**மீன்பிடித்தொழிலாளிகளுக்கு ஒரு நற்செய்தி**

**LAFEER SONS PVT LTD**



Mustad

கடந்த 50 வருட காலமாக மாத்தறை வசம் கொண்ட எங்கள் விநியோகங்கள் முழு நாட்டுக்கும் விநியோகிக்கும் நோக்கத்துடன் தலைநகரமான கொழும்பில் இலக்கம் 267, Sea Street, Colombo 11ல் இம்மாதம் 18ம் திகதி காலை 9.00 க்கு ஆரம்பிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு அறியத்தருகிறோம்.

உங்களுக்கு தேவையான Corona, Careena, CF, Zeenet ஆகிய வலைகளும், Mustad Hooks, Halco உட்பட Long Line உற்பத்திகளும், எல்லா வகையான மீன்பிடி உபகரணங்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்

**LAFEER SONS (PVT) LTD.**
267, Sea Street, Colombo 11.
0112 39 54 67 , 0718 158 786
Branch : 75/1, Old Tangalla Road, Kotuwegoda, Matara. Tel: 041 22 222 195

(சி/4178)(2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நல்லூர் பிரதேச சபை தலைவர் தாக்கப்பட்டமைக்கு

# பருத்தித்துறைப் பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 17

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பரமலிங்கம் வசந்தகுமார் தாக்கப்பட்டமை சம்பவத்தைக் கண்டித்தும், தாக்கியோரைக் கண்டுபிடித்து நீதிமன்றில் நிறுத்தி உரிய தண்டனை வழங்கவேண்டும் எனக் கோரும் தீர்மானம் பருத்தித்துறை பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் பூ.சஞ்சீவன் தலைமையில் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்ற போது, தலைமையுரையை அடுத்து சபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஐ.ம.சு. முன்னணி உறுப்பினர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் இந்தத் தீர்மானத்தை சபையில் பிரேரித்தார். இதனை அதே கட்சியைச்சேர்ந்த மணிதரன் வழிமொழிந்தார். இதனையடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்க பொலிஸார் முன் வரவேண்டும்.**

ஜனநாயக ரீதியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட நல்லூர் பிரதேச சபைத் தலைவர் இனந்தெரியாதோரால் சில தினங்களுக்கு முன் தாக்கப்பட்டுள்ளார். இந்தத் தாக்குதல் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். சரியான முறையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உறுப்பினரைத் தாக்கிய இனந்தெரியாதவர்களைக் கண்டுபிடித்து விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை நீதிமன்றில் முற்படுத்தி, அவர்களுக்குரிய தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாக்க பொலிஸார் முன்வரவேண்டும். அதற்கான நடவடிக்கைகளை பொலிஸ்மா அதிபர் எடுக்க வேண்டும் எனவும் அந்தத் தீர்மானத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-8)



நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஓட்டோ மீது ஏறியது பிக்கப். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் வவுனியா குருமன்காட்டுச் சந்தியில் இடம்பெற்றது. இதன்போது ஓட்டோவில் இருந்த மூவர் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பினர். (400)

### சாவகச்சேரியில் ஆலயங்களில் திருட்டு

தென்மராட்சி ,ஒக்.17

சாவகச்சேரி வடக்கில் இரு ஆலயங்களில் கடந்த வெள்ளிக்கிழமை இரவுத் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

சாவகச்சேரி வடக்கு இலாச்சாரணியம் சோலை அம்மன் கோவில் , அருகில் இருந்த உள்ள குமரக்கோட்டம் முருகன் கோவில் ஆகியவற்றிலேயே திருட்டு இடம் பெற்றுள்ளது.

அம்மன் ஆலயத்தின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அம்மனின் கழுத்தில் அணியப்பட்டிருந்த தாலி உட்பட தங்க நகைகளையும் இயந்திர தகட்டினையும், முருகன் ஆலய மூலஸ்தானத்தில் வைக்கப்பட்டிருந்த தங்க இயந்திரத் தகட்டினையும் அபகரித்து சென்றுள்ளனர்.

திருட்டுக்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-9)

## மஹிந்த நட்ட வெள்ளரச மரத்தை பிடுங்கவுள்ள இந்திய அதிகாரிகள்

புதுடில்லி,ஒக் 17

அனுராதபுரத்தில் இருந்து எடுத்துச் சென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாஞ்சியில் நட்ட வெள்ளரச மரக் கன்றை இந்திய அதிகாரிகள் பிடுங்கி வேறு இடத்தில் நாட்டவுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த மாதம் 21ஆம் திகதி சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டிய நிகழ்வில் பங்கேற்கச் சென்றிருந்த போது, வெள்ளரசு மரக்கன்று ஒன்றை ஜனாதிபதி மஹிந்த அங்கு நாட்டியிருந்தார்.

அது 2300 ஆண்டுகளுக்கு முன்னர், அசோக மன்னனின் மகளான சங்கமித்தை இலங்கைக்குக் கொண்டு வந்து நாட்டியதாகக் கூறப்படும் அனுராதபுர வெள்ளரச மரத்தின் கன்றாகும்.

ஜனாதிபதி மஹிந்த நாட்டிய இந்த வெள்ளரச மரக் கன்றுக்குப் போதிய பாதுகாப்பு இல்லை என்பதால், பல்கலைக்கழகப் பகுதியில்

**ஜனாதிபதி சாஞ்சியில் நட்ட வெள்ளரச மரக் கன்றை இந்திய அதிகாரிகள் பிடுங்கி வேறு இடத்தில் நாட்டவுள்ளனர்**

இருந்து அதனைப் பிடுங்கி வேறு இடத்தில் நாட்டுவதற்கு முடிவு செய்துள்ளதாக, மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மரக்கன்றுக்குத் தற்போது இரும்பு வேலி போடப்பட்டுப் பாதுகாக்கப் படுகிறது.

பௌத்த பல்கலைக்கழக கட்டுமானப்பணிகள் இடம்பெறும் போது இதற்கு ஆபத்து ஏற்படலாம் என்பதால், வேறு இடத்தில் அதனை நடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.(த)

## இந்தியாவை உளவு பார்த்த அதிகாரியை திருப்பியழைத்த பாக்.

கொழும்பு,ஒக் 17

கொழும்பில் உள்ள தூதரகத்தில் இருந்து இந்தியாவின் இராணுவ இலக்குகள் தொடர்பான உளவுத் தகவல்களைத் திரட்டி வந்ததாகக் குற்றச்சாட்டுக்குள்ளான இராஜதந்திரியைப் பாகிஸ்தான் திரும்ப அழைத்துள்ளது.

'ஏசியன் ஏஜ்' ஊடகம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அமீர் சுபைர் சித்திக் என்ற இராஜதந்திரி கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் இருந்து இந்தியா தொடர்பான உளவுத் தகவல்களைத் திரட்டி வந்ததாகக் கூறப்படுகிறது.

இவரால் பாகிஸ்தான் உளவுப்பிரிவான ஐ.எஸ்.ஐக்கு உளவு பார்க்கும் முகவராக உள்வாங்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த வெங்காய ஏற்றுமதியாளரான தமீம் அன்சாரி திருச்சியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதையடுத்து, இந்திய அதிகாரிகள் இலங்கை அரசின் கவனத்துக்கு இந்த விவகாரத்தை எடுத்துச் சென்றிருந்தனர்.

இந்த நிலையிலேயே, குற்றச்சாட்டுக்கு உள்ளான பாகிஸ்தான் இராஜதந்திரி இஸ்லாமபாத்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(த)

## பிரிட்டன் தமிழரின் புதிய கட்சியை வரவேற்கிறார் கலைஞர் கருணாநிதி

சென்னை,ஒக் 17

உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து, இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான முயற்சியை பிரிட்டனில் அமைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கான புதிய கட்சி முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சி தருகிறது. இவ்வாறு தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிர் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இங்கிலாந்தில் ஆளுங் கட்சியான 'கன்சர்வேட்டிவ்' கட்சி, தனது கட்சிக்கான உப கட்சியாகப் பிரிட்டன் தமிழர்களைக் கொண்டு பிரிட்டன் தமிழர்களின் கன்சர்வேட்டிவ்' கட்சி என்ற அமைப்பை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது என்ற செய்தி, உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்களுக்குப் பெருமை அளிக்கின்ற செய்தியாகும்.

அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள இந்தக் கட்சியில் பிரிட்டன் தமிழர்கள் மட்டுமல்லாமல், இங்கிலாந்தில் ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் கட்சியினர் இலங்கைத் தமிழர்கள் மீது கொண்டுள்ள அக்கறை பாராட்டுதற்குரியது -என்றுள்ளது. (த)

### கணிதபாடச் செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக். 17

ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான கணிதபாடச் செயலமர்வு எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக வடமாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் அறிவித்துள்ளார்.

இதே தினத்தன்று நடைபெறவுள்ள சைவ பரிபாலன சபையின் சமயபாடப் பரீட்சையைத் தொடர்ந்து இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

## சடலத்தை இனங்காட்டுக

தென்மராட்சி, ஒக்.17

இயக்கச்சிப் பகுதியில் ஏ9 வீதியல் கடந்த மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்து மரணமான 43 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலத்தை உறவினர்கள் அடையாளம் காட்டி உதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (10-9)



ஆசிய ஒத்துழைப்பு மாநாடு நேற்று குவைத்தில் ஆரம்பமாகியது. இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட தலைவர்களைப் படத்தில் காணலாம்

## கரைச்சிப் பிரதேச செயலக பண்பாட்டு விழா நாளை

கிளிநொச்சி, ஒக். 17

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச செயலகத்தின் பண்பாட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச செயலரும் பண்பாட்டு பேரவையின் தலைவருமான கோ.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கரைஎழில் சஞ்சிகை வெளியிடப்பட உள்ளதுடன் கரைஞர்கள் 7பேரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

கலைநிகழ்ச்சிகளாக 'பப்பிரவாகன்' நாட்டுக் கூத்தும், சத்தியவான் சாவித்திரி இசை நாடகமும், கிராமிய நாடகமும் நடைபெறவுள்ளது. (10-421)

### பெண்ணின் தாலி பறிபோனது

தென்மராட்சி, ஒக்.17

சைக்கிளின் பின் ஹரியலில் அமர்ந்து சென்ற குடும்பப் பெண்ணின் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடி மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் இழுத்து அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இதன்போது கீழே விழுந்ததில் குறித்த பெண் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் எருவனில் இடம்பெற்றது.

கொடிகாமம் கொயிலாமனையைச் சேர்ந்த இந்தப் பெண் உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டுத் தனது பேரனுடன் சைக்கிளில் பயணித்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும். இதுதொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (10-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்ட இறுதி இன்று




இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிகளை நடத்தி வருகின்றன. இந்த வகையில் யாழ். மாவட்டத்துக்கு உட்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 21 வயதுக்குட்பட்ட தெரிவு அணிகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று புதன் கிழமை மாலை 3.30 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இறுதியாட்டத்தில் யாழ்.பிரதேச செயலக தெரிவு அணியை எதிர்த்து உடுவில் பிரதேச அணி மோதவுள்ளது. (ங-23-86)

# பாடும்மீன், கலைவாணி அணிகள் ஆதிசக்தி உதைபந்தில் வென்றன

யாழ்ப்பாணம்,ஒக்.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகம், தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குருநகர்பாடுமீன் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை இலகுவாக வீழ்த்தி வெற்றியை தனதாக்கியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் இறுதியில் தொண்டமனாறு கலைவானி விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ங-23)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன் கிழமை இடம் பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகம்

பி.ப.4 மணி

பொற்பதி விளையாட்டுக் கழகம் எதிர் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம்.

(ங-23)

# மத்தியகல்லூரி– ஸ்கந்தா சிநேகபூர்வ உதைபந்து

யாழ்ப்பாணம், ஒக்.17

யாழ்.மத்தியகல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான 14,16,18,20 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி கடந்த வாரம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் 14 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 2:0 என்ற கோல் கணக்கிலும், 1 6 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 1:0 என்ற கோல்கணக்கிலும் யாழ்.மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

**14, 16 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றிபெற்றது.**

18 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் இறுதியில் இரு அணியினரும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்தனர். இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

20 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவு வரை எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையானது. (ங-23)

# கோட்டமட்ட உதைபந்தில் வெற்றியீட்டிய பாடசாலைகள்



யாழ்ப்பாணம், ஒக்.17

கோப்பாய் கோட்டமட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14,16,18 வயதுப் பிரிவு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு,

**14 வயதுப் பிரிவு**

முதலாமிடம்-உரும்பிராய் இந்துக் கல்லூரி
இரண்டாமிடம்-நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
மூன்றாமிடம் - புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி

**16 வயதுப் பிரிவு**

முதலாமிடம்-அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்
இரண்டாமிடம்-புத்தூர் விஷ்ணு வித்தியாலயம்
மூன்றாமிடம் - உரும்பிராய் இந்துக் கல்லூரி

**18 வயதுப் பிரிவு**

முதலாமிடம்-உரும்பிராய் இந்துக் கல்லூரி
இரண்டாமிடம்-நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி
மூன்றாமிடம் - புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

(ங-23)

# விசேட தேவையுடையோருக்கான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஒக். 17

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் விசேட தேவையுடையோருக்கானபிரிவினால் வடமாகாண மட்டப் பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றிபெற்றவர்களின் விவரங்கள் வருமாறு-

**11 வயதுப் பிரிவு-(20 மீற்றர் ஓட்டம்)**

முதலாமிடம்-ஆர்.சங்கீர்த்தன் - திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

இரண்டாமிடம்-வி.தியாகேசன்-வலிகாமம் கல்வி வலய விசேட தேவையுடையோர் வளநிலையம்


மூன்றாமிடம் யூ-கம்ஷிகன் -திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

**பந்து எறிதல்**

முதலாமிடம்-ஆர்.சங்கீர்த்தன் - திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயம்

இரண்டாமிடம்-வி.தியாகேசன்-வலிகாமம் கல்வி வலய விசேட தேவையுடையோர் வளநிலையம்.

(ங-86)

பாண்டியன் குளம் மகாவித்தியாலய அதிபர் எஸ்.அருமைநாயகம் இந்தச் சீருடைகளை வழங்கிக் கௌரவித்தார்.

ஜீ.ஐ.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான மூன்று நாள் காற்பந்தாட்டப் பயிற்சி முகாம் கடந்த வாரம் பாண்டியன் குளம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.
இந்தப் பயிற்சி முகாமில் 50 இற்கும் மேற்பட்ட வீர ,வீராங்கனைகள் பங்குபற்றினர்.எஸ்.ஜெயபாலன், மாந்தை கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவு விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் போல்ராஜ் ஆகியோர் பயிற்சிகளை வழங்கினர். குறித்த பயிற்சி முகாமில் பங்குபற்றிய அனைத்து வீர,வீராங்கனைகளுக்கு சீருடைகளும் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கம்பீர் அணி 'சரண்டர்'

## ஆக்லாந்து அசத்தல் வெற்றி

சம்பியன்ஸ் லீக் தொடரில் கம்பீர் தலைமையிலான கொல்கத்தா அணி, ஆக்லாந்து ஏசஸ் அணியிடம் 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்ந்தது. துடுப்பாட்டம், பந்து வீச்சில் சொதப்பிய கொல்கத்தா அணி மிக மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

தென்னாபிரிக்காவில் நான்காவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் நடக்கின்றது. நேற்று முன்தினம் நடந்த 'ஏ' பிரிவு லீக் ஆட்டத்தில் நடப்பு ஐ.பி.எல். சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், நியூஸிலாந்தின் பிராந்திய அணியான ஆக்லாந்து ஏசஸ்மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.



கொல்கத்தா அணி தொடக்கத்தில் ஆட்டம் கண்டது. அணித்தலைவர் கம்பீர் (5) மீண்டும் ஏமாற்றினார். இதற்குப் பின்னர் பிஸ்லா, பிரண்டன் மக்கலம் சேர்ந்து அசத்தினர். மில்ஸ், பேட்ஸ் பந்துப் பரிமாற்றங்களில் பவுண்டரிகளாக விளாசிய பிஸ்லா, ஆடம்ஸ் பந்தில் ஒரு சிக்ஸர் அடித்தார். இவர் 38 ஓட்டங்களுக்கு வெளியேறினார். அப்போது கொல்கத்தா அணி 9 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளுக்கு 72 ஓட்டங்கள் எடுத்து நல்ல நிலையில் இருந்தது.

இந்த நேரத்தில் ஆட்டத்தின் 10 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய அசார் மஹமூத் திருப்புமுனையை ஏற்படுத்தினார். இரண்டாவது பந்தில் கலிசை (0) ஆட்டமிழக்கச் செய்தார். 3 ஆவது பந்தில் மனோஜ் திவாரியை (0) வெளியேற்றினார். அடுத்த பந்தை சகிப் அல் ஹசன் தடுத்த ஆட, 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது. மீண்டும் பந்துவீச வந்த அசார் மஹமூத் இ ந் த முறை மக்கலத்தை(40) பவிலியனுக்கு அனுப்பினார். இதையடுத்து ஓட்ட வேகம் அப்படியே சரிந்தது. சகிப்(15) நிலைக்கவில்லை.

சற்று மந்தமாக ஆடிய யூசுப் பதான், கடைசிக் கட்டத்தில் பேட்ஸ் பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு பவுண்டரிகள் அடித்து ஆறுதலளித்தார். கொல்கத்தா அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளுக்கு 137 ஓட்டங்களை மட்டும் எடுத்தது. யூசுப் (22), பாட்யா (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆக்லாந்து சார்பில் அசார் மஹமூத் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

சுலப இலக்கை விரட்டிய ஆக்லாந்து அணிக்கு லூ வின்சென்ட் அதிரடி தொடக்கம் கொடுத்தார். இவர், பாலாஜி வீசிய முதல் பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடிக்க, மொத்தம் 17 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. தொடர்ந்து சகிப் பந்தையும் சிக்ஸருக்கு அனுப்பினார். நரைன் சுழலில் வின்சென்ட் (30) வீழ்ந்தார். அடுத்து வந்த அசார் மஹமூத் பொறுப்பாக ஆடினார். பாலாஜி பந்தை சிக்ஸருக்கு பறக்க விட்டு அசத்தினார். குப்தில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் அனாரு கிட்ச்சன், அசார் மஹமூத் சேர்ந்து அதிவிரைவாக ஓட்டங்களைச் சேர்த்தனர். சகிப் பந்தில் சிக்சர் அடித்தார் கிட்ச்சன். நரைன் பந்துப் பரிமாற்றத்தில் இருவரும் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். நரைன் வலையில் கிட்ச்சன் (24) சிக்கினார். தொடர்ந்து அசத்திய அசார், சங்வான் பந்தை பவுண்டரிக்கு விரட்டி அரைச்சதம் எட்டியதோடு, அணிக்கு வெற்றியும் தேடிக் கொடுத்தார். ஆக்லாந்து அணி 17.4 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 139 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வென்றது. அசார் (51), கிராண்ட்ஹாம் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


ஏற்கனவே டெல்லியிடம் வீழ்ந்த கொல்கத்தா அணி, தற்போது இரண்டாவது தோல்வியை சந்தித்துள்ளதால், அரையிறுதிக்கு முன்னேறுவதில் சிக்கல் ஏற்படலாம்.

சகலதுறை வீரராக அசத்திய அசார் மஹமூத், ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார். (5)

# விளையாட ஆவலாக இருக்கும் முரளி

இடம்பெறவுள்ள ஆஸ்திரேலியாவின் பிக்பாஷ் லீக் தொடரின் இரண்டாவது பருவகாலத்தில் பங்குபற்ற எதிர்பார்ப்புடன் உள்ளதாகவும், அதன் பின்னர் அடுத்தாண்டு இந்தியன் பிறிமியர் லீக் தொடரிலும் பங்குபற்ற ஆவலாக உள்ளதாகவும் இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரும், உலக சாதனையாளருமான முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

பிக்பாஷ் லீக் கடந்தாண்டே ஆரம்பித்திருந்த போதிலும் அந்தத் தொடரில் முத்தையா முரளிதரன் பங்குபற்றியிருக்கவில்லை. ஆனால் இந்த முறை இடம்பெறவுள்ள தொடரில் பங்குபற்றுவதற்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் நகரத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு அணிகளில் ஒன்றான மெல்பேர்ண் ரெனிகேட்ஸ் அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்ற அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். மற்றைய மெல்பேர்ண் அணியான மெல்பேர்ண் ஸ்டார் அணிசார்பாக முத்தையா முரளிதரனின் காலத்தில் முரளிதரனுக்குப் போட்டியாகக் காணப்பட்ட மற்றைய சுழற்பந்து வீச்சு ஜாம்பவானான ஷேன் வோர்ண் பங்குபற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள முத்தையா முரளிதரன், இந்தியன் பிறிமியர் லீக், பிக்பாஷ் லீக் ஆகியன உலகிலுள்ள மிகப் பெரிய தொடர்களில் ஒன்று எனத் தெரிவித்ததோடு, அந்தத் தொடர்களில் பங்குபற்ற ஆவலாக உள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்தாண்டு ரோயல் சலஞ்சர்ஸ் அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த முத்தையா முரளிதரன், அதன் பின்னர் தனது எதிர்காலம் தொடர்பாக முடிவெடுக்கவுள்ளதாகத் தெரிவித்தார்.

(5)

# சம்பியனானார் ஜெகோவிச்

சீனாவின் ஷங்காயில் இடம்பெற்று வந்த ஷங்காய் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை சேர்பியாவின் நொவக் ஜெகோவிச் வெற்றிகொண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் அன்டி முரே இற்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்றே நொவக் ஜெகோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான அன்டி முரே முதலாவது செற்றைக் கைப்பற்றி நொவக் ஜெகோவிச் இற்கு அழுத்தம் வழங்கினார். முதலாவது செற்றை அவர் 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

எனினும் இரண்டாவது செற்றில் கடுமையாகப் போராடிய நொவக் ஜெகோவிச், 7-6 என்ற கணக்கில் அந்த செற்றை கைப்பற்றியதோடு, மூன்றாவது செற்றை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதனடிப்படையில் போட்டியை நொவக் ஜெகோவிச் 5-7, 7-6, 6-3 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டார்.

இந்தத் தொடரில் உலகின் இரண்டாம் நிலை வீரரான நொவக் ஜெகோவிச், உலகின் 6 ஆம் நிலை வீரரும், இந்தத் தொடருக்கான தரப்படுத்தலில் 4 ஆம் நிலையில் காணப்பட்டவருமான தோமஸ் பேர்டிச்சை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

உலகின் 4 ஆம் நிலை வீரரும், இந்தத் தொடருக்கான தரப்படுத்தலில் 3 ஆம் நிலையில் காணப்பட்டவருமான அன்டி முரே, உலகின் முதல்நிலை வீரரான ரொஜர் பெடரரை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

(5)

## உதயனின் தினம் ஒரு பரிசு

**உதயனின் தினம் ஒரு பரிசுப் போட்டிக்கான வெற்றியாளர்கள் தெரிவுக்கான குலுக்கல் இன்று மாலை 4 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சச்சினின் ஆட்டமிழப்பு பங்கிசோ கொண்டாட்டம்

உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரரான சச்சின் இலக்கை கைப்பற்றிய மகிழ்ச்சியை, இரவெல்லாம் தூங்காமல் கொண்டாடினேன், என்று ஆரோண் பங்கிசோ தெரிவித்தார்.

லயன்ஸ் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடரின் லீக் ஆட்டத்தில், மும்பை இந்தியன்ஸ் அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மும்பை வீரர் சச்சின், பங்கிசோ பந்தில் 'போல்டானார்'.

இது குறித்து பங்கிசோ கூறுகையில், சச்சின் இலக்கை கைப்பற்றியது மகிழ்ச்சியான ஒன்று. இதை நினைத்து எனக்கு தூக்கம் வரவில்லை. இரவெல்லாம் கொண்டாடினேன். சிறப்பான முறையில் பயிற்சியில் ஈடுபட்டதால் சாதிக்க முடிந்தது, என்றார்.

மும்பை இந்தியன்ஸ் அணி வீரர் மலிங்க கூறுகையில், எதிரணியினர் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடினர். எங்களது பந்து வீச்சு எதிர்பார்த்த அளவுக்கு அமையவில்லை. தோல்வியடைந்ததற்கு, இதுதான் காரணம் என நினைக்கிறேன். இதையும் ஒரு போட்டியாகவே கருதினோம். நடப்பு சம்பியன் என்பதால், எந்தவிதமான நெருக்கடியையும் உணரவில்லை, என்றார்.

(5)

# யுவராஜ் அதிரடி

இந்திய அணியின் சகலதுறை வீரர் தனது முதற்தரப் போட்டி மீள்வருகையில் இரட்டைச் சதத்தைப் பெற்று அதிரடி மீள் வருகையொன்றை நிகழ்த்தியுள்ளார். வடக்குப் பிராந்திய அணிக்காகவே அவர் இரட்டைச் சதம் பெற்றுள்ளார்.

ஹைதரபாத் ராஜிவ்காந்தி மைதானத்தில் டுலீப் கிண்ணப் போட்டிகளின் அரையிறுதிப் போட்டியில் வடக்கு பிராந்திய அணிக்கும், மத்திய பிராந்திய அணிக்குமிடையிலான போட்டியிலேயே யுவ்ராஜ் சிங் இரட்டைச் சதம் பெற்றுக் கொண்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்குப் பிராந்திய அணி 2 இலக்குகளை இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் களம் புகுந்த யுவ்ராஜ் சிங், ஆரம்பத்துடுப்பாட்ட வீரரும், அணித்தலைவருமான சிகர் தவானுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தைப் புரிந்தார். இறுதியில் வடக்குப் பிராந்திய அணி சகல இலக்குகளையும் இழந்து 451 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய யுவ்ராஜ் சிங் 241 பந்துகளில் 33 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 208 ஓட்டங்களைக் குவித்தார். அவர் தவிர, தலைவர் சிகர் தவான் 200 பந்துகளில் 121 ஓட்டங்களைப் பெற்றார்.

புற்றுநோய் காரணமாக பாதிக்கப்பட்ட யுவ்ராஜ் சிங் ஐக்கிய அமெரிக்காவில் சிகிச்சைகளைப் பெற்றதோடு, உலக 'ரி-20' தொடருக்கு முன்னதாக நியுசிலாந்து அணிக்கெதிரான 'ரி-20' போட்டி, இலங்கையில் இடம்பெற்ற உலக 'ரி-20' தொடர் ஆகியவற்றில் பங்குபற்றியிருந்தார். எனினும் புற்றுநோயின் பின்னர் அவர் பங்குகொள்ளும் முதலாவது முதற்தரப் போட்டியாக இது அமைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (5)

# இந்தியத் தொடரில் பீற்றர்சன் வேண்டும்

இங்கிலாந்து அணியின் இந்தியாவிற்கான கிரிக்கெட் தொடரின் போது இங்கிலாந்து அணியின் சர்ச்சைக்குரிய அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றால் மிகச்சிறப்பானது என்று இங்கிலாந்து அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இங்கிலாந்து அணி இந்த மாதம் 30 ஆம் திகதி முதல் பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளதோடு, முதலாவது டெஸ்ட் போட்டியில் அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் பங்குபற்றவுள்ளது.

இந்தத் தொடருக்கான டெஸ்ட் அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அணியில் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றிருக்கவில்லை. இங்கிலாந்து வீரர்கள் சிலருக்கும், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபைக்கும், கெவின் பீற்றர்சனுக்குமிடையிலான முரண்பாடு காணப்பட்ட நிலையிலேயே கெவின் பீற்றர்சன் அந்தத் தொடரில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் தற்போது இரு தரப்பினரிடையே இணக்கப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் இந்தியத் தொடரில் கெவின் பீற்றர்சன் இடம்பெற்றால் மிகச்சிறப்பானதாக அமையும் எனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், இந்தப் பிரச்சினைகளை ஓரங்கட்டி விட்டு இந்தியாவில் மிகச்சிறப்பாகப் போட்டிகளில் பங்குபற்ற எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணி தனது டெஸ்ட் முதலிடத்தை தென்னாபிரிக்காவிற்கெதிரான தொடரில் இழந்த நிலையில், இழந்த முதலிடத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இங்கிலாந்தின் மிகச்சிறந்த வீரர்கள் போட்டிகளில் பங்குபற்ற வேண்டுமெனத் தெரிவித்த ஜேம்ஸ் அன்டர்சன், இங்கிலாந்தின் மிகச்சிறந்த வீரர்களில் கெவின் பீற்றர்சனும் ஒருவர் எனத் தெரிவித்துள்ளார்.

(5)





## வீடு விற்பனை

யாழ்ப்பாணம் கோயில் வீதியில் அமைந்துள்ள காணியுடன் சகல வசதிகளுடனுமான வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 7795243, 077 2230934

(24453)(6-8.14)

## சேவிஸ் ஸ்டேஷன்

கொம்பிரஷர்(Air compressor Indian,Italy)
கிரிஸ் பம்ப் *(Grease pumps Japan,Turkey)*
நீர் உயர் அழுத்திப்பம்புகள் (Water Highpressor pumps)
வெக்கும் கிளீனர்ஸ் (Vaccum cleaners)
4Ton, 8Ton (single, twinpost), 12,16Ton Hoist
ஒட்டோ லிப்ட் (3wheeler lift), bike lift



மட்டக்களப்பு, திருகோணமலை,வவுனியா,மன்னார் ஆகிய இடங்களிற்கும் டெலிவரி வழங்கப்படும்

அனைத்து வித திருத்தவேலைகளும் செய்து தரப்படும்

(24438)

CARTEC TRADING (PVT) LTD
94, 4ஆம் குறுக்குத்தெரு,யாழ்ப்பாணம்
தொடர்பு 077 687 2656, 072 126 0760

## தொழிற் பயிற்சிகள்

* Mobile Phone Repairing
Batch I - திங்கள் முதல் வெள்ளி வரை 8.30 am - 11.00 am (2மாதம்)
Batch II - சனி, ஞாயிறு 9.00 am - 11.00 am (5 மாதம்)
* Electronics
Tv, Mobilephone, DVD மற்றும் வேறு எலக்ரோனிக் பொருள்கள் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
* Air conditioning (10 மாதம்)
சகல குளிர்சாதனங்களும் திருத்தும் முறை பயிற்சியளிக்கப்படும்.
மீண்டும் பயிற்சிகள் ஆரம்பம் - 21.10.2012
பயிற்சி முடிவில் சான்றிதழுடன் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.
வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதி வழங்கப்படும்.
(6 மாதம்)

விவரங்களுக்கு:
Jaffna Technical Institute
பலாலி வீதி, யாழ்ப்பாணம். 071 8561654
கிளை : ஸ்ரான்லி வீதி, 56/15, யாழ்ப்பாணம். 077 8249949
(சி/4176)(8.14)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23906)(15-6)

## உதயன்

தமிழ் மக்கள் மனம் நிறைந்த தமிழ் இணையம்

உதயன் இணையம்

உங்களின்
→ சமய
→ சமூக
→ கலாசார
→ கல்வி
நிகழ்வுகளை உலகறியச் செய்ய

www . Online Uthayan.com
தொடர்புகளுக்கு : Email - online@Uthayan.com
T.P : 021 5672222
(C/4189)

## No .1 Bairaha கோழிக்குஞ்சு விற்பனை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் Bairaha முதற்தர கோழிக்குஞ்சு விநியோகம் செய்யப்படும். யாழ். மாவட்டம் பூராகவும் கிளிநொச்சி மற்றும் A - 9 வீதியிலுள்ள அனைத்து இடங்களுக்கும், உங்கள் இடங்களுக்கும் கொண்டுவந்து தரப்படும்.

தொடர்புகளுக்கு : 077 9959382 ( ரவி)

(24433)(6-8.14)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய
மனச்சான்று
உடையவர்கள்
தான் நல்வாழ்வு
பெறுவர்.
-சாக்கிரடீஸ்-


# புதன் பொய்கை A

உதயன் 17 ஒக்ரோபர் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு


■ மணி

# தன்னையே கொல்லும் சினம்



"மகிழ்ச்சியோடும் ஆனந்தமான மனோபாவத் தோடும் சந்தோஷமாக வாழ நாம் சந்திக்கின்ற, தொடர்பு கொள்கின்ற, உறவு வைத்துக் கொள்கின்ற அனைவரிடமும் மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மனதை எப்பொழுதும் உற்சாகத்தோடும் நட்புணர்வோடும் வைத்திருக்க பழகிக்கொள்ள வேண்டும்.

மன இறுக்கம் Tension என்பது இன்று அனைவரையும் பாதிக்கிற ஒரு விஷயமாக இருக்கிறது.

மனஇறுக்கமே இல்லாமல் வாழ வேண்டும் என்பது முட்டாள் தனமானது, இயலாததும் கூட. அது மரண வாழ்க்கை யாகத்தான் இருக்க முடியும்.

நாம் பயன்படுத்துகிற வாகனங்களின் ரயரில் காற்று மிகச் சரியாக இருந்தால் வாகனம் நன்றாக ஓடும். காற்று குறைவாக இருந்தால் வேகம் குறையும். ரயர் தேய்வு அதிகமாகும்.

காற்று அதிகமாக இருந்தால் வாகனம் குதிக்கும். வேகமாக சாலைகளிலுள்ள கற்கள் போன்றவற்றில் மோதினால் ரயர் வெடிக்கும் அபாயமும் இருக்கிறது.

காற்று சரியாக இருக்கவேண்டும்.

**தன்னையே கொல்லும் சினம்**

பதற்றம் நமக்கு எப்படி வருகிறது? எங்கிருந்து வருகிறது?

மன இறுக்கத்துக்கு காரணம் மனிதர்கள் தான். மனிதர்களோடு நல்ல உறவுகள் இல்லாத போது குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், தொழில்முறையில் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், வணிகர்கள் சமுதாய வாழ்க்கையில் நமது வேலை விஷயமாக எவரிடமெல்லாம் தொடர்பு கொள்கிறோமோ அவர்களிடமெல்லாம் நம் உறவு நன்றாக அமைகிற பொழுது மன இறுக்கம் பதற்றம் உருவாவதில்லை.

இந்த மன இறுக்கம் மனதில்உருவானால் எது குறித்தும் முடிவெடுக்க இயலாத குறைபாடு நமக்கு உருவாகும்.

முடிவெடுக்க இயலாமல் காலதாமதம் செய்வதால்,அல்லது தள்ளிப் போடுவதால் ஒத்திவைப்பதால், சிக்கல்கள் பெரிதாகுமே தவிர நன்மை ஏற்படப்போவதில்லை. அதனால்தான் தீர்க்கமாகச் சிந்தித்து ஒத்திப் போடுவதை ஒத்திப்போட்டு விட்டு முடிவெடுப்போம்.

தமிழில் அழகாகச் சொல்லுவார்கள் ''தள்ளிப்போடுவதைக் கிள்ளிப் போடுங்கள்'' என்று

உலகத்தில் எல்லா விளைவுகளுக்கும் காரணமான செயற்பாடுகள் வேறு வேறாக இருக்கும். ஆனால் பதற்றத்தைப் பொறுத்த மட்டில் செயலும் அதுவே, விளைவும் அதுவே. காரணமும் அதுவே, காரியமும் அதுவே.

பதற்றத்துக்கு காரணம் பதற்றம்தான் Tension begets Tension வாழ்க்கை மன இறுக்கத்தோடு, மன அழுத்தத்தோடு அமைகிற போது ஆர்வம் குறைந்து சலிப்பு உண்டாகும். பல நேரங்களில் இந்தச் சலிப்பு தற்கொலை வரை சென்று விடுவதும் உண்டு.

மகிழ்ச்சியோடும் ஆனந்தமான மனோபாவத் தோடும் சந்தோஷமாக வாழ நாம் சந்திக்கின்ற, தொடர்புகொள்கின்ற, உறவு வைத்துக் கொள்கின்ற அனைவரிடமும் மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

மனதை எப்பொழுதும் உற்சாகத்தோடும் நட்புணர்வோடும் வைத்திருக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

உற்சாகத்தை உருவாக்கிக்கொள்ள மனிதன் எப்பொழுதும் மகிழ்ச்சியான தருணங்களையே எண்ண வேண்டும்.

சுவையில்லாத களைப்பு ஏற்படுத்துகிற திரைப்படத்தை இரண்டாவது முறையாகப் பார்க்கப் பிரியப்படாததைப் போல, துக்க நிகழ்வுகளையும் இனிமையற்ற துயர சம்பவங்களையும் அனுபவங்களையும் மறந்துவிட வேண்டும்.

மனதுக்கு மகிழ்ச்சியளிக்காத உறவுகளைக் கூடத் துறந்துவிட வேண்டும்.

மனதை உற்சாகமாக வைத்துக் கொள்வதற்காகத்தான் பல கொண்டாட்டங்களும், விழாக்களும். வாழ்க்கையில், எதிர்மறை எண்ணங்களுடைய மன இறுக்கமும், மன அழுத்தமும் உடைய மனிதர்களின் முகங்களைப் பாருங்கள். மகிழ்ச்சியாகவா இருக்கிறது? அழகு இழந்து, களை இழந்து, கவலை ரேகைகள் சுருக்கங்களாக வெளிப்பட்டு, முதுமை கூடி, நரை உண்டாகி கவர்ச்சியற்ற, ஒரு மனித ஜந்துவாக மாற்றம் பெற்றுவிடுகிற நிலையை நாம் பார்க்கிறோம்.

உடையால் உடல் மறைத்து, மறைந்த பகுதிகள் போக எஞ்சிய கைகளையும், கால்களையும், முகத்தையும் பார்க்கிற பொழுது கறுப்புத் தழும்புகளும் காயம்பட்ட சுவடுகளும், பார்க்க சுத்தமான தோற்றம் இன்றி கள்ள உள்ளத்தையும், கடினமான வாழ்க்கையையும் காட்டுகின்ற கண்ணாடியாக அவைகள் விளங்கும்.

எண்ணத்தில் தூய்மையும் மனதில் வெள்ளையும் இருந்தால், வெளிச்சம் போட்டுக் காட்டுவதைப்போல முகம் பிரகாசிக்கும். உடல் ஒளிவிடும், கவர்ச்சி அதிகரிக்கும். காந்தம் போல் மாறலாம். மனிதர்களைக் கவர்ந்து இழுக்கலாம்.

வெற்றி பெறலாம்.


அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்று வள்ளுவர் பட்டியலிடுகிற எதிர்மறைக் குணங்களை எடுத்தெறிந்து விடுகிற மனப் பக்குவம் வந்துவிட்டால், மகிழ்ச்சி, வாழ்க்கையில் துளிர்க்கும். மனம் விசாலப்பட வேண்டும். இதனைத்தான் பண்டைய நமது முன்னோர்கள் காம, குரோத,மோக, லோப, மத, மாச்சர்யம் என்று சொல்லி இவற்றை விட வேண்டும். அழிக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வந்தார்கள்.

மற்றவர்களுக்குக் கிடைக்கிற நன்மைகளையும் ஆசீர்வாதங்களையும் ஏற்றுக் கொள்ளாத பொறுக்க முடியாத மனிதமனத்தில் அழுக்காறு என்கிற பொறாமை உண்டாகிறது.

தீ எப்படி தன்னிடம் அகப்பட்ட எல்லாவற்றையும் எரித்துத் தின்று விடுகிறதோ, அழித்து விடுகிறதோ அங்ஙனமே மனிதனின் நற்பண்புகளையும் பொறாமை தின்றுவிடுகிறது. அடிப்படைத் தீக்குணம் பொறாமை.

பொறாமை மனிதனின் மகிழ்ச்சியான வாழ்க்கையைத் திருப்பிப் போட்டுத் துயரம் நிறைந்ததாக மாற்றிவிடுகிறது. உண்மைதான்! பொறாமை என்ற சொல்லையே திருப்பிப் போட்டு உச்சரித்தாலும், எழுதினாலும் ''மைறாபொ'' என்றுதானே எடுத்துச் சொல்லுகிறது.

நம்மிடம் இல்லாதது மற்றவர்களிடம் இருக்கிற போது பொறாமை தோன்றுகிறது. அதை அடைய வேண்டும்.



என்ற அவா, ஆசை உண்டாகிறது. ஆசை நிறைவேறாத போது வெகுளி என்கிற கோபம், இன்னாச்சொல் என்கிற தீய, துன்பம் தருகிற சொற்களால் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறிகளால்
## உருவாக்கப்பட்ட ஓவியம்



**16**ஆம் நூற்றாண்டில் காணப்பட்டதாக கூறப்படும் ஓவிய முறையை ஞாபகப்படுத்தும் வகையில் புகைப்பட கலைஞர் ஒருவர் காய்கறிகளைக் கொண்டு ஓவியம் வரைந்துள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் கலன் என்ரிகிவ் ஜேர்ட் என்ற புகைப்படக் கலைஞரே இத்தகைய ஓவியங்களை வரைந்து பார்வையாளர்களைத் தனது ஓவியத்தால் கவர்ந்துள்ளார். பூக்கள், காய்கறிகள், இறைச்சி மற்றும் பழங்களைக் கொண்டு இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.

# *எண்ணங்கள்* வாழ்வின்* ஏணிப்படிகள்*




மனிதர்களில் சிலர் தாழ்வான மனப்பான்மை கீழான எண்ணங்களை மனதில் கொண்டிருப்பதனால் வாழ்வில், வெற்றி பெற முடிவதில்லை. அவர்களை ஆக்கிரமித்துள்ள பயம், பதற்றம், தன்னம்பிக்கை இன்மை, மனதில் உறுதியின்மை, சிறந்த திட்டமிடலின்மை ஆகியன இதற்குக் காரணமாகும். எனவே முதலில் எமது மனதில் நல்ல எண்ணத்தை விதைக்க வேண்டும். எந்தெந்த நல்ல விடயங்களை எல்லாம் நம் வாழ்வில் நடைபெற வேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ, அந்த எண்ணங்களை நம்மனதில் தோற்றுவித்துக் கொள்வது மிக முக்கியம். ஏனெனில் எம் மனதை ஒரு குறித்த இலக்கை நோக்கிச் செலுத்தும் போது தான் நம் எண்ணங்கள் வலுப் பெறுகின்றன. இவ்வாறு வலுப்பெற்ற எண்ணங்கள் நல்ல செயல்களாகப் பரிணமிக்கின்றன. இலக்கு இல்லாத மனிதன் பல இழப்புகளைச் சந்தித்து தனது வாழ்வில் விரக்தியையும், வேதனையையும் சந்திக்க நேரிடுகின்றது. இவற்றைத் தவிர்த்து நாம் வாழ்வில் வெற்றிபெற வேண்டுமாயின், உணர்ச்சிகள் எம்மை ஆளக்கூடாது. உணர்ச்சிகளை நாம் ஆள வேண்டும் எனும் எண்ணத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இவற்றை நாம் கைக்கொண்டால், இலகுவாக வாழ்வில் வெற்றி பெறலாம். அத்துடன் வாழ்க்கை இனிமையாக அமைவதற்கு நம் நடவடிக்கைகள் இன்றியமையாதவை. அதனால் தெளிந்த நற்சிந்தனையை நாம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அது நம் மனதில் பரந்த மனப்பான்மையை தோற்றுவித்து நிரந்தர அமைதியை ஏற்படுத்தும். ''பருவம் தவறிய மழையும் நிதானம் தவறிய மனிதனும் பயன் அற்றுப் போவது உறுதி'' இது முன்னோர் கூறிய உண்மை. எனவே வாழ்வில் வெற்றியீட்ட நினைப்பவர்கள் ஒவ்வொருவரும் தாம் செய்யப்போகும் விடயத்தில் எத்தகைய இடர்கள் வரினும் அயராத உழைப்புடனும் விடாமுயற்சியுடனும் நம்பிக்கையுடனும் செயலாற்றினால் வாழ்வில் வெற்றி பெறுவது உறுதி.


ப.மயூரி, முகிழ்நிலை ஆசிரியர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.


# வைக்கோலால்
## உருவாக்கிய ஆலயம்



பிரிட்டன் நாட்டிலுள்ள ஒயிட்டிங்டான் என்ற கிராமத்தில் வசிக்கும் விவசாயிகள் அந்தப் பகுதியில் நடக்கும் தேசியக் கண்காட்சிப் போட்டிக்காக புதுமையான காட்சிப் பொருளை உருவாக்க நினைத்துள்ளனர். அதற்கமைய ரோப் கிராய் என்ற விவசாயியின் தலைமையில் கூடி வைக்கோல் கொண்டு கிறிஸ்தவ தேவாலயம் போன்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்கள். வைக்கோலால் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் 50 அடி உயரமும், 74 அடி நீளமும், 14 அடி அகலமும் கொண்டுஅமைக்கப்பட்டுள்ளது.

# மனிதர்களும் ஓவியங்களா?





ஓவியர்கள் தமது கைவண்ணத்தால் வரையும் ஓவியங்களை உயிரூட்டமுள்ளதாக மாற்றிவிடுவார்கள். ஆனால் இங்கு உயிருள்ள மனிதர்களை அசத்தலான ஓவியங்களாக மாற்றியிருக்கிறார் 23 வயதான அலக்ஸா மியாட் என்ற பெண் ஓவியர்.

# உலகில் பெரிய ஆகாய விமானம்



உலகிலேயே காணப்படும் ஆகாய விமானங்களுள் உக்ரைன் நாட்டிலுள்ள மிரியா விமானமே மிகவும் பெரிய விமானமாகக் காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசீகர உளவாளிகள்






இந்த நவீனங்களை யெல்லாம் தாண்டியும் உளவு வேலைக்கு ஆள்கள் தேவைப் படுகிறார்கள். குறிப்பாக பெண்கள். அவர்களுடைய பொறுமையும், அழகும், வசீகரமும் ஆண்களுடைய அறிவுச் சிந்தனைக்கு இடையே ஒரு தற்காலிக திரையையாவது விரித்து விடுகிறது. அதில் ஆண்கள் ஏமாந்து விடும் வினாடியில் உளவு வேலை வெற்றி !

அமெரிக்க உளவாளிகள் விர்ஜினியா ஹால், மரியா குலோ விச், இங்கிலாந்து உளவாளிகள் பிரின்சஸ் நூர், வயலட் ரெனி, எலிசபெத் புஷ் ஷெல், இத்தாலிய உளவாளி பார்பெரா லாவெர்ஸ், பிரான்ஸ் உளவாளி ஏமி எலிசபெத் தோர்பே போன்றவர்கள் இந்த உளவு வேலைப் பிரபலங்கள். உளவாளிகள் பட்டியல் இத்துடன் தீர்ந்து விடவில்லை ஜூலியா மெக் வில்லியம்ஸ், மர்லேன், மெக்கிண்டோஷ், மேரி லூயிஸ், நான்சி கிரேஸ் என நீளும் இந்தப் பட்டியல் பெரிது. உலகப் போர் வரலாற்றில் பெண் உளவாளிகள் எந்த அளவுக்கு பரவியிருந்தார்கள் என்பதற்கான மிகச் சிறிய அறிமுகமாக இதைக் கொள்ளலாம்.

அதெல்லாம் அந்தக் காலம், இப்போ அப்படியெல்லாம் இல்லை என்று நினைக்கிறீர்களா ? இப்போதும் பெண் உளவாளிகள் தங்கள் வேலையைக் காட்டிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

சமீபத்தில் அப்படி ஒரு வேலையைச் செய்து வசமாக மாட்டியிருக்கிறார். மாதுரி குப்தா எனும் 53 வயதான பெண். இஸ்லாமாபாத்தில் அமைந்திருக்கும் இந்தியத் தூதரக அதிகாரி. ஐ.பி.எஸ் படித்தவர். இவர் இந்தியாவின் ரகசியங்களை விற்றது பரம்பரைப் பகை வளர்க்கும் பாகிஸ்தானுக்கு!

பாகிஸ்தானில் உள்நாட்டு உளவுப் பிரிவு அதிகாரியான முடாசர் ராணாவுடன் நெருக்கமானார். எல்லாம் வர்த்தக நெருக்கம் தான். நெருக்கத்தை வேண்டுமென்றே உருவாக்கி, ரகசியங்களை விற்றிருக்கிறார் மாதுரி. இந்திய உளவுப் பிரிவுகளுக்கு அனுப்ப வேண்டிய அறிக்கைகளைப் பிரதியெடுத்து ஜஸ்ட் லைக் தேட் ராணாவிடம் கொடுத்து வந்திருக்கிறார்.

இந்த உளவு வேலைக்காக பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ இவருக்கு கொடுத்த கோடிக்கணக்கான ரூபாய்கள் பாகிஸ்தான் வங்கிகளில் பத்திரமாய் இருக்கின்றன. அவ்வப்போது தனது இந்திய வங்கிகளுக்கும் அந்தப் பணத்தை அனுப்பி தேசப்பற்றைக் காப்பாற்றுகிறார்!

உளவாளிகள் பொறுமைசாலிகள். எல்லாவற்றிலும் கச்சிதமாக சந்தேகம் வராதபடி நடந்து கொள்வார்கள். அவர்களைப் பிடிக்கச் செல்பவர்கள் அதைவிட புத்திசாலிகளாக, பொறுமைசாலிகளாக இருக்க வேண்டும்.

அப்படித்தான் நடந்து கொண்டது இந்திய அரசு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சந்தேக வலையில் விழுந்தது பட்சி. ஆனால் சந்தேகத்தைக் கொஞ்சமும் வெளிக்காட்டாமல் வெகு இயல்பாய் கண்காணித்து வந்தனர். இரண்டு ஆண்டுகள் நிழல் போல் தொடர்ந்து, அவர் உளவாளி என்பதை உறுதிப்படுத்தினார்கள். அதன்பின் வேலை விஷயமாக என்று சொல்லி டெல்லி அலுவலகம் வர வைத்தனர். அங்கே வந்த பின்புதான் அவருக்குத் தான் மாட்டிக் கொண்டோம் எனும் விஷயமே புரிந்தது.

''என்னைப் போய் உளவாளி என்று சொல்லுறீங்களே, இஸ்லாமாபாத் றோ பிரிவு தலைவர் ஷர்மாவே ஒரு பாகிஸ்தான் உளவாளி'' எனக் கூறி ஒரு திடுக்கிடலையும் உருவாக்கினார் இவர். அவர் மீதும் விசாரணை நடக்கிறது.

இன்றைய நவீன யுகத்தில் பெரும்பாலான உளவு வேலைகளை இயந்திரங்களே கவனித்துக் கொள்கின்றன. ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன், டிராகன் பிளை எக்ஸ்.6 ஒரு உளவுக் கருவி. சின்னத் தும்பி போல இருக்கும். எதிரியின் கோட்டைக்குள் பறந்து திரிந்து அங்கே நடப்பதைப் படம் பிடித்து அனுப்பும். அங்கே நடக்கும் உரையாடல்களையும் அது கடத்தும். இதே போல உளவு கருவிகள் நாடுகளிடம் இருக்கின்றன.

இந்த நவீனங்களையெல்லாம் தாண்டியும் உளவு வேலைக்கு ஆள்கள் தேவைப்படுகிறார்கள்.

குறிப்பாக பெண்கள். அவர்களுடைய பொறுமையும், அழகும், வசீகரமும் ஆண்களுடைய அறிவுச் சிந்தனைக்கு இடையே ஒரு தற்காலிகத் திரையையாவது விரித்து விடுகிறது. அதில் ஆண்கள் ஏமாந்து விடும் வினாடியில் உளவு வேலை வெற்றி !

என்னதான் ராஜதந்திரம் என வர்ணித்தாலும், இந்த வேலை செய்து வாழ்க்கையை நகர்த்துவது பெண்மையைப் பெருமைப்படுத்துவது ஆகுமா ? என்பதை பெண்கள்தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ★


# பொலிஸாரின் பாராமுகம்

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக தனியார் பேருந்துகள் விபத்துக்குள்ளாகி வருகின்றன. இதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும் பொலிஸார் அவர்களது கடமைகளை ஒழுங்காகச் செய்ய மறுப்பதே இந்த அதிகரித்த விபத்துகளுக்கு பிரதானமான காரணமாகின்றது.

பொலிஸாரைப் பொறுத்த வரையில் கடமையில் ஏனோதானோவென்று நின்று விட்டுச் செல்கின்றனர். போக்குவரத்து ஒழுங்குவிதிகளை கடுமையாக நடைமுறைப்படுத்த அவர்கள் முனைப்புக் காட்டுவதில்லை.

இத்தனை விபத்துக்கள் நிகழ்ந்த பின்னரும், விபத்துகளில் உயிர்கள் பறிக்கப்பட்ட பின்னரும் அவர்கள் தங்களது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முன்வரவில்லை. மாறாக லஞ்சங்களை வாங்கி தங்களது ''பை''களை நிரப்பவே முயலுகின்றனர்.

தனியார் பஸ்கள் அளவுக்கு அதிகமாக பயணிகளை ஏற்றுவது தொடர்பில் பலமுறை பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றும் பஸ்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கின்றனரே தவிர செயலில் எதுவுமில்லை.




தற்போது பிரதான வீதிகளில் திருத்தங்கள் நடைபெற்று வருவதால் பஸ்கள் சரிவாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பேருந்துகள் கவிழக் கூடிய நிலை தோன்றுகின்றது. அளவுக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்படுவதால், பஸ்கள் கவிழ்ந்தால் அதில் பயணம் செய்யும் அனைவரினதும் நிலை கேள்விக் குறியே.

பொலிஸார் வீதிக்கு வீதி கடமையில் நிற்கின்றனர். ஒவ்வொரு சந்தியிலும் பஸ்ஸில் அளவுக்கு அதிகமானவர்கள் செல்வதையும் ஏன் மிதிபலகையில் நிற்பதையும் கண்டும் காணாமல் இருக்கின்றனர். சில பொலிஸார் இவ்வாறான பஸ்களை மறித்ததும், நடத்துநர் ஓடிச் சென்று பொலிஸாரின் கைக்குள் லஞ்சத்தை செருகியதும் பொலிஸார் பஸ்ஸை அப்படியே தொடர்ந்து பயணிக்க விடுகின்றனர்.

அந்த பஸ் விபத்துக்குள்ளானால் அல்லது கவிழ்ந்தால் யார் பொறுப்பு. எனவே பொலிஸாரால் குற்றவாளிகளைத்தான் தேடிக் கண்டுபிடிக்க சிரமமாக இருக்கின்றது. கண்ணுக்கு முன்னால் திரியும் இந்தக் குற்றவாளிகளையாவது பிடித்து தண்டியுங்கள்.

-நக்கல் நரசிம்மன்.

# உதயனை விமர்சியுங்கள்

பக்கச் சார்பின்றி நடுநிலைமை கொண்டு செய்திகளை வெளியிடும் உதயனில் முழுமையான செய்திகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

அரச தரப்பான, இராணுவ தரப்பான, பொலிஸ் தரப்பான அவர்களுக்கெதிரான செய்தியாக இருந்தாலும் வெளியிடும் துணிச்சலை உதயனில் பார்க்கிறேன். தமிழ் மக்களின் காவலனாக நீ இருப்பதால் அரச பக்கம் வால் பிடிப்பவர்கள் உனது நேர்மை கண்டு தூற்றுகின்றனர். கடைசியில் வெட்கிப் போய், தலை குனிந்து நிற்கின்றனர்.

உனது வளர்ச்சி தமிழ் மக்களின் விடுதலைக்கான தேடல். அதில் நீ சலிப்படையாமல் மேன்மேலும் முன்னேற வேண்டும்.

உதயன் பக்கங்களில் தரமான கருத்துக்களை நீ கொண்டு வருகின்றாய். அது பாராட்டத்தக்கது. ஆனால் நவீன உலகின் வளர்ச்சிக்கு ஏற்ப உதயனையும் மாற்றி கலர் பக்கங்களாக வெளியிடுவாயா?

உதயனில் கலர் பக்கம் இல்லாதது தான் ஒரு குறையாக என்னால் பார்க்க முடிகிறது. விரைவில் கலர்ப்பக்கங்களில் உதயனை வெளியிடுவாயானால் யாழ்ப்பாணத்தில் மட்டும் அல்ல, வடபகுதியில் கொடிகட்டிப் பறப்பாய் என்பது உண்மை. இது எனது விருப்பம் மட்டுமல்ல. பலரது விருப்பமுமாகும்.

ரமேஷ், வல்வெட்டித்துறை

★ ★ ★

25 வருடங்களாக உதயனைப் பார்த்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் வியப்படைகிறேன். அந்தளவுக்கு செய்திகளையும், கருத்துக்களையும் தகவல்களையும், உடனுக்குடன் வெளியிடும் திறமை உன்னிடம் உள்ளது. அதனால்தான் என்னவோ உதயனைப் பார்க்காமல் ஒருநாளும் கழிந்ததில்லை.

பல பிரச்சினைகள் துன்பங்களுக்கு எல்லாம் முகம் கொடுத்தும், துவண்டு விடாமல் வீறுநடை போடுகிறாய் என்பது தமிழன் வரலாற்றில் உதயனுக்கு ஓர் இடம் இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது.

ஆயுத முனையிலும் உன்னை அழிக்கப்பார்த்தார்கள். ஆனாலும் முடியவில்லை. சம்பவம் இடம்பெற்ற மறுநாளே நீ வெளிவந்தது உலகத்தில் எந்த ஓர் இடத்திலும் இடம்பெறாத செயற்பாடாகும்.

எனவே இனிவரும் காலங்களிலும் எந்த சம்பவங்கள் இடம்பெற்றா லும் உனது வளர்ச்சியில் பாதிப்பு ஏற்படாது என்பது உண்மை.

எனவே விருப்பு, வெறுப்புக்களைத் தாண்டி சிறந்த கருத்துக்களை முன்வைப்பதில் நீ அயராது ஈடுபட வேண்டும். இதையே எமது சமூகமும் எதிர்பார்க்கிறது. தொடர்ந்தும் இதே பணியினைச் செய்வாய் என்று நாம் நம்புகிறோம்.

ரதி,
துன்னாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆயுளை அதிகரிக்கும் உணவுப் பழக்கம்

ஆயுளை அதிகரிப்பதற்காக நாம் உணவுகளை உட்கொள்கிறோம். ஆனால் எமது சமகால உணவுமுறை ஆயுளைக் குறைக்கும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுவது கவலைக்குரிய விடயமே. எமது உணவு முறையும் உணவு வகைகளும் உடல் எடையை அதிகரிக்கக் கூடிய தன்மை உடையதாகக் காணப்படுவதை மக்கள் அறியாமல் இருப்பது வேதனைக்குரியது. சமகாலத்தில் உடற்பருமன் அதிகரித்தவர்களது எண்ணிக்கையும் உயர்வடைந்து வருகின்றது. ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான மக்கள், அதிகரித்த உடல் நிறை காரணமாகவும், அதனால் ஏற்படும் விளைவுகள் காரணமாகவும் இறந்துகொண்டு இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

அதிகரித்த உடல் நிறை மனிதனுடைய ஆயுளைக் குறைவடையச் செய்வதுடன் மாரடைப்பு, உயர்குருதி அழுத்தம் மற்றும் இதயநோய்கள், பாரிசவாதம், நீரிழிவு, கொலஸ்ரோல் அதிகரிப்பு, எலும்பு மூட்டுகள் தொடர்பான நோய்கள், சுவாசம் தொடர்பான நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

எனவே இவ்வாறான நோய்களைக் கட்டுப்படுத்தி, எமது ஆயுளை






அதிகரித்து சுகவாழ்வு வாழ்வதற்கு உண்ணும் உணவுமுறை முக்கியமான பங்கை வகிக்கிறது. இதனைக் கருத்தில் கொண்ட யாழ்போதனா வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சை நிலையம், ஆண்டு தோறும் சமையல் போட்டிகளை மக்களிடையே நடத்தி வருகின்றது. இங்கு புதுவகையான உணவுகள் அறிமுகப்படுத்தப்படுவதுடன், காபோவைதரேற்று குறைந்த புரதச் சத்துக் கூடியவையாகவும், எண்ணெய் பாங்கான பொரித்த உணவுகள் தவிர்க்கப்பட்டும் சம போசனை ஆன உணவுகள் அறிமுகப்படுத்தப் படுகின்றது. இப்படியான கட்டுப்பாடுகளுடன் தயாரிக்கப்படும் உணவுகள் சுவையாக இருக்குமா என்ற வினா மக்களிடையே தோன்றலாம். ஆனால் பலநூற்றுக்கணக்கான சுவைஞர்கள் சுவைத்துப் பார்த்து அந்த உணவுகளின் ''சுவையோ சுவை'' என்று கூறி இருப்பது மக்கள் மத்தியில் அந்தச் சந்தேகத்துக்கு இடமின்றிப் போகின்றது.

இங்கு புதிதாக அறிமுகப்படுத்தப்படும் உணவுகள் நீரிழிவு நோயாளர்கள், இரத்த அழுத்தம் உடையவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்கள், உடற் பருமனானவர்கள் போன்றவர்களுக்கு மிக ஏற்றதாகக் காணப்படுகிறது. நோயாளர்களுக்கு என்று இல்லாது சாதாரணமானவர்களும் இந்த உணவு வகைகளை உள்ளெடுக்கலாம். இதனால் நோயற்றவர்களும் உடல் நிறையைக் குறைக்க அல்லது எடை போடாமல் இருக்க, நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள ஏற்றதாக இருக்கும்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இந்தச் சமையல் போட்டி நடைபெற்றது. இங்கு அறிமுகப்படுத்தப்பட்ட உணவுகள் 6 பிரதான வகைகளாக வகைப்படுத்தப்பட்டன. அவையாவன:

1.பிரதான உணவுகளில் சைவ உணவு
2. பிரதான உணவுகளில் அசைவ உணவு
3. சிற்றுண்டிகளில் சைவ உணவு
4. சிற்றுண்டிகளில் அசைவ உணவு
5. பானங்கள்
6. உலர் உணவுகள்

இந்த உணவுகளில் அரிசி, கோதுமை, கடலை, எள்ளு போன்ற தானியங்கள் தவிர மற்றையத் தானியங்கள் பயன்படுத்தப்பட்டன. மரக்கறி வகைகளில் மரவள்ளிக்கிழங்கு தவிர்க்கப்பட்டு ஏனைய மரக்கறிகள் பயன் படுத்தப்பட்டன. மாம்பழம், பலாப்பழம், பேரீச்சம் பழம் போன்ற பழங்கள் தவிர்க்கப்பட்டு ஏனைய பழவகைகள் சேர்க்கப்பட்டன. அசைவ உணவில் கோழி இறைச்சி சேர்க்கப்பட்டது. ஏனைய இறைச்சி வகை தவிர்க்கப்பட்டிருந்தது. நண்டு, கணவாய் தவிர ஏனைய மீன்வகைகள் உள்ளடக்கப்பட்டன.

இப்படியான உணவு வகைகளைக் கொண்டு தயாரிக்கும் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, கொழும்பு போன்ற இடங்களைச் சேர்ந்த 80 போட்டியாளர்கள் கலந்துகொண்டு 127 வகையான சிறந்த உணவுவகைகளைத் தயாரித்து அறிமுகப் படுத்தினர். இதில் மாணவர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களும் பங்குபற்றினர். போட்டியாளர்களில் ஆண்கள், பெண்கள் என இருபாலாரும் உள்ளடங்கி இருந்ததைக் காணக் கூடியதாகவும் இருந்தது.

இந்தப் போட்டிக்கு நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினர் 6 நடுவர்களைத் தயார்ப்படுத்தி இருந்தனர். இவர்கள் பல்வேறு தரப்பினராகக் காணப்பட்டதுடன், பொதுமக்களுக்கும் உணவுவகைகளைச் சுவைக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமை மக்களும் வாக்களித்துப் போட்டியாளர்களைத் தெரிவு செய்தனர்.

127 உணவு வகைகளுக்கு 2400 வாக்களிப்புகள் ஊடாக சிறந்த உணவுகள் தெரிவு செய்யப்பட்டதுடன் அவற்றிற்குப் பரிசுகளும் கிடைக்கவுள்ளன.

முதலாம் இடம் பெற்றவருக்கு 15 ஆயிரம் ரூபா பெறு மதியான பொருள்களும் 2 ஆம் இடம் பெற்றவருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் 3 ஆம் இடம் பெற்றவருக்கு 5 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கப் படவுள்ளதுடன், பங்குபற்றிய அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்குகொண்ட பிரதான ஆறுவகையான உணவுவகைகளில் தலா ஒவ்வொன்றிலும் ஆறு வகையான உணவுகள் என மொத்தம் 36 வகையான சிறந்த உணவு வகைகளை உள்ளடக்கி ''நல்லதோர் உணவு செய்வோம்'' என்ற நூல் வெளிவரவுள்ளது மேலும் சிறப்பம்சமாக உள்ளது. இந்தப் புதுவகையான உணவுகள் தயாரிக்கும் முறை உள்ளடங்கிய படங்களுடன் மிகவும் அழகாக மக்களுக்குப் பயனுள்ள வகையில் இந்த நூலை, அடுத்து வரும் வாரங்களில் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினர் வெளியிட உள்ளனர். எனவே மக்கள் இந்த நூலைப் பெற்று வீடுகளில் இந்த உணவு வகைகளைத் தயாரித்து சுகவாழ்வு வாழ முடியும்.

உணவகங்களிலும் இப்படியான உணவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு அங்குள்ள விளம்பரப் படங்களிலும் மெனு (menu)களிலும் இந்த வகை உணவுகள் இடம்பெறுமானால் மக்கள் வாழ்வு மேம்பாட்டை காட்டும் ஒரு குறிகாட்டி என எடுத்துக் கொள்ளலாம். அத்துடன் உணவகங்களுக்கு சுகாதாரத் திணைக்களம் வழங்கும் தரப்படுத்தல் சான்றிதழ்களுக்கு இப்படியான உணவுகளை விற்பனை செய்தால் மேலதிக புள்ளிகளை வழங்கி ஊக்குவித்து மக்கள் வாழ்வை மேம்படுத்தலாம்.

நல்லதோர் உணவு செய்வோம் என்ற நூலை யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தில் பெறக் கூடியதாக இருக்கும். மற்றும் இந்த நூலின் விற்பனை மூலம் பெறப்படும் பணம், இப்படியான மக்களின் விழிப்பூட்டல் நடவடிக்கைகளுக்கே பயன்படுத்த இருப்பதாகவும் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். இது வரவேற்கத்தக்க முயற்சியே.

இன்றைய மக்களின் நடத்தைக் கோலத்தில், அதுவும் உணவுப் பழக்க வழக்கத்தில் அவர்களை அறியாமலே அவர்கள் விழுந்து மூழ்கிக் கொண்டு இருக்கையில் இப்படியான நூல் அவர்களைக் கை கொடுத்து தூக்கும். பார்க்கலாம்.




# குடும்ப உறவில் நாம்..

குடும்ப உறவுகள் என்பது நமக்கு அன்பையும், பாதுகாப்பையும் சமூக அந்தஸ்தையும் தரக் கூடியவை. இந்த உறவுகள் அருகில் இருக்கும்போது அதன் அருமை பலருக்கும் புரிவதில்லை. கோப தாபங்களுடன் சற்று விலகும்போதுதான் அது தரும் வெறுமையை உணர்வார்கள். நம்மைச் சுற்றியிருக்கும் உறவுகளை அரவணைத்து செல்வது என்பது பெரிய விஷயம்.

ஆனாலும், அதை செய்துதான் ஆக வேண்டும். அதிலும் குறிப்பாக, குடும்ப உறவுகளைப் பாதுகாப்பது என்பது நம்முடைய கடமைகளில் ஒன்று. ஏதோ ஒரு சமயத்தில் எதற்காகவோ நம்மையும் அறியாமல் பேசிவிடும்போது உறவுகள் சிதைக்கப்படுகின்றன. அப்போது மற்றவர்களின் மனதில் அவநம்பிக்கை ஏற்படுகிறது.

நாளடைவில் அது விரிசல் அடைந்து குடும்ப உறவுகளை பாதிக்கிறது. ''இப்படி விரிசல் அடைந்த உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்ளவும், நெருக்கமாக இருக்கும் உறவுகள் விரிசல் ஆகாமலும் இருக்க பிறந்தநாள், திருமணநாள் மற்றும் மதம் சார்ந்த கொண்டாட்டங்கள் கைகொடுக்கும்'' என்கிறார்கள், மன நல ஆலோசகர்கள்.

அந்த நாள்களில் உறவினர்கள் ஒன்று சேரும் போது, உறவுகள் புதுப்பிக்கப்படுகின்றன. அந்த தருணங்களில் பரி மாறிக்கொள்ளப்படும் பரிசுகள் நாம் அவர்களை நினைவில் வைத்திருக்கிறோம் - அவர்களை முக்கியமானவர்களாகக் கருதுகிறோம் என்பதற்கு அத்தாட்சியாகிறது. சிலர் வயதாகி விட்டதால் பிறந்த நாள் கொண்டாட்டம், திருமண நாள் கொண்டாட்டம் போன்றவை அவசியம் இல்லை என்று நினைக்கிறார்கள்.

வயதான பிறகு கொண்டாடுவதுதான் ஆத்மார்த்தமான உறவுகளை இணைக்கும் பாச நிகழ்வுகளாக இருக்கும். வயதில் பெரியவர்களின் உணர்வுகளை எவருமே புரிந்துகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அந்தக் குற்றச் சாட்டுகளைத் தவிர்க்க அவர்களுக்காகவாவது கொண்டாட வேண்டும்.

அத்தகைய சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விடாதீர்கள். பிரபலங்கள் கொண்டாடும் பிறந்த நாள் நிகழ்ச்சிகளுக்கும், சாதாரணமானவர்கள் கொண்டாடும் நிகழ்ச்சிகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. பிரபலங்கள் மக்களைக் கவரவும், தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளவும் அதனைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். சிலர் அப்போது பணத்தையும் வசூலித்து விடுகிறார்கள்.

அவற்றையெல்லாம் கூட நியாயப்படுத்திப் பார்க்கும் மக்கள் வீட்டிலுள்ள உறவுகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவது வீண் செலவு என்று நினைக்கிறார்கள். கொண்டாட்டங்களில் மகிழ்ச்சியை அதிகரிக்கும் கருவியாக இருப்பது பரிசுகள். ஒருவரைக் குதூகலப்படுத்தவும், அவர்களை நாம் முக்கியமானவராக கருதுவதைத் தெரியப்படுத்தவும் பரிசுகள் உதவுகின்றன.

பரிசு சிறியதாக இருந்தாலும் அது பெரிய அளவில் அன்பை வெளிப்படுத்தும். பரிசுகள் மூலம் அன்பு அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டால்தான் மன வேற்றுமைகள் உருவாகாமல் இருக்கும். ஒற்றுமை வலுப்படும். இப்போதெல்லாம் பரிசுப் பொருள்களுக்கென்றே தனியாக கடைகள் வந்துவிட்டன. அந்த அளவுக்கு மக்கள் பரிசுப் பொருள்களை வாங்குகிறார்கள்.

எல்லா கொண்டாட்டங்களுக்கும், எல்லா வயதினருக்கும் விலைக்கு தகுந்தபடி பரிசுப் பொருள்கள் கிடைக்கின்றன. நம் மனதிற்கேற்றதை வாங்கி மற்றவர்களை மகிழ்விக்கலாம். மற்றவர்களை மகிழ்விப்பது என்பது தேவ குணங்களில் ஒன்று. அத்தகைய குணம் நம்மிடம் இருக்குமானால் எல்லா நலன்களும் நமக்குக் கிட்டும் என்கிறது வேதம். அது உண்மைதான்.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை அடைவதை நினைத்து பெண்கள் கவலை

பெண்கள் முதுமை அடைவதை நினைத்து 29 வயதில் இருந்தே கவலைப்பட தொடங்குகின்றனர் என்கிறது சமீபத்திய ஆய்வு. சரும பராமரிப்பு லோஷன் தயாரிக்கும் லண்டன் நிறுவனம் ஒன்று 2 ஆயிரம் பெண்களிடம் கருத்துக்கணிப்பு மற்றும் ஆய்வை நடத்தியது. பெண்கள் மனதளவிலும், உடலளவிலும் முதுமையை எப்படி எதிர்கொள்கின்றனர் என்பது குறித்து இந்த ஆய்வு நடந்தது. அதில் தெரியவந்த தகவல்கள் பெரும்பாலான பெண்கள் இளம்வயதில் அதாவது 20 வயதுவரை முதுமை குறித்த சிந்தனை அறவே இல்லாமல் மகிழ்ச்சியாகவே உள்ளனர். 29 வயதுக்கு பின்னர் அந்த சிந்தனை அவர்களை ஆட்டிப்படைக்கிறது. தங்கள் கவர்ச்சியான தோற்றத்துக்கு பாதிப்பு ஏற்படுமோ என்ற கவலை மற்றும் சிந்தனை அதிகரிக்கிறது. சற்று கடினமாக இருந்தாலும், இந்த சிந்தனையைத் தவிர்ப்பதுதான் நல்லது. முதுமை தவிர்க்க முடியாதது என்பதை உணர்ந்து, அதை ஆரோக்கியமாக அணுகுவது எப்படி என்பது குறித்து சிந்திப்பது அவசியம். மாறாக முதுமை பற்றி கவலைப்படுவது மனம் மற்றும் உடல்நிலையை பாதிக்கும். முதுமை முன்கூட்டியே தாக்கும். இது ஆரோக்கியத்தைப் பாதித்து பல நோய்களை உண்டாக்கும். அதிக கொழுப்பு உள்ள உணவுகளைத் தவிர்த்து தினமும் உடற் பயிற்சி செய்தால் இது சாத்தியம். ஊட்டச் சத்துள்ள உணவு, தொடர் தியானம் மற்றும் உடற்பயிற்சி, நடைப்பயிற்சியுடன் அவ்வப் போது மருத்துவ பரிசோதனையும் செய்து கொண்டால் முதுமை கவலை, மன உளைச்சல்கள் இல்லாமல், ஆரோக்கிய வாழ்வு வாழலாம்.



## மாவட்ட சம்மேளனத் தலைவர் முதலியாருக்கு எமது அஞ்சலிகள்



யாழ்.மாவட்ட தேச வள விவசாயிகள் சம்மேளனத் தலைவர்-
தேசகீர்த்தி - விவசாயிகளின் தோழன் - விவசாயிகளின் தந்தை -

**உயர்திரு. சி.பொ.வ.மா.க.முதலியார் (ச.நீ.)**

அவர்களின் திடீர் மறைவுகேட்டு அதிர்ச்சி உற்றுள்ளோம்.
சம்மேளனத்தின் தலைவராக இருந்து வடபகுதி விவசாய மக்களுக்கு இலவசமாகப் பொருள்கள் பெற்று விநியோகித்து, தன்னாலான சேவைகளை மன முவந்து அளித்த பெருந்தகையாளன். மேலும் புன்னாலைக் கட்டுவனில் விவசாயிகளுக்கான களஞ்சியம் (Stores) அமைத்து சேவை செய்து வந்த மணிமகுடம் முதலியார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தேசவள விவசாயிகள் சம்மேளன நிர்வாகிகள், ஊழியர்கள். யாழ். மாவட்டம்.**

(சி/4172)(2.6.7)

# ஒற்றைத் தலைவலியை தோற்றுவிக்கக் கூடிய மிக்ரேயின்

தலையிடியை ஏற்படுத்தும் நோய்களில் பொதுவானது மிக்ரேயின் (migraine)ஆகும். இது ஆண்களைவிட பெண்களையே அதிகமாகத் தாகும். இளம் வயதிலேயே இது அதிகமாக ஏற்படும். வயது அதிகரிக்க இந்த நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் குறையும்.

இந்த நோயின் தன்மை,தீவிரம் என்பவை ஆளுக்கு ஆள் வேறுபாடும். அத்தோடு இந்த தாக்கம் ஏற்படும் இடைவெளியும் ஆளுக்கு ஆள் வேறுபாடும்.

அதாவது சிலருக்கு ஏற்படும் தலையிடி தீவிரமானதாக இருப்பதோடு அவர்களின் அன்றாடச் செயற்பாடுகளையும் பாதிக்கலாம். சில பேரில் பல வருடத்திற்கு ஒருமுறையே இந்த நோய் தாக்கும் அதே வேளை சிலருக்கு அடிக்கடி அத்தாக்கம் ஏற்படலாம்.

இந்த நோய் உள்ள சிலரை தலையிடி தொடங்குவதற்கு சில மணித்தியாலங்களுக்கு (24 மணித்தியாலம் வரை) சில மாற்றங்கள் ஏற்படலாம்.அவை Aura எனப்படும். அவை தலையிடி ஆரம்பிக்கிறது என்பதற்கான அறிகுறி என்று அவர்களால் உணரக்கூடியதாக இருக்கும்.

**அவ்வாறான மிக்ரேயினுக்கு முன் தோன்றும் அறிகுறிகள்,**

தாகம் அதிகரித்தல்
மனநிலை மாற்றம்
உடம்பிலே சக்தி கூடிய உணர்வு
பலவீனமான உணர்வு
பசியிலே மாற்றம் (கூடுதல்/குறையுதல்)

இவ்வாறு வேறுபட்ட உணர்வுகள் தலையிடி தொடங்குவதற்கு முன் எச்சரிக்கை உணர்வாக ஏற்படலாம். இவ்வாறான எச்சரிக்கை உணர்வோடு ஏற்படுகின்ற மிக்ரேயின் கிளாசிக்கல் மிக்ரேயின்(classical migraine) எனப்படும்.ஏனையவை common migraine எனப்படும்.

**மிக்ரேயினின் அறிகுறிகள்..**


தலையிடி
வாந்தி/வாந்தி வருவது போன்ற உணர்வு
பார்வை மங்குதல்
வெளிச்சத்தில் இருந்தால் தலையிடி கூடுதல்
குறிப்பட்ட சில பதார்த்தங்களின் மணம் வலியை அதிகரித்தல்
களைப்பாக உணர்தல்
வியர்த்தல்
குளிராக உணர்தல்..

ஒவ்வொரு தடவை மிக்ரேயின் தாக்கும் போதும் இது சில மணிநேரங்கள் தொடக்கம் மூன்று நாள்கள் வரை தொடரலாம்.

சில விடயங்கள் மிக்ரேயின் ஏற்படுவதைத் தூண்டலாம். ஆகவே எந்த விடயத்தால் மிகிரேயின் அதிகரிக்கிறதோ அதை நோயாளி தவிர்த்தல் வேண்டும்.

**நோயைத் தூண்டக் கூடிய விடயங்கள்.**

சிலவகை உணவுகள்
சில வகையான மணங்கள்,அதிகமான சத்தம், வெளிச்சம்
சில காலநிலை மாற்றங்கள்
அதிகரித்த வேலைப் பளு
புகைத்தல்
சில வாசனைத் திரவியங்கள்
போதிய உறக்கமின்மை
மாதவிடாய்
சாப்பாடுகளைத் தவற விடுதல்(நேரத்திற்கு சாப்பிடாமை)




CPM Certified Professional Marketer (Asia) Status

ஆசியப் பிராந்தியத்தில் சந்தைப்படுத்தல் துறையில் கல்வித் தகைமையில் குறிப்பிடத்தக்க நிலை மற்றும் செயல்முறை நல்விளக்கம் என்பனவற்றை ஏற்கெனவே பெற்ற சந்தைப்படுத்தல் அதிகாரிகளின் தொழில் ரீதியான நிலைமைக்கான உத்தியோகபூர்வ அங்கீகாரமே CPM (Asia) ஆகும்.

இந்தத் தொழில் ரீதியான அந்தஸ்து AMF னால் வழங்கப்பட்டு, ஆசிய நாடுகளின் தேசிய சந்தைப்படுத்தல் அமைப்புக்களினால் ...

தகைமை

SLIM PGDip, CIM (UK) இன் தகைமை பெற்றவர்களும், பொருத்தமான சந்தைப்படுத்தல் பிரிவில் பட்டம் பெற்றவர்களும் ஊிஆ பரீட்சைகளுக்குத் தோற்றத் தகுதியுடையவர்களாவர்.

SLIM Sri Lanka Institute of Marketing
SLIM Home: 0112 675 000
No 94, Ananda Rajakaruna Mw, Colombo 10
Web: www.slim.lk | Email: customercare@slim.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org